KALKI 1-7-79
75 காசு

கல்கி



வாஸந்தி எழுதும்
யுகங்கள் மாயும் போது...
தொடர்கதை ஆரம்பம்

மிகச் சிறிய விஷயங்கள்தான் எங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பினை அளிக்கின்றன.

ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்களின் முன்னோடிகளான சுந்தரம்-கிளேட்டனுக்கு பாதுகாப்பு என்பது ஒரு அர்த்தமற்ற உறுதிமொழி அல்ல. எங்கள் சாதனங்கள் முழுமையான பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதற்கேற்ப உருவாக்கப்பட்டவை.



ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பெற்றோர்கள் அவர்களுடைய அன்புச் செல்வங்களைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர் — வர்த்தக வண்டிகளில் பொருந்தியுள்ள பாதுகாப்பு சாதனங்களில் நம்பிக்கை வைத்தே.

இந்த பாதுகாப்புச் சாதனங்களை உருவாக்கிய நாங்கள் பெருமிதமடைவது இயற்கைதானே. இருந்தபோதிலும் இது ஒரு மிகப் பெரிய பொறுப்பு. முழுமையான காற்று மற்றும் காற்று-உதவி பிரேக் சாதனங்களின் ஒவ்வொரு சிறிய உறுப்பினையும் மிகவும் நுணுக்கமாகக் கவனிக்கிறோம். இதனால்தான் அனேகமாக ஒவ்வொரு ஹெவி-ட்யூடி வர்த்தக வண்டியிலும் எங்களுடைய ஏர்-பிரேக் ஆக்சுவேஷன் சாதனங்கள் அசல் உறுப்புகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இது ஒரு அத்யாவசியமான தேவையும்கூட.

உங்கள் பாதுகாப்பிற்கு எங்கள் உத்திரவாதம்

தொடர்ச்சியான ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் தரக்-கட்டுப்பாடு — இவைகள் முழுமையான பாதுகாப்பினை அளிக்கும் ஒரு பிரேக் சாதனத்திற்கு வித்திடுகின்றன.

நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றோம் — அதனைப் பாதுகாக்கவும்

CD-TVS' அளிக்கும் முழுமையான காற்று மற்றும் காற்று-உதவிகொண்ட பிரேக் சாதனங்களின் உறுதியான பாதுகாப்பு எப்பொழுதும் உங்களுக்குக் கிடைப்பதற்கு உங்கள் சாதனத்தை முறையாகப் பராமரியுங்கள், மற்றும் எப்பொழுதும் அசல் CD-TVS உறுப்புகளையே வாங்கி உபயோகியுங்கள். இதனை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறோம்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பாடி, சென்னை 600 050


உங்கள் பாதுகாப்பு எங்கள் தொழில்

CD TVS

SAA/SCL/2588

அத்தி வரதர்

நாற்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை தரிசனம்!



கோயில் மூலஸ்தானப் படிமத்தை மூன்று விதமாகச் செய்யலாம். மரத்தால் கல்லால் அல்லது சுதை என்ற சுண்ணாம்பால். அத்தி மரத்தில் ஆனவர்தான் அத்திவரதராஜர். சின்ன காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள இவர், நாற்பது வருடங்களுக்கு ஒரு முறைதான் அனந்தசரஸ் புஷ்கரணி என்ற அக்கோயிலின் குளத்திலிருந்து வெளியே எடுக்கப் படுகிறார்! அத்திமரத்தால் ஆன படிமம் எப்பொழுதும் குளுமையாக வெயில் படாத இடத்தில் இருக்க வேண்டுமென்பதாலும் இவர் குளத்திலேயே இருப்பதாகச் சொல்கிறார்கள்.

இன்னொரு ஐதிகமும் உண்டு. பதினேழாம் நூற்றாண்டில் மொகலாயரின் படை எடுப்பினால் பயந்து யாருக்கும் தெரியாமல் ஒருவர் அனந்தசரஸ் புஷ்கரணியில் விக்கிரகத்தை மறைத்து வைத்தார் என்று கருதப்படுகிறது. இது விஷயம் மறைத்து வைத்த ஒருவருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அவரும் மொகலாயர் படையெடுப்பின் காரணமாய்ச் சிதறிப் போனார். கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, வரதரைப் பற்றி எல்லாருமே மறந்திருந்த நேரத்தில, பக்தன் ஒருவன் கனவில் அவர் தோன்றி, ''நான் தண்ணீருக்குள் இருக்கிறேன். என்னை வெளியே எடுத்து மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். ஒரு மண்டலமான நாற்பத்தெட்டு நாட்களுக்குப் பிறகு மறுபடியும் என்னைக் குளத்தில் வைத்துவிட வேண்டும். சுமார் நாற்பது வருடங்களுக்கு ஒரு முறைதான் என்னை வெளியே எடுக்க வேண்டும்'' என்பது போல் ஆணையிட்டார். அதன்படியே அனந்தசரஸ் புஷ்கரணியில் உள்ள மூலவர் 18-6-1854, 13-6-1892 12-7-1937 ஆகிய தினங்களில் வெளியில் எடுக்கப் பெற்று வஸந்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளார். ஆரத்தியோ அர்ச்சனைகளோ கிடையாது. மண்டல ஆராதனை ஆனபிறகு மீண்டும் புஷ்கரணியில் தம்மை ஆழ்த்திக் கொள்கிறார்.

வரும் ஜூலை மாதம் 2-ம் தேதி மீண்டும் குளத்திலிருந்து அவர் வெளியே எழுந்தருளப் போகும் நன்னாள்.

''சக்திதரன்''



மேலே: வரதராஜர்

கீழே: கோயில் விமானம்

Kalki Shopping Page

HMV STEREO 1515



Rs 2358/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes Extra.


HMV STEREO SYSTEMS

Available at:

GANA VIHAR,
106, Trade Centre,
93, Wallajah Road,
Madras-600 002 Phone: 842747

HMV fiesta popular

HMV



India's largest selling record player.

Max. rec. retail price Rs 485 including excise duty. Local taxes extra.

Authorised Dealers

VELTRONICS,
40/7, Sydenhams Road,
Ripon Bldgs Compound,
Madras-600 003 Phone: 662462

supertrack 230

The professional stereo player



Rs 1027 plus taxes


Sophisticated Pick-up Arm
Magnetic Cartridge with
Diamond Stylus
Hydraulic Cueing · Floating Sub-chassis

HMV His Master's Voice

Available at:

DOSS,
W-109, III Avenue,
Anna Nagar,
Madras-600 040 Phone: 614063

HMV STEREO 1010



Rs 1393/-
Max. Rec. Ret.
Price incl.
Excise Duty.
Taxes extra.

HMV STEREO SYSTEMS

Available at:

INTERNATIONAL TRADERS,
183, Broadway,
Madras-600 001 Phone: 22592
76, Royapettah High Road,
Madras-600 004

Kalki Shopping Page

Kalki Shopping Page



அச்சில் வராத பெயர்!

— கமல்

தம்முடைய பெயரும் படமும் பத்திரிகையில் வர வேண்டும் என்பது எழுத்தாளர் ஏகாம்பரத்தின் தணியாத ஆசை. இதற்காக அவர் சமீபத்தில் எடுத்துக் கொண்ட (தோல்வியுற்ற) சில முயற்சிகள் :

● தம்முடைய படத்துடன், வயது (54) போன்ற விவரங்களை ஒரு பத்திரிகைக்கு அனுப்பி ''வரதட்சணை வாங்க மாட்டேன்'' என்று எழுதியிருந்தார்.

● கேள்வி-பதில் பகுதிக்கு, ''ஜெயமாலினி நடனம் சிறந்ததா? ஜெயகுமாரி நடனம் சிறந்ததா'' என்று எழுதிப் போட்டுப் பார்த்தார். ஒரு ஆசிரியரும் பதிலளிக்கவில்லை.


● பத்திரிகைகளில் கதை, கட்டுரை எழுதுபவர்களின் புகைப்படத்தை வெளியிடுவதைப் போல், 'ஆசிரியர் கடிதம்' எழுதுபவர்களின் கடிதத்துடன் — இந்தக் கடிதம் உட்பட — அவர்களின் புகைப்படத்தையும் வெளியிட வேண்டும் என்று எழுதினார். பலனில்லை.

● பேட்டிக்கு வருபவர்களோ புகைப்படம் எடுக்க வருபவர்களோ முன் கூட்டியே அனுமதி பெற்றுவர வேண்டும் என்று அறிவித்தார். அவருடைய திரும்பிவரும் கதைகளைக் கொண்டு வரும் தபால்காரர் கூட ஒரு வாரம் அவர் வீட்டை அண்டவில்லை.

● 'ஆங்கில எழுத்துக்கள் இருபத்து ஆறையும் உபயோகித்து எழுதப்பட்ட The Quick Brown Fox Jumps over the lazy Dog என்ற வாக்கியத்தைத் தங்கள் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறீர்கள். உலகில் எந்தப் பத்திரிகையிலும் வராத புதுத் தகவல் இது' என்று ஓர் ஆசிரியருக்கு எழுதினார். அதை வெளியிட்டார்கள். ஆனால் இவர் பெயரைப் போடாமல், 'ஒரு விஷயமறிந்த வாசகர் பாராட்டுகிறார்' என்று எழுதி விட்டார்கள்.

● 'எழுத்தாளர்களின் மீது அடக்கு முறை செய்யாதே' என்று அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களை அசெம்பிளியில் வீசினார். இந்தச் செய்தி பத்திரிகையில் வரும்போது இவர் பெயர் ஏ. தாம்பரம் என்று தவறாக அச்சாகி இருந்தது.!

● 'ஆடு வதை தடை செய்யும் வரை உண்ணாவிரதம்' என்று அறிவித்தார். விநோபா ஸ்டைலில், பத்திரிகைகளில் ''ஆடு வதைத் தடை செய்யும் வரை உண்ணாவிரதமாம்! இதனால் எல்லாம் காபரே நடனங்களை யார் நிறுத்தப் போகிறார்கள்? சுத்த பைத்தியக் காரத்தனம்!'' என்று பத்திரிகைகள் கமெண்ட் அடித்திருந்தன!





சிவகுமார்

1–10

காக்கும் கரங்கள்: இதுதான் எனது முதல் படம். ஓவியக் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த சமயம். எனக்கு அப்பொழுதே முருகன் சகோதரர்களையும், இயக்குனர் ஏ. வி. திருலோகசந்தரையும் தெரியும்.. என்னை நடிக்க வைக்க வேண்டுமென்று முடிவு செய்த பிறகு எனக்கும் நடிகை ரமாபிரபாவுக்கும் மேக்கப் டெஸ்ட் நடத்தினார்கள். ஏ.வி. எம். சகோதரர்கள் என்னிடம் நான் வரைந்த ஓவியங்களைக் காட்டச் சொன்னார்கள். ஆனால் நானோ படம் முடியும் வரை அவர்களுக்கு ஓவியத்தைக் காட்டவேயில்லை. படம் முடிந்து பூசணிக்காய் உடைத்த பிறகு ஒரு நாள் என்னுடைய ஓவியங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு திரு சரவணன் அறைக்குச் சென்றேன். அவருக்கும் காட்டினேன். கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அத்தனை ஓவியங்களையும் ரசித்துப் பார்த்த பிறகு அவர்கள் ''இவ்வளவு திறமை மிக்க ஓவியராக இருந்து கொண்டு நடிக்க ஏன் வந்தீர்கள்?'' என்று கேட்டார்கள். நான் சொன்னேன்: ''இதே கேள்வியை ஆரம்பத்தில் கேட்டு எனக்கு நடிக்கச் சந்தர்ப்பமளிக்காமல் அனுப்பி விடுவீர்கள் என்று பயந்து தான் படப்பிடிப்பு முடியும் வரை காட்டவில்லை!''

முதல் நாள் மேக் அப் டெஸ்ட் முடிந்தவுடன் ஓவியக் கல்லூரிக்குத் திரும்பினேன். என்னைப் பார்த்த ஆசிரியர் ஒருவர், ''என்னப்பா நடந்து வர்றே? கார் எங்கே?'' என்றார். நான் சினிமாக்காரன் ஆவதை அவர் நாசுக்காகக் கிண்டல் செய்த விதம் என் நெஞ்சில் குத்தியது. 'நடிகனுகிக் கார் வாங்காமல் கல்லூரிக்குள் நுழைவதில்லை' என்று முடிவு செய்தேன். அதன் விளைவு முதல் வகுப்பில் தேறிய எனது டிப்ளமாவைக் கூட ரிஜிஸ்தர் தபாலிலேயே வாங்கினேன். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கார் வாங்கிய பின்பே கல்லூரிக்குச் சென்று வந்தேன்!

மோட்டார் சுந்தரம் பிள்ளை: திரு வாசன் அவர்கள் என்னைப் பார்த்தவுடன் "Are you from Andhra?" என்று வினவினார்.

"No Sir!" என்றேன்.

"Are you from Karnataka?"

"No Sir!"

⌘ முதல் படமான காக்கும் கரங்களில் சிவகுமார், ரேவதி



101



"Then you must be from Kerala !"
"No Sir, I am from Tamil Nadu"
"Then let us talk in Tamil" என்றார். தொடர்ந்து, ''சிவகுமார்னு நம்ம நடிகர்கள் யாரும் பேர் வைச்சுக்கறதில்லயேன்னு சந்தேகத்திலே கேட்டேன்'' என்று கூறிக் கதைச் சுருக்கத்தைச் சொன்னார். ''சிவாஜியோட (பெரிய நடிகர் என்ற தொனியுடன்) நடிக்கப் போறீங்க'' என்றார். ஒரு தொகையைக் குறிப்பிட்டு, ''இதுதான் சம்பளம். போதுமா? இன்னும் வேணுமா?'' என்றார். திகைத்துப்போன நான், ''இதுவே போதும்'' என்று தலையாட்டினேன்!

படம் முடிந்தவுடன் ''உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி'' என்று நடிக நடிகையர், தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகிய எல்லோருக்கும் கடிதம் அனுப்பியிருந்தார் வாசன்.

இந்தப் படத்தில் காதலிக்க நேரமில்லை புகழ் காஞ்சனாதான் எனது ஜோடி. அவர் ஏர் ஹோஸ்டஸாக இருந்தவர். நல்ல அழகு. ஏற்கனவே ஸ்ரீதர் படத்தைப் பார்த்துஅசந்து போயிருந்த நான், படப்பிடிப்பின் போது அவரோடு நடிக்க உண்மையிலேயே கூச்சப் பட்டேன்!

தாயே உனக்காக : இப்படத்தின் படப்பிடிப்பு பத்து நாட்கள் புத்தூரில் நடந்தது. எங்களைப் பார்க்க ரசிகர்கள் நாங்கள் தங்கியிருந்த வீட்டைச் சுற்றித் தினந்தோறும் அதிகமாகக் கூடினார்கள். படப்பிடிப்பு முடிந்தது. காலில் அடிபட்டு, புத்தூருக்கு பஸ்ஸில் சென்று பேருந்து நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி வரை சுமார் இரண்டு மைல் விந்தி விந்தி நடந்தே சென்றேன். ஒருவராவது திரும்பிப் பார்க்க வேண்டுமே? மூச்! இப்படத்தின் ஆரம்பத்தில் சுமார் 2000 அடிகளுக்குள் சிவாஜி இறந்து விடுவதாக வருகிறது. தமிழகத்தில் சில இடங்களில் சிவாஜியின் பாகம் இவ்வளவு சீக்கிரம் முடிவதை ரசிகர்கள் விரும்பவில்லை.

இந்த எதிர்ப்பைச் சமாளிக்க அவர் இறந்து போகும் காட்சியைமட்டும் வெட்டிக் கதையின் தொடர்புபற்றி கவலைப்படாமல் கடைசி ரீலில் சேர்த்து ஓட்டினர்! இந்தப் படத்தில் ராணுவ வீரன் பாகம் ஏற்றிருந்ததால் உஸ்மான் ரோடு சென்று பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை சலூனில் ராணுவ வீரன் போல் என் தலைமுடியை ''ஷார்ட்'' ஆக வெட்டிக் கொண்டேன்!

சரஸ்வதி சபதம்: எனக்கு முருகன் வேடத்துக்குத்தான் மேக் அப் டெஸ்ட் நடந்தது. ஆனால் நான் நடித்ததென்னவோ மஹாவிஷ்ணு வேடத்தில்! எனக்கு ஜோடி யார் தெரியுமா? என்னைவிட மிகமிக ஸீனியர் ஆன தேவிகா! இந்தப் படத்தில் நீல நிற ஒப்பனை கலைந்து விடக் கூடாது என்பதற்காகத் தனியே எனக்கு ஒரு மின்விசிறி கொடுத்திருந்தார்கள். நமக்கென்று பிரத்தியேக ஃபேன் என்ற போது என்ன சந்தோஷம் அடைந்தேன் தெரியுமா?


கந்தன் கருணை: இப்படத்தில் திரு ஏ.பி. என். அவர்களின் தமிழ் பல இடங்களில் என்னைச் சோதித்தது. மயில்மேல் வள்ளி தெய்வயானையுடன் முருகன் அமர்ந்திருக்க, நக்கீரன் பாடுவது போல் காட்சி. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கே. ஆர். விஜயாவின் தாயார் உணர்ச்சி வசப் பட்டு விட்டார்! ஏ. பி. என். இடம், ''முருகன் வேஷத்துக்கு ஏற்ற முகம் கொண்டவர் எங்க பிள்ளை சிவகுமார்தான்'' என்று ஏ.வி.எம்.தான் கூறினாராம்.

காவல்காரன்: எம். ஜி. ஆருக்குத் தம்பியாக நடித்த முதல் நபர் நான்தான் என்று நினைக்கிறேன். இந்தப் படத்தில் நான் இறந்து போகும் பொழுது என்னை மயானத்துக்கு எடுத்துச் சென்று வரட்டிகளின் மேல் படுக்க வைத்து என் மீது

நூறாவது படமான ரோசாப்பூ ரவிக்கைக்காரியில் தீபாவுடன்



தப்புவதில் நிபுணர்கள்!



THE GREAT ESCAPE

உலக யுத்தத்தின் போது பிடிபட்ட நேச நாட்டுப் போர் வீரர்கள் பலத்த காவலுடன் நாஜிகளால் சிறை வைக்கப் படுகின்றனர். இக்கைதிகள், தப்பிச்செல்லும் வழியை ஆராய்கின்றனர். தெரிந்தோ -தெரியாமலோ . தப்பிச் செல்வதில் சூரர்களாக இருந்தவர்களையே ஜெர்மானிய இராணுவம் கைதிகளாகப் பிடித்திருந்தது! 'டாம்', 'டிக்', 'ஹாரி' என்று பெயர் கொண்ட மூன்று சுரங்கப் பாதைகள் தோண்டப்படுகின்றன. ஜெர்மானியர் கடுமையாகக் காவல் புரிந்தும் தப்பிச் செல்லும் தந்திரங்களை வீரர்கள் கெட்டிக்காரத்தனமாகக் கையாள்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்பவர் பிடிபடுகிறார். இருவர் படகில் தப்பி ஓடுகின்றனர். மயிர்க் கூச்செரியும் இம்மாதிரி பல சம்பவங்களைக் கொண்டுள்ள இப்படத்தில் பழைய, புதிய நட்சத்திரங்கள் பலர் நடிக்கின்றனர். 'தியேட்டரை விட்டுத் தப்பி ஓடினால் போதுமடா சாமி' என்ற எண்ணம் இப்படத்தைப் பார்க்கும் போது நிச்சயம் ஏற்படாது! -டி. எம். ஆர்.

மேலும் வரட்டிகளை அடுக்கி நெருப்பு வைத்தார்கள்! இந்தக் காட்சி படப்பிடிப்பின் போது என் வீட்டிலுள்ளவர் யாரையும் நான் அழைத்துச் செல்லவில்லை. படம் ரிலீஸான பிறகும் என் தாயாரை, பயந்து கொண்டேதான் படத்துக்கு அழைத்துச்சென்றேன். குறிப்பிட்ட அந்தக் காட்சியைப் பார்த்த என் தாயார் அதிர்ச்சி அடைவார் என்று நான் நினைத்தது தவறாகப் போய் விட்டது. ''நடிப்புத்தானே? கலை என்றுதான் பார்க்க வேண்டும்'' என்று சொல்லி விட்டார்.

கண்கண்ட தெய்வம்: விரைவாகவே சிந்தித்து, விரைவாகவே எழுதி விரைவிலேயே படம் எடுத்து விடுபவர் கே. எஸ். ஜி. இந்தப் படத்தில் ஒரு டூயட் காட்சி, முழுக்க முழுக்க தென்னை மரத்தின் மேல் அமர்ந்தபடியே நடித்தேன். தாகத்துக்கு இளநீர் தேவை என்றால் கீழிருந்து மேலே அனுப்புவார்கள்! காரணம் மேலே உள்ள இளநீர் குறைந்தால் continuity கெட்டு விடும்!

திருமால் பெருமை: மஹா விஷ்ணுவின் பத்து அவதார வேடங்களையும் போட்டுப் பார்க்க எனக்கு வாய்ப்பு அளித்த படம். ஒரே இரவில் அவதாரங்களை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் எனக்கு ஏற்பட்டது. அண்டாவில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருக்கும். ஒரு அவதார வேஷத்தைப்போட்டுப் படப்பிடிப்பு முடிந்தவுடன் மூல விக்ரகத்துக்கு எண்ணெய்க் காப்பு சாத்துவது போல் எண்ணெய் தேய்த்துக் குளித்த பிறகு அடுத்த அவதாரத்துக்கு மேக்கப். இப்படி ஒரே இரவில் மாற்றி மாற்றி எண்ணெய்க் குளியல் செய்ததால் பதினைந்து நாட்கள் டைபாய்டில் படுத்து விட்டேன்!

பணமா? பாசமா?: கதாநாயகன் வேடம் கொடுப்பதாக முடிவு ஆகி ஆனால் படம் ஆரம்பிக்கும் போது இரண்டே இரண்டு காட்சிகள் நடிக்க வேண்டிய பாத்திரம்தான் எனக்குக் கிடைத்தது. இந்தப் படத்தை ஏன் எடுக்கிறேன் என்று கே.எஸ்.ஜி. கூறினார்: ''என் ரசனையில் நான் உருவாக்கிய படங்கள் சிலவற்றுக்கு ரசிகர்கள் வரவேற்பளிக்கவில்லை, அவர்கள் ரசனைக்கு நான் இறங்கிப் படமெடுத்துக் காட்டுகிறேன்'' என்று சொல்லி எடுத்த படம். சவாலில் வெற்றி பெற்றார் கே. எஸ். ஜி.

ஜீவனாம்சம்: ஜெயசங்கர். ஏ. வி. எம். ராஜன், ஆகியோருடன் நானும் இணைந்து நடித்த படம். என்னுடன் நடித்து எனக்குத் தகுந்த ஜோடி என்று ரசிகர்களும், பத்திரிகைகளும் தீர்ப்பளித்த அந்த நடிகை யார் என்று நினைக்கிறீர்கள்? புதுமுகம் லட்சுமிதான்! அன்று புதுமுகம், இன்று? ஊர்வசி லட்சுமி!

பேட்டி: **சலன்**

அனர்த்தப் பாட்டே ஓரம்போ!
அவலட்சண இசையே ஓரம்போ!

''ஒ ருநன்னை மரத்திலே தென்றல் அடிக்குது''; ''ஓரம்போ, ஓரம்போ! ருக்குமணி வண்டி வருது'' என்ற பாடல்கள் உட்படச் சில பாடல்களுக்கு வானொலி நிலையம் தடை விதித்துள்ளது. இதன் எதிரொலியாகப் பாடலாசிரியர் கங்கை அமரன் சென்னை வானொலி நிலையத்துக்கும், மத்திய, மாநில அரசுகளுக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார்.

இதைப்பற்றிச் சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கந்தசாமியை (துறைவன்) கேட்ட போது:

''ரேடியோவில் ஒலிபரப்பவேண்டிய பாடல்களைத் தேர்ந்தெடுக்க நான்கு பேர் கொண்ட குழு உள்ளது. அவர்கள் பாடல்களின் இசை அமைப்பையும், வார்த்தைகளின் அர்த்தத்தையும் ஆழ்ந்து கவனிப்பார்கள். எங்கள் விதிமுறைகளுக்குள் வரும் பாடல்களையே தேர்ந்தெடுப்பார்கள். முடிவில் அவர்கள் தேர்ந்தெடுத்த பாடல்களை நானும் ஒருமுறை கேட்பேன்.

''ரேடியோவில் ஒரு பாடலை ஒலிபரப்புவதற்கு முன், பிரபலமான பாடல்கள் ஏதும் காப்பியடிக்கப்பட்டுள்ளதா; வன்முறையைத் தூண்டும் பாடலா; பால் உணர்ச்சியைச் சித்திரிக்கும் பாடலா; குடித்தல் போன்ற தீய பழக்கங்களுக்கு ஊக்கமளிக்கும் பாடலா; மத உணர்ச்சிகளைப் புண்படுத்தும் பாடலா; அரசியல் கட்சி ஒன்றைப் புகழும் பாடலா; அரசியல் தலைவர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்கும் பாடலா; தேசிய மத ஒற்றுமைகளைக் குலைக்கும் பாடலா என்றெல்லாம் கவனிப்போம்.

''கங்கை அமரனின் ''ஓரம்போ ஓரம்போ'' பாடலில் ஒரு பாடலுக்கு முக்கிய தேவையான பாடல் நயம் சிறிதும் இல்லை. வசனத்தைக் கேட்பது போன்ற உணர்ச்சியே எழுகிறது.

''சினிமா அல்லது தொலைக் காட்சியுடன் ரேடியோவை ஒப்பிட முடியாது. ஒருபாடலைத் திரைப்படத்திலோ, தொலைக் காட்சியிலோ கேட்கும் போது, பாடலைப் பாடும் கதாநாயகன் அல்லது நாயகியின் தோற்றம், படமாக்கப்படும் சூழ்நிலை முதலியவற்றோடு சேர்த்துத்தான் பாடலைக் கேட்கிறோம். கவனம் திருப்பப் படுவதால் பாடலின் அர்த்தத்தைக் குறிப்பாகக் கவனிப்பதில்லை. ஆனால் பாடல் தனியாக ரேடியோவில் ஒலி பரப்பாகும் போது உள் அர்த்தம் அல்லது அனர்த்தம் இரண்டுமே பெரிதாகத் தெரிகிறது. பாடலின் இசை கலைத் தன்மையோடு விளங்க வேண்டும். அசுரத் தனமாய் இருக்கக் கூடாது.



திரு துறைவன்


''மக்கள் மனத்தில் விஷம் கலக்கும் பாடல்களை அல்லது மக்களின் ரசனையைக் கெடுக்கும் பாடல்களை இயற்றும் கவிஞர்களை, இசையமைப்பாளர்களை மன்னிக்கவே முடியாது. எனவேதான் இலங்கும் ரேடியோ கேட்கும் இரண்டு கோடி மக்களுக்குச் சில பாடல்கள் ஒலி பரப்பாகாமல் மறுக்கப்படுகிறது. இந்தப் பாடல்களை ''நேயர் விருப்பத்தில்'' எவ்வளவு பேர் கேட்டாலும் ஒலிபரப்ப மாட்டோம்.


திரு கங்கை அமரனிடம் எங்களுக்கு எந்த வித மனத்தாங்கலும் இல்லை. அவர் நல்ல கவிநயத்தோடு டல பாடல்களை இயற்றி வெற்றிபெற வேண்டும்; இசையில் கலையம்சமோ பாடலில் கவிநயமோ இல்லாதவற்றைக் கேட்டுக் கேட்டு மக்கள் மனம் விகாரப்படக்கூடாது. ரேடியோ ரசிகர்கள் எங்கள் முடிவை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.''


பேட்டி: ''சிக்கி''



பொண்ணு ஊருக்குப் புதுசு படத்தில் ஓரம் போ பாடல் காட்சி. சைக்கிளில் சுதாகர்.


அர்ஸ்


ஐஸ் வெச்சு வெச்சே
நைஸா ஆளைக்
'குளோஸ்' பண்ணி
விடுவீர்கள் போலிருக்கே!


உடன் பிறப்பு
ரத்தத்தின் ரத்தம்
தஞ்சை தொகுதி
நாகை தொகுதி

கல்கி

1979 ஜூலை 1
சித்தார்த்தி ஆனி 17

மலர்: 37 இதழ்: 48



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தஞ்சைத் தீர்ப்பு: தலைவர்கள் தமாஷ்!

“தஞ்சையில் தோல்வியுற்ற தி.மு.க.வுக்கு இனி எதிர்க்கட்சியாக இயங்கத் தகுதியில்லை” என்று எம். ஜி. ஆர். கூறுகிறார்.

குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறோம்!

“அப்படியானால் நாகைத் தேர்தலில் தோல்வியுற்ற அ.இ.அ.தி.மு.க. இனி ஆட்சியில் இருக்கவே தகுதியில்லை” என்கிறார் கருணாநிதி.

விழுந்து விழுந்து சிரிக்கிறோம்!

இந்திரா காங்கிரஸ் பொதுக்காரியதரிசி அன்டுலே இன்னும் பெரிய ஹாஸ்ய வெடியைக் கொளுத்திப் போடுகிறார்: “தஞ்சை உபதேர்தல் முடிவு இந்திரா காந்தியிடம் மக்களுக்கு உள்ள நம்பிக்கையை உணர்த்துகிறது” என்கிறார். அதோடு விட்டாரா? அர்ஸை மனத்தில் வைத்துக் கொண்டு, “மண்டைகனம் மிக்கவர்களுக்குத் தஞ்சைத் தீர்ப்பு ஓர் எச்சரிக்கை” என்கிறார்.

சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகி விட்டது போங்கள்!

மூப்பனாரோ எல்லாரையும் தூக்கி அடிப்பது மாதிரி தமாஷ் பண்ணுகிறார்: “தஞ்சைத் தீர்ப்பு ஜனதா கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதற்கு அத்தாட்சி!” என்கிறார்.

சிரித்து மூச்சு முட்டுகிறது, இனி தாங்க முடியாது என்ற நிலையில் கருணை இன்றி திரிபாதியும் முகர்ஜியும் ஜோக் அடிக்கிறார்கள். “இந்திரா காந்தி நின்றிருந்தால் இதைவிடப் பெரிய பிரம்மாண்ட மெஜாரிட்டியில் (மூப்பனார் கணக்கு இரண்டு லட்சம்!) வென்றிருப்பார்” என்கிறார்கள்.

“போதுமையா, போதும்! ஆளை விடுங்கள்!” என்று கண்களில் நீர் ததும்பச் சிரிப்புத் தாங்காமல் கெஞ்சுகிறோம்!

இந்திரா காங்கிரஸ் தஞ்சையில் வென்றதற்குக் காரணம் எம். ஜி. ஆரின் பெருந்தன்மைதான் என்பது அரசியல் அரிச்சுவடி கூட அறியாத அப்பாவிக்கும் தெரியும். இந்திரா காந்திக்கு ஆதரவு அளிப்பதற்கில்லை என்று எம். ஜி. ஆர். அறிவித்த பிறகு இந்திரா காங்கிரஸ் குட்டித் தலைவர்கள் அவரை ஏசிய ஏச்சு என்ன, பேசிய பேச்சு என்ன? அவ்வளவுக்குப் பிறகும் அவர் கண்ணியம் காத்துப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். இந்திரா காந்திக்கு ஆதரவு மறுத்த போதிலும் இந்திரா காங்கிரஸை ஆதரிப்பதாகக் கொடுத்த வாக்குறுதியை மீறாமல் செயல்பட்டார். அவ்விதம் அவர் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிராவிட்டால் இன்று சிங்காரவடிவேல் இருக்கிற இடம் தெரியாது.

இன்னும் சொல்லப் போனால் தமது சொந்தக் கட்சியின் வேட்பாளர் நின்ற நாகைத் தொகுதிக்குக் கூடப் போகாமல் தஞ்சையில் தீவிரப் பிரசாரம் செய்தார் எம். ஜி. ஆர். விளைவு, நாகைத் தொகுதிக்குப் போக முடியாமல் தொண்டையில் தொந்தரவு ஏற்பட்டு விட்டது. இந்த இடையூறு இல்லாதிருந்து, நாகைத் தொகுதியில் எம். ஜி. ஆர். பிரசாரம், திட்டமிட்டபடி நடந்திருந்தால் அங்கு தேர்தல் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும் என்று நம்ப இடமிருக்கிறது.

தேர்தல் பிரசாரம் ஆரம்பிக்குமுன் ஒரு கும்பிடு; தேர்தல் தீர்ப்பு வெளியான பின் ஒரு கும்பிடு என்று எம். ஜி. ஆருக்குப் போட்டிருக்கிறார் சிங்காரவடிவேல் என்பதை மறந்து விட்டு, இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் வெற்றிப்

பெருமிதத்தில் எப்படி எப்படியோ கொக்க ரிப்பது விந்தையாக உள்ளது.

சிக்மகளூரிலாகட்டும் தஞ்சையிலாகட் டும், அர்ஸ் அல்லது எம். ஜி. ஆரின் ஆதரவு பெற்றுத்தான் இந்திரா காந்தியோ அல்லது அவரது கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவரோ தேர்தலில் நின்று வெற்றி பெற முடியும் என்பதை இந்திரா காங்கிரஸில் எஞ்சியிருக் கும் தலைவர்கள் எவ்வளவு சீக்கிரம் உணர் கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது. இந்திரா காந்தி இனி நிற்க வேண்டியது தேர்தலில் அல்ல, நீதிமன்றத்தில் என்பதை இத் தலை வர்கள் கண்மூடித்தனமாகப் புரிந்து கொள்ள மறுத்தாலும் மக்கள் புரிந்து கொண்டிருக் கிறார்கள்.

தஞ்சைத் தேர்தல் கொடுத்திருக்கும் உண் மையான தீர்ப்பு, அஇஅதிமுக விடமும் அதன் தலைவரிடமும் மக்கள் வைத்துள்ள நம் பிக்கை மாறவில்லை என்பதுதான். ஓர் உப தேர்தல் ஆட்சியை மாற்றாது; ஆனால் ஆட்சி யாளரிடம் மக்களுக்கு நம்பிக்கை நீடிக்கிறது அல்லது பொய்க்கிறது என்பதை உணர்த்தும். இந்தக் கடமையைத் தஞ்சையும் செவ்வனே செய்திருக்கிறது.

பெருவாரியான மக்களுடைய நம்பிக்கை யைப் பெற்றுள்ளோம் என்ற தைரியத்துடன் எம். ஜி. ஆர். தலைமையில் தமிழக அரசு முன்னிலும் தீவிரமாக இனி இயங்க வேண் டும். பிரச்னைகளைத் துணிவுடன் அரசியல் சார்பற்ற நியாய உணர்வுடன் அணுக வேண் டும். தாமதங்களைத் தவிர்த்து, முன்னேற்றத் திட்டங்களை முடுக்கி விட்டு, தேக்க நிலையி லிருந்து தமிழகம் விடுபட முயற்சி மேற் கொள்ள வேண்டும்.

ஆணவம் அழியும்

கண்ணதாசன்

எல்லாம் நாமே என்பவர் வாழ்க்கை
கல்லாய் மணலாய் கனலாய் அழியும்
புல்லாய்ப் புழுவாய்ப் பூமியில் இருப்பினும்
கல்லா தவரும் கனிவுடன் நடந்தால்
நல்லோர் மதிக்க நயம்பட வாழ்வர்!
வல்லோன் நானென வாய்ச்சொல் வடித்து
எல்லோர் வாழ்விலும் இழிவினைப் பரப்பும்
பொல்லா மனிதர் புகழ்கெட்டு மடிவர்!
வெற்றியோ தோல்வியோ விதிப்படி வரட்டும்
உற்றவை எவையென உணர்ந்துகொண்
டாடுவோம்!
மற்றவை இறைவன் வகுத்தஅவ் விதமே!
கற்றவை குறைவே; கல்லா தவவே
மற்றுமிப் பூமியின் பரப்பள வாகும்!

நாணல் போலவே நாணிப்பணிந்து
தேவைப் பட்டால் தென்னைபோ லிருந்து
மக்கள் மத்தியில் மயில்போ லாடி
குழந்தைக ளிடையே குயில்போல் பாடி
கோட்டா னுகிக் குரங்கா காமல்
வாழும் மனிதரை வையகம் போற்றும்!
எந்த நேரமும் எகிறிக் குதிப்போர்
சொந்த அறிவு துணைக்கு வராமல்
மந்த அறிவால் மந்தைக ளாவார்!
வாழ்வில் எத்தனை மண்ணிடைக் கண்டேன்
வாழ்ந்து தாழ்ந்தோர் வரலாறு படித்தேன்
தாழ்ந்து வாழ்ந்தோர் சரித்திரம் பார்த்தேன்
ஏறும் போதே இறங்கிய சிலபேர்
ஏறும லேயே இறந்தவர் சிலபேர்
ஏறிய இடத்தை இறுகப் பிடித்து
இறங்கா மலேயே இருந்தவர் சிலபேர்
எத்தனை குதிரைகள்? எத்தனை வண்டிகள்?
எத்தனை யானைகள்? எத்தனை பூனைகள்?
இத்தனை பார்த்தவன் இன்றும் பார்க்கிறேன்,
மமதை என்பது மறையவே இல்லை!
ஆணவம் என்பது அழியவே இல்லை!
ஆணவம் ஒன்றே ஆளுக்கு அவமென
காணும் போதே கனிவுறும் வாழ்க்கை!
சுத்த வீரனும்; தோல்வியைத் தழுவினன்;
கோழை என்றார்கள்; குன்றத்தில் ஏறினன்;
அவரவர் திறமையா அடிப்படைக் காரணம்?
அங்கே ஒருவன் ஆட்டுவான் ஒன்றை
இங்கே நாமெலாம் இயங்கு கின்றோமே!



[காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் என்கிற அமைப்பு தோன்றி இம்மாதத்துடன் ஓராண்டு காலம் ஆகிறது. இத்தருணம் அக்கட்சித் தலைவர் திரு குமரி அனந்தனைச் சந்தித்துச் சில வினாக்கள் தொடுத்த போது...]



கேள்வி: தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய இரண்டு கட்சிகளையும் தவிர்த்து, என்றேனும் ஒருநாள் தமிழகத்தில் ஆட்சியமைக்க வாய்ப்புள்ள ஓர் அகில இந்தியக் கட்சி நிச்சயம் ஜனதா கட்சியாகத்தான் இருக்க முடியும். நிலைமை இப்படியிருக்க ஜனதாக் கட்சியை தமிழகத்தில் மேலும் வலுப்படுத்தும் பணியில் ஈடுபடாமல், அக்கட்சியினின்று விலகிப் புதிய கட்சி தொடங்கி நடத்தி வருகிறீர்களே, இது எவ்விதத்தில் சரியானது?

குமரி அனந்தன்: தி. மு. க., அ. தி. மு. க. ஆகிய கட்சிகளை வென்று வேறொரு கட்சி, அதிலும் அகில இந்தியக் கட்சி தமிழகத்தில் ஆட்சியமைக்க விரும்பினால் அக்கட்சிக்கு அடிப்படையாகத் தேவையானது தேசியப் பார்வையும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றுமாகும். அதோடு தமிழ் மாநிலப் பிரச்னைகளை அம்மாநில மக்கள் பார்வையில் அணுகும் செயல்திறனும் தேவை. தமிழை மறவாத தேசியத்தையும், தேசியத்தை மறவாத தமிழையும் இருபெரும் லட்சியங்களாகக் கொண்டு துவங்கப்பட்டதே காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி.

கேள்வி: ஜனதாக் கட்சியிடம் நீங்கள் குறிப்பிட்ட இரண்டு அம்சங்களும் இல்லை என்பது உங்கள் கருத்தா?

குமரி அனந்தன்: தமிழகத்தில் தி. மு. க. அ. தி. மு. க. ஆகியவற்றை முறியடிக்கும் அளவுக்குத் தன்னை பலம் வாய்ந்த கட்சியாக வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான அளவு இவ்விரண்டு அம்சங்களும் இல்லைதான்! அகில இந்தியக் கட்சி என்ற நிலையில் உள்ள ஒரு கட்சி எந்தக் கட்சியுடனாவது கூட்டு சேர்ந்து தேர்தலில் வென்றால் போதும் என்கிற எண்ணத்தை விடுத்துத் தனது சொந்த பலத்தில் வளர வேண்டும் எனும் குறிக்கோள் கொண்டுள்ளதாக இருக்க வேண்டும்.

கேள்வி: ஜனதாக் கட்சி தோன்றி சுமார் ஓராண்டுக்கும் மேலாக அந்தக் கட்சியில் இருந்தீர்களே அப்போது உங்கள் எதிர்பார்ப்பின்படி ஜனதா செயல்பட்டதா?

குமரி அனந்தன்: ஆரம்ப முதலே எனக்கு ஜனதாக் கட்சியின் செயல்பாடு திறனில் திருப்தி இல்லைதான்! காலப்போக்கில் முன்னேற்றம் உண்டாகும் என்று எதிர்பார்த்தேன். பலனில்லாத நிலையில் காந்தி, காமராஜ் தேசிய காங்கிரஸ் தோன்றிற்று.

கேள்வி: ஜனதாவின் செயல்படு முறையில் அதிருப்தி இருந்தாலும் திடீரென அக்கட்சியை விட்டு விலகிப் புதியகட்சி தொடங்கத் தூண்டிய கட்டாயம் எப்படி உண்டாயிற்று?

குமரி அனந்தன்: கோயம்புத்தூரில் நடந்த தமிழ்நாடு ஜனதாக் கட்சி மாநாட்டில் ஜனதாக் கட்சி எக்காரணத்தைக் கொண்டும் அ. தி. மு. க. வுடன் உறவு வைத்துக் கொள்ளாது என்று தொண்டர்களின் ஒருமித்த கருத்து அடிப்படையில் தீர்மானம் போட்டு நிறைவேற்றி விட்டு, 48 மணி நேரத்துக்குள்ளாக அ. தி. மு. க.வின் ஆதரவு கொண்டு ராஜ்ய சபைக்கு அங்கத்தினர்களை அனுப்ப ஜனதா மேலிடம் முடிவு செய்து செயலிலும் நிறைவேற்றியது. தொண்டர்கள் எடுத்த முடிவை லட்சியம் செய்யாமல் மேலிடம் செயல்பட்டதை

எங்கே போகிறோம்?

ஓராண்டுச் சாதனை எதிர்காலச் சிந்தனை!

எதிர்த்து அதன் தொடர்ச்சியாய்த் தான் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தோன்றியது.

கேள்வி: அ. தி. மு. க. வுடன் உறவு கூடாது என்று கருதும் நாங்கள் சென்ற பாராளுமன்றத் தேர்தலின் போது ஜனதாக் கட்சி தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டதையும், நாங்களே தி. மு. க. உறவின் உதவியால் வென்றதையும் எவ்விதம் நியாயப்படுத்துகின் றீர்கள்?

குமரி அனந்தன்: அன்றைக்கும் ஜனதாக் கட்சி தி. மு. க. வுடன் உறவு கொண்டதை விரும்பாத மனநிலையில்தான் இருந்தேன். அச்சமயம் துக்ளக் எழுதியதை நினைவு கூர விரும்புகிறேன். 'குமரி அனந்தன் போன்றவர்கள் தனித்து நின்றே போட்டியிட வேண்டும். மற்ற கட்சிகளுடன் கூட்டு வேண்டாம்' என்று எனது மன நிலையைச் சரியாக வெளிப்படுத்தும் விதமாக எழுதியிருந்தது. ஆனால் அன்றைய கால கட்டம், சூழ்நிலை, ஜனநாயகத்திற்கும் மக்கள் சுதந்திரத்திற்கும் வந்த ஆபத்து, சஞ்சீவ ரெட்டி போன்ற பல தலைவர்களின் நேரடியான வற்புறுத்தல் ஆகியவை ஒருங்கிணைந்து என்னை மௌனப்படுத்தி விட்டன. ஆனாலும் ஏர் உழவன் சின்னத்தில் நிற்காமல் ஸ்தாபன காங்கிரஸின் ராட்டை சுற்றும் பெண் சின்னத்தில் நின்றுதான் நான் வென்றேன். நான் அச்சிட்ட ஒரே சுவரொட்டியிலும் 'அப்பச்சி காமராஜரைப் போற்றிய தொகுதி; எப்போதும் அவர் தொண்டன் என்பதே என் தகுதி' என்று தான் அச்சிட்டு வெளியிட்டேன்.

"உமக்கு வயசு என்ன ஆச்சு? சதா அந்த ஆபரேட்டர் அலமேலுவுடன் என்ன பேச்சு வேண்டி கிடக்கு? அவளுடன் தனியாக ஒரு வார்த்தை ஆசையாகப் பேசலாம்னு எனக்கு டைம் தர மாட்டேள் போலிருக்கே?"



கேள்வி: தமிழில் 'மணியார்டர் ஃபாரம்' தமிழில் ரயில்வே 'ரிசர்வேஷன் ஃபாரம்' ஆகியவற்றை அச்சிடச் செய்வதால் மட்டும் தங்கள் கட்சிக்கு ஆழ்ந்த தமிழ்ப் பற்று உள்ளது என்று கூறிவிட முடியுமா? இம்மாதிரி சின்ன விஷயங்களுக்காகப் போராடுவதைவிட ஹிந்தியை மத்திய அரசு திணிப்பதை வெளிப்படையாக எதிர்த்துப் போராடலாமே!

குமரி அனந்தன்: பாராளுமன்றத்தில் தற்போது இருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களில் சுமார் ஐந்து பேருக்கு ஆங்கிலமும் தெரியாது, ஹிந்தியும் தெரியாது. அவர்களால் பாராளுமன்றத்தில் தமிழக மக்கள் சார்பாக எம்மொழியில் குரல் எழுப்ப முடியும்? இதே நிலையில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சிலராவது இருப்பர். இதனை மனத்தில் கொண்டு 'பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் அவரவர் தாய் மொழியில் வினாக்கள் எழுப்ப உரிமை தரப்பட வேண்டும்' என்று குரல் எழுப்பி இந்தியப் பாராளுமன்ற சரித்திரத்தில் முதன் முறையாகத் தமிழில் கேள்வி கேட்டேன். 'ஆங்கிலம் தெரிந்த குமரி அனந்தன் தமிழில் கேள்வி கேட்கலாமா?' என்று பலரும் வினவினர். 'ஆங்கிலம் தெரிந்த திரு வாஜ்பாய் ஐ. நா. சபையில் இந்தியில் உரையாற்றும்போது குமரி அனந்தனுக்கு மட்டுமின்றி ஒவ்வொரு பாராளுமன்ற அங்கத்தினருக்கும் தாய் மொழியில் கேள்வி கேட்க அனுமதி அளிக்க வேண்டும் என்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் குரல் எழுப்பி வெற்றியும் பெற்றோம். இன்று தேசிய மொழிகள் அனைத்திலும் கேள்வி கேட்கும் உரிமை பெற்றுள்ளோம். சுதந்திரம் பெற்று 31 ஆண்டுகள் எக்கட்சியும் சாதிக்காததைக் கட்சி துவங்கி 10 மாதங்களில் நாங்கள் சாதித்துள்ளோம். இது சாதாரண விஷயமல்ல.

பணவிடைத் தாளிலும், ரயில்வே பயணச் சீட்டு பதிவுத் தாளிலும் தமிழ்மொழி இடம் பெறுவது சாதாரணமானதல்ல. இதனால் அந்தந்த மாநிலத்தவருக்கு இத் தாள்களை அவரவர் தாய்மொழியில் அச்சிட்டுப் பெற உரிமை பெறப்பட்டுள்ளது.


அடுத்த கட்டமாக காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் அந்தந்த மாநில மொழிகள் அவரவர்க்கு ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் எனும் லட்சியத்தை நோக்கி நடை போடும். இந்நாள் வரும் வரை நேருவின் உறுதி மொழிப்படி ஆட்சி மொழியாக ஆங்கிலமும் நீடிக்கச் செய்ய அரசியல் சாசனத்தில் இடம் பெறப் போராடுவோம்!

கேள்வி: இந்திரா காந்தி ஜனநாயக மரபுக்குப் புறம்பாக நடந்துக் கொண்டார் என்பது குற்றச் சாட்டு. தற்போது ஜனதாக் கட்சி ஜனநாயக முறைப்படி நடந்து கொள்கிறதா?

குமரி அனந்தன்: ஜனதாவில் உள்கட்சி ஜனநாயகம் இல்லை. இந்நிலை நீடித்தால் நாட்டு ஜனநாயகத்துக்குக் குந்தகம் உண்டாகலாம்.

ஆனால் ஒன்று. இந்திரா காந்தி ஜனநாயகத்தை அழிப்பதில் தீவிரம் கொண்டு

'தர்மசங்கடம்' **தம்பு!**



செயல்பட்டவர். ஜனதா தலைவர்கள் அடிப்படையாக ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். இந்திராவோடு ஜனதாவை ஒப்பிடக் கூடாது.

கேள்வி: தங்கள் கட்சி வளர்ந்து என்றேனும் ஒருநாள் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றும் நிலைக்கு வலுவடைய முடியும் என்று உண்மையிலேயே நம்புகிறீர்களா?

குமரி அனந்தன்: 1949க்குப் பிறகு தோன்றிய ஒரு கட்சியும், சில ஆண்டுகளுக்கு முன்பாகத் தோன்றிய ஒரு கட்சியும் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்துள்ள போது தேசிய பாரம்பரியத்தில் ஊறி வளர்ந்த எங்களால் ஏன் முடியாது? தற்போதுள்ள ஜனதா உட்படப் பெரும்பாலான அகில இந்தியக் கட்சிகள் பல மாநிலக் கட்சிகளுக்கு வால் பிடித்துப் போவதால் அவைகளால் தங்களை வளர்த்துக் கொள்ள முடிவதில்லை. பிற மாநில கட்சிகளுக்குப் பாதை அமைக்க மண்வெட்டியைத் தூக்கிச்செல்லும் தேசியவாதிகள் தங்கள் பூமியை அதே மண்வெட்டியால் தோண்டினால் தேசிய நீர் ஊற்று பொங்கிப் பெருகுவதைக் காணலாம். எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில் எங்களை வளர்த்துக் கொள்ள எல்லா விதத்திலும் முயல்வோம். தீவிர அரசியல் ஈடுபாடு தவிர தனிப்பட்ட முறையில் பாமர மக்களுக்குச் சேவை செய்வதும் எங்கள் கட்சிக் கொள்கைகளில் முக்கியமானதாகும். காந்தி காமராஜ் அறக்கட்டளை என்றதோர் அமைப்பு எங்கள் கட்சி தோன்றுவதற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. அதன் மூலம் எங்களால் முடிந்த அளவுக்குச் சமுதாயத்தில் பொருளாதார நிலையில் கீழ்மட்டத்தில் இருக்கும் பலருக்கும் உதவி வருகிறோம்.

கேள்வி: தஞ்சை - நாகை தேர்தல்களில் தங்கள் கட்சி எக்கட்சியையும் ஆதரிக்காதது ஏன்?

குமரி அனந்தன்: தி. மு. க. அரசைக் கவிழ்ப்பதற்குக் காரணமாக இருந்த வலது கம்யூனிஸ்ட் கட்சியை நாகையில் தி. மு. க.வே ஆதரித்தது. மதுரை மாநகராட்சித் தேர்தலில் அ. தி. மு. க. வுக்கு சக கட்சிகளாக இருந்த வலது, இடது கம்யூனிஸ்டுகள் இரண்டுமே இன்று எதிரணியில் உள்ளன. தஞ்சையில் தி. மு. கவை ஜனதா ஆதரித்தது. நாகைத் தேர்தலில் தங்களை ஜனதா ஆதரிக்க வேண்டும் என்று அ. தி. மு. க. வேண்டுகோள் விடுத்ததற்கு, 'அ. தி. மு. க. காலந்தாழ்ந்து வேண்டுகோள் விடுத்திருக்கிறது' என்று மத்திய அமைச்சர் பா. ராமச்சந்திரன் பேசினதிலிருந்து, 'முன்பே அ. தி. மு. க. அணுகி இருந்தால் அவர்களை ஆதரித்திருப்போம்' என்றுதானே அர்த்தம்? இம்மாதிரி அடிப்படைக் கொள்கை அளவில் எவ்வித உடன்பாடும் இன்றிக் கூட்டு சேர்தல் எங்களுக்கு உடன்பாடு இல்லை. கொள்கை அளவில் ஒன்றுபட உள்ள கட்சிகள் ஓரணியில் நிற்கும் நிலை வந்தால் ஒழிய மற்றபடி கட்சிகள் தனித்தனியாகச் சொந்த பலத்தில்தான் தேர்தலில் நிற்க வேண்டும்.

கேள்வி: அப்படி தேசிய சக்திகள் ஒன்றுபடும் வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறீர்களா?

பதில்: ஏன் வர முடியாது? இந்திரா, சஞ்சய் நீங்கலான காங்கிரஸும், ஸ்வரண்சிங் காங்கிரஸும், எங்களைப் போன்றோரும், பிற தேசியவாதிகளும் ஒரே அணியில் நிற்கும் காலம் வரலாம். அப்படி வரும் வரைக்கும் தங்கள் கட்சியைத் தாங்களே வளர்த்துக் கொள்வதுதான் காந்தி காமராஜ் தேசிய காங்கிரசின் நோக்கம்.

பேட்டி: நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

மூன்றும் பாகம்

1. அண்ணன் காட்டிய வழி

சிங்காரம் பெரியசாமியின் மீது வழக்குத் தொடர்ந்து வருஷம் ஒன்றாகி விட்டது...

மருதேசன் பிள்ளைக் காலத்தில் உயில் எழுதும்போது வந்திருந்த வக்கீல் காலமாகி விட்டார். அவர் மகன் இப்போது அந்த இடத்தில் இருக்கிறார். அவர் சிங்காரத்துக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொன்னார். ''நீங்கள் இந்த வழக்கை எடுத்துக் கொள்ளா விட்டால் நான் வேறு வக்கீல் பார்த்துக் கொள்கிறேன்'' என்று அந்த வக்கீல் ஐயரையே அவன் கோபித்துக் கொண்டானும். அதைப்பற்றி, வைத்தி, வீட்டில் வந்து தன் அண்ணனுத்தையின் பிரதாபமாக அள்ளி வீசிக் கொண்டிருந்தான். இந்த ஒரு வருஷமாய்ச் சிங்காரத்தின் வீட்டுக் கருவறைப் பொக்கிஷம் சிறுகச் சிறுகக் காலியாகிக் கொண்டிருந்தது...

தோட்டத்தையும், தேங்காய்க் கிடங்கு வியாபாரத்தையும் வழக்கு முடியும் வரை பெரிய சாமிதான் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று அவன் தரப்பில் வாதாடி கோர்ட்டு உத்தரவு வாங்கியிருந்தார் பெரிய சாமியின் வக்கீல்.

சிங்காரம், இந்த மாதிரி ஓர் எதிர்த் தாக்குதலைப் பெரியசாமி தன் மீது தொடுக்க முடியும் என்று எண்ணிய இல்லை. இப்போது அவன் சின்னம்மா கோதையின் வீட்டில் அண்டி வாழ்கிற ஒரு மனிதனாகத் தான் வாழ முடிந்தது.

வழக்கு முடிந்தால் எல்லாச் சொத்துக்களும் வந்து விடும், அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு இந்தப் பெரியசாமியை ஒரு கை பார்த்து விடுவது என்று வர்மம் உரைத்தான் சிங்காரம். ... எல்லாவற்றுக்கும் நிறையப் பணம் தேவைப்பட்டது. பணமும் வருமானமும் தருகிற சொத்துக்களை முடக்கி விட்டான் பெரியசாமி. அந்த வருமானத்தைத் தான் அவனும் சிங்காரத்தை எதிர்த்து வழக்காடுவதற்காகத் தண்ணீராய் அள்ளிவிட்டுக் கொண்டிருந்தான்...

பணமுடையின் போது வேறு வழியின்றி முதலில் தன் வசம் இருந்த கருவறையின் பொன்னையும் ஆபரணங்களையும் யாருக்கும் தெரியாமல் விற்றுத் தீர்த்தான். பிறகு தன் பங்கில் மீந்திருந்த சில சொத்துக்களை அடமானம் வைத்துக் கடன் வாங்கினான். ஒரு வருஷத்தில் கடனும் வட்டியுமாகப் பெருகிய தொகையைக் கேட்டுக் கடன்காரர்கள் சிங்காரத்துக்கு நோட்டீசு விட்டனர்; அதெல்லாம் பெரியசாமி தூண்டுதலால்தான் நடக்கிறது என்று அண்ணனைத் தூற்றினார்கள் சிங்காரமும் வைத்தியும்.

பெரியசாமியின் மீது தொடுத்த வழக்குகள் ஒரு பக்கமும், கடன்காரர்கள் சிங்காரத்தின் மீது தொடுத்த வழக்குகள் மறுபக்கமும் இழுத்து அலைக்கழிக்க, சிங்காரம் வெறிபிடித்தவன்போல் கோர்ட்டுக்கும் வக்கீல் வீட்டுக்குமாகத் திரிந்து கொண்டிருந்தான்.

இந்தச் சூழ்நிலையில் கொடுத்த வாக்குக் கேற்ப, அவனது தமக்கை மகள் அமுதவல்லிக்கும் சிங்காரத்துக்கும் ஆன்றோர்களும் பெரியோர்களும், கூடி, ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளுடன் விவாஹ சுபமுகூர்த்தம் நடத்தத் தீர்மானித்தனர்.

விளக்குச் சாமியார் பின்தொடர, தனக்குச் சொந்தமில்லாமல் கோடு கிழித்துத் தடுக்கப்பட்ட அந்தத் தென்னந்தோப்பின்



வாய்க்கால் கரை மேட்டில் நடந்து கொண்டிருந்தான் சிங்காரம். காது மடல்களில் ஒளி சிதறிச் சுடர்விடும் அந்த வைரக் கடுக்கன்களைக் காணோம். விரல்களெல்லாம் மோதிரங்கள் இன்றி வெறிச்சென்றிருந்தன.. சிங்காரத்தின் முகம் சூனியமாய் இருந்தது...


''சாமி, பரியாரியை வரச் சொல்லிக் குடுமியை எடுத்துட்டுக் கிராப்பு வெச்சிக்கப் போறேன்... என்ன சொல்றீங்க?'' என்று மிக முக்கியமான பிரச்னைக்குத் தீர்வு கண்டவன்போல் கேட்டான் சிங்காரம்.

''மழித்தலும் நீட்டலும் வேண்டா; உலகு பழித்தது ஒழித்து விடின்...னு ஒரு பாட்டு இருக்குது'' என்றார் விளக்கு.

''அது எப்பிடி? ஏதாவது ஒண்ணு செஞ்சே ஆகணுமே... நான் சொல்றது மொட்டை போட்டுக்கறது இல்லே சாமி... கிராப்பு. நீங்க பாத்ததில்லே?... நம்ப வக்கீலு ஐயிரு வெச்சிருக்காரே... அது மாதிரி'' என்று விளக்கினான் சிங்காரம்.

''அப்படீன்னா தம்பி, அதுக்கு நம்பப் பரியாரி சரியில்லே. இவன் அடுப்பு வெட்டி விட்டுடுவான்... நீ கோர்ட்டுக் கச்சேரிக்குப் போவே இல்லே, அங்கே இருக்குது முடிவெட்டற கடை... பார்பர் ஷாப்புன்னு எழுதிப் போர்டு வெச்சிருக்கான் புதிசா... அங்கே போயி கிராப் பண்ணிக்க...'' என்று யோசனை சொன்னார் சாமியார்.

''ஆமாம் சாமி... திங்கட் கிழமை 'ஈரங்'கிக்குப் போகணுமாம்... 'ஈரங்கி'ன்னா என்னா சாமி...'' என்று குழந்தை மாதிரி கேட்கும் சிங்காரத்தைப் பார்த்து ஓர் இளநகையுடன்





சொன்னார் சாமியார். "நீ இங்கிலீக படிக்க ஆசைப்பட்டே இல்லே?" அது 'ஹியரிங்'னு இங்கிலீஷ் வார்த்தை. 'ஹியரிங்'னு கேக்கறது. ரெண்டு வக்கீலுங்க சொல்றதையும், வாதி சொல்றதையும், பிரதிவாதி சொல்றதையும் கேக்கறாரு இல்லே தொரை...! அதுக்குப் பேருதான் 'ஹியரிங்!' என்று சாமி தனக்குத் தெரிந்த அளவில் இங்கிலீஷைச் சிங்காரத்துக்குப் புரிய வைத்தார்.

"ஏன் சாமி.. நான் முன் கோபத்திலே ஏதாவது தப்பு செய்துட்டேனா?" என்று இடைரென்று கேட்டான் சிங்காரம். அவன், தான் பெரிய சாமியின் மீது வழக்குத் தொடர்ந்தது பற்றியும், கூட்டாளியாகியது பற்றியும் கேட்கிறான் என்று புரிந்தது சாமியாருக்கு. அவர் மௌனமாய் அவனைப் பார்த்தார்.

"நீங்க ஏன் சாமி எனக்குப் புத்தி சொல்லித் தடுத்திருக்கக் கூடாது!" என்று குரல் கம்மக் கேட்டான் சிங்காரம்.

"உன்னை யாரும் அப்போது தடுத்திருக்க முடியாதப்பா" என்று மெல்லிய குரலில் சொன்னார் சாமியார். "நீ கோட்டையில் பிறந்தவன். ... கோட்டையை அழிப்பாய்! ஆனாலும் உன் குலம் தழைத்து விளங்கும்... போயேன்... பெரிய கோட்டை... குபேரப் பட்டணம்... சக்கரவர்த்திகள் அரசாண்ட அரண்மனைகள் இருந்த இடத்திலே இப்போது கழுதைகள் மேய்ந்து கொண்டிருக்கவில்லையா?... கழுதைகள் மேய்ந்த இடங்களில் கட்டிடங்கள் தோன்றுதா? விடு — இதுதான் உங்கள் வாழ்க்கை, உறுதியாக நில்லு... மனம் உடைந்து விடாதே... அதுதான் இழக்கக் கூடாத கோட்டை..." என்று சிங்காரத்தின் தோளில் தட்டித் தைரியம் ஊட்டினார் விளக்குச்சாமி.

"நான் முக்கியமா உங்களோட பேசலாம்னு வந்தது — இந்த நிலைமையிலே நான் கல்யாணம் பண்ணிக்க வேணுமான்னு கேக்கறதுக்குத்தான்... இப்ப நீங்க சொல்றதைக் கேட்டதும் தெம்பாத்தான் இருக்குது சாமி... கல்யாணம் நடக்க வேண்டியதுதானே!" என்று கொஞ்சம் வெட்கத்துடன் கேட்டான் சிங்காரம்.

"அது நடந்த மாதிரிதான் தம்பி! எல்லாத்தையும் அனுபவிக்கத்தானே பொறந்திருக்கே. சின்னவனானாலும் வாக்குத் தவறக் கூடாது... மானம் போயி உயிர் வாழக் கூடாது.. அதெல்லாம் செய்கிற மனுஷனா நீ! நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளத் தயங்கணும்! அட வைத்தியகாரப் பிள்ளை..." என்று சொல்லி விழுந்து விழுந்து சிரித்தார் சாமியார்.

"ஆனால் ஒண்ணு சொல்லிடறேன் சாமி. பெரியசாமி என் கல்யாணத்துக்கு வரப்படாது... வந்தாலும் மரியாதையெல்லாம் ஒண்ணும் தர முடியாது... வராமல் இருந்தால் அவனுக்கு மரியாதைன்னு சொல்லி வைங்க..." என்று கண்கள் சினந்து மின்ன, முகம் கடுகடுத்துச் சொன்னான் சிங்காரம்...

"அதெப்படி தம்பி... தகப்பன் ஸ்தானத்திலிருந்து..." என்று ஏதோ சொல்ல விளக்குச் சாமி வாயெடுத்த போது.

"வாயை மூடும்... உபதேசம் பண்ணின வாயாலே உளறுதீர்... இன்னொருதரம் அவன் பேரைச் சொன்னால் என் எதிரில் வராதீர்" என்று ஆவேசம் வந்தது போல் கத்தினான் சிங்காரம். (தொடரும்)

குற்றம் சாட்டாதீர்கள்!



ஜெர்மனியில் உள்ள லூபெக் சர்ச்சில் எழுதப்பட்டிருக்கும் அழகான வாசகம்:

நம்முடைய ஆண்டவன் ஏசு நம்மிடம் பேசுகிறார்:
என்னை எஜமானன் என்கிறீர்கள்;
ஆனால் எனக்குக் கீழ்ப்படிவதில்லை.
என்னை ஒளி என்கிறீர்கள்; ஆனால் பார்ப்பதில்லை.
என்னைப் பாதை என்கிறீர்கள்;
ஆனால் அதில் நடப்பதில்லை.
என்னை உயிர் என்கிறீர்கள்;
ஆனால் அதை நாடுவதில்லை.
என்னை அறிவாளி என்கிறீர்கள்;
ஆனால் பின்பற்றுவதில்லை.
என்னை அழகன் என்கிறீர்கள்;
ஆனால் என்னை நோக்குவதில்லை.
என்னைச் செல்வந்தன் என்கிறீர்கள்;
ஆனால் என்னிடம் கேட்பதில்லை.
என்னை நிரந்தரம் என்கிறீர்கள்;
ஆனால் என்னை அண்டுவதில்லை.
என்னை உயர்ந்தவன் என்கிறீர்கள்;
ஆனால் எனக்குச் சேவை செய்வதில்லை.
என்னைப் பெருந்தன்மையாளன் என்கிறீர்கள்;
ஆனால் நம்புவதில்லை.
என்னைப் பலசாலி என்கிறீர்கள்;
ஆனால் கௌரவிப்பதில்லை.
என்னை நேர்மையாளன் என்கிறீர்கள்;
ஆனால் அஞ்சுவதில்லை.
ஆகவே உங்களை நான் புறக்கணித்தால்,
என்னைக் குற்றம் சாட்டாதீர்கள்!

தகவல்: கமல்



கடலூரின் பிரபல ஜவுளி வியாபாரி ஸ்ரீ S. ஹரிஹரன் (செல்லமய்யர் & கம்பெனி) அவரகளது குமாரத்தி Dr. H. லலிதா M.B.B.S., 26-3-79 அன்று திருமணமாகி அவருடைய கணவர் திரு S. கணேஷ் M.S. M.B.A (USA) அவர்களுடன் 23-6-79 அன்று இரவு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் அமெரிக்காவுக்குப் பயணமானார்கள். டாக்டர் லலிதாவும் திரு கணேஷ் அவர்களும் அனைத்துச் செல்வங்களும் பெற்று நல்வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாப்பாவுக்கு ஒரு கதை உருவாகிறது!

'அழகவன்'

"அப்பா, அப்பா! நேத்திக்குச் சொன்னியே அந்தக் கதையைச் சொல்லுப்பா" - என்றாள் மஞ்சு.

சற்றுக் கண்களை மூடி யோசித்துச் சொல்ல வேண்டிய கதையைக் கிரகித்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார் ரத்னகிரி. "ராட்சஸருங்க எல்லாம் எதிர்ல வராங்களா... அப்ப ராணி பயந்து போயிடறாங்க..." என்று அவர் கதையைச் சொல்லிக் கொண்டே போனபோது இடைமறித்தாள் மஞ்சு.

"ராட்சஸருங்கன்னா யாருப்பா அவுங்க? அவுங்களைப் பார்த்து ராணி ஏன் பயந்தாங்க? அவங்க எப்படிப்பா இருப்பாங்க?" – என்று நான்கைந்து கேள்விகளைப் போட்டாள். மஞ்சுவின் பழக்கங்களில் கேள்வி கேட்பதும் ஒன்று.

"ராட்சஸருங்கன்னா அவுங்க ரொம்பக் கெட்டவங்க... தலைக்கு மேலே பெரிசா... மாட்டுக்கெல்லாம் இருக்கு பாரு... அது மாதிரி ரெண்டு கொம்பு முளைச்சிருக்கும்.. வாயின் ரெண்டு பக்கத்திலும் கடைவாய்ப் பல்லு பெரிசு பெரிசா நீண்டிருக்கும். உடம்பு பூரா ஒரே ரோமமாயிருக்கும். பெரிய பெரிய முட்டைக் கண்கள் இருக்கும். கால்கள் தரையில் படாது. கையில் பெரிய சூலாயுதம்... ஈட்டி இதெல்லாம் இருக்கும்..." என்று ரத்னகிரி கற்பனையை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும் போதே, சமையலறையிலிருந்து "ஐயோ .. ஐயோ... கடவுளே"... என்ற குரல் வந்தது. அதைத் தொடர்ந்து படுக்கையறைக்குள் பிரசன்னமானாள் ரத்னகிரியின் சகதர்மிணி.

"எத்தனை தரம்தான் சொல்றது உங்களுக்கு? சின்னப் பிள்ளைகளுக்கு அதுவும் இருட்டிப் போனப்புறம் இம்மாதிரிப் பேய் பிசாசு பூதம்... இந்த மாதிரிக் கதைகளை யெல்லாம் சொல்லாதீங்கன்னு. ராத்திரி தூக்கத்துல குழந்தை பயந்து டாது? ... என்று படபடவென்று பொரிந்தவள் மஞ்சுவின் பக்கமும் திரும்பினாள். "கதை வேற கேக்கறியா? அதுவும் பிசாசுக்கதை? பேசாமல் தூங்குடி" – என்று ஓர் அதட்டல் போட்டாள். சட்டென்று கண்களை மூடிக் கொண்டாள் மஞ்சு. அம்மாவிடம் அவளுக்கு எப்போதுமே பயம்.

அடுத்தநாள் ஆபீஸுக்குள் நுழைந்த போது ஒரே பரபரப்பாக இருந்தது. ரத்னகிரி உள்ளே நுழைந்தபோதே வாசலிலேயே ஓடிவந்து "சார்! சார்! கேள்விப்பட்டீங்களா? நம்ம சுந்தரத்தோட மனைவி செத்துப் போயிட்டாளாம். பாவம்" என்று தகவலைச் சொன்னான் பாஸ்கர். அவரைச் சட்டென்று அதிர்ச்சி தாக்கியது. அடக்கடவுளே கமலமா இறந்து விட்டாள்? இரண்டு மாதங்களுக்கு முன்பு கூடப் பார்த்தேனே?

"பாவம் சார்.. இப்பத்தான் மாசமா இருந்தது அந்தப் பொண்ணு. என்ன காய்ச்சலோ நோயோ தெரியலை. மகராசி போய்ச் சேர்ந்துட்டாள். இவன் என்ன பண்ணப் போறானோ... ப்ச... நல்ல பையன்" – என்று மேலும் வருத்தப்பட்டான் பாஸ்கர்.

சுந்தரம் நல்ல பையன். அலுவலகத்தில் எல்லார் கவனத்தையும் கவர்ந்தவன். எல்லாரிடமும் மரியாதையாகப் பழகுகிறவன். அவனுக்கு ஏன் இந்தச் சோதனை? மனைவி உடம்பு கிடம்பு சரியில்லையென்று இருந்திருப்பாளோ? அப்படியொன்றும் கூடத் தகவல் இல்லையே.

அவருக்குச் சுந்தரத்தை மிகவும் பிடிக்கும். அதற்கு முதலாவதான காரணம் அவனுடைய தோற்றம்தான். பார்ப்பதற்கு வாட்டசாட்டமாய் ஓர் அழகிய திரைப்படக் கதாநாயகனைப் போலிருப்பான் சுந்தரம். பெயருக்கேற்ற அழகு. சுருள் சுருளான கேசம். சிவந்த நிறம். நறுக்கிய மீசை. அவன் எதற்காகவாவது சிரித்தானென்றால் முத்துப்பற்கள் ஓர் இளம் பெண்ணுக்கு அமைந்திருப்பதைப் போன்று அமைந்திருக்கும்.

ஒருநாள் ரத்னகிரி தமது மகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்த போது "ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவன் அழகுன்னா அழகு - கொள்ளை அழகு. ரொம்ப ரொம்ப அழகு. அவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஏழு தேசத்து ராஜகுமாரிகளும் ஆசைப் பட்டாங்க" – என்று ஆரம்பித்த



போது வழக்கம் போல் குறுக்கிட்ட மஞ்சு ''எம்ப்பா அழகுன்னு எவ்வளவு அழகாயிருப் பான்?'' — என்று கேட்டாள்.

இவளுக்கு அழகைப் பற்றி எப்படி வர் ணிப்பது? யாரை அடையாளம் காட்டுவது? சட்டென்று சுந்தரத்தின் ஞாபகம் வந்தது ரத்னகிரிக்கு. சுந்தரம் நிறைய தடவை வீட்டுக்கு வந்திருக்கிறான். மஞ்சுவைத் தூக்கி விளையாடியிருக்கிறான். அவளுக் குச் சாக்லேட் வாங்கித் தந்திருக் கிறான். அவனிடம் அவளுக்கும் ரொம்பப் பிரியம். அவர் சொன்





னார்: ''நம்ம வீட்டுக்கு வருவாரே, உங்களுக் சாக்லேட் டப்பா வாங்கி வருவாரே சுந்தரம் மாமா... அவர் மாதிரி ரொம்ப அழகு...'' என்று சொல்லிக்கூட [illegible] திருக்கிறாள் ரத்னகிரி. அந்த [illegible] அவளைத் தவ [illegible] வரிக்கத்து வன் இந்தச் [illegible] இவளுக்கு [illegible] போய்

இந்தச் சின்ன வயதில் ஏன் இப்படியெல்லாம் சோதனை? அடக் கடவுளே, ரத்னகிரிக்குக் கடவுள் மீது கூட எரிச்சல் எரிச்சலாக வந்தது.

அலுவலகத்துக்கு லீவு போட்டு விட்டு உடனே கிளம்பினார். அவர் மட்டுமா? அலு வலகத்தில் எல்லாருமே கிளம்பினார்கள். நேரே கடைக்குப் போய் ஊதுவத்தி, பூக்கள், மலர் வளையங்கள்... இவை எல்லாம் வாங்கிக் கொண்டு பசவன் குடியிலுள்ள அவனுடைய வீட்டைத் தேடிச் சென்றார்கள் அவர்கள்.

அந்தத் தெருவின் எந்த வீட்டிலுமே சாவு நிகழ்ந்ததற்கான அடையாளம் ஏதும் இல் லாமற்போனது அவர்களுக்கு ஏமாற்றத் தையே அளித்தது. ''இதோ இதுதான் சுந்தரம் வீடு'' — என்று பாஸ்கர் காட்டிய குறிப்பிட்ட வீடும் சராசரி வீடாகவே இருக்க வும், மற்ற நண்பர்களைச் சற்று தூரத்திலேயே நிறுத்திவிட்டு 'நோட்டம்' பார்த்து வரு வதற்காக ரத்னகிரியும் இன்னொரு நண்பரும் அந்த வீட்டுக்குச் சென்றனர். வீட்டுக் கதவைத் தட்டியதும் —

அவர்களுக்குத் [illegible] து.

கதவைத் [illegible] வள் - சுந்தரத்தின் மனைவி.

ரத்னகிரிக்கு [illegible] கள்

[illegible] மணத்துக் [illegible]

அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்கே ஒரு தரம் வந்திருக்கிறானே சுந்தரம்.

ரத்னகிரியைப் பார்த்ததும் வணக்கம் சொன்னாள் அவள். அவளுடைய முகம் கலங்கியிருந்ததைக் கவனித்தார் ரத்னகிரி. இடுப்பில் ஒன்றரை வயது மதிக்கத்தக்க குழந்தையொன்று இருந்தது.

அவளைப் பார்த்ததும் என்ன செய்வது, என்ன பேசுவது என்று தெரியாமல் தடுமாறிப் போய் விட்டார் ரத்னகிரி. ஒரு வாறுகச் சமாளித்துக் கொண்டு — ''சுந்தரம் இல்லியாம்மா?'' — என்று கேட்டார்.

இல்லையென்று தலையாட்டினாள்.

''பின்னே அவனிடமிருந்து காலையில ஒரு ஃபோன் வந்துச்சேம்மா அதுல அவன்..'' என்று வாக்கியத்தை முடிக்காமல் தயங்கினார்.

''மனைவி செத்துட்டான்னு சொன்னாங்களா?'' அவள் கேள்வி அதிர வைத்தது.

''ஆமாம்.''

''அது உண்மைதாங்க'' — என்றாள் அவள் அமைதியாக. ரத்னகிரிக்கு இப்போது பயத்துடன் கூடிய குழப்பம் வந்தது. இது என்னடா இது, வித்தியாசமான சமாசாரம்? ஊரெங்கும் ஓடிக் கொண்டிருக்கிற பேய்ப் படங்களின் சம்பவம் ஒன்றைப் போல...

''ஃப்யூனெரல் அட்டெண்ட் பண்ணத்தானே வந்தீங்க? விக்டோரியா ஆஸ்பத்திரி மார்ச்சுவரிக்குப் போனீங்கன்னா பாடியைப் பார்க்கலாம். பாடி அங்கேதான் இருக்காம். அவரும் அங்கதான் இருக்கார்.''

''....''

''என்னங்க திகைச்சுப் போயிட்டீங்க? நான் ஊருக்குத்தான் அவருடைய மனைவி. அவரைப் பொறுத்த வரை யமுனான்னு ஒரு பொண்ணு. அதுதானுங்களே அவருடைய மனைவி. அல்சூரிலே தனி வீடெடுத்து அவளோட தனிக் குடித்தனம்தான் பண்ணிக்கிட்டிருந்தார் இவ்வளவு நாளாய். என்னை அவர் கைவிட்டு ஒரு வருஷத்துக்கு மேல் ஆகப் போறது. மாசாமாசம் பணம்மட்டும் கொடுத்திடுவார். எப்பவாச்சும் வருவார். பாவம் அந்தப் பொண்ணு. மாசமா வேற இருந்திருக்கா. போயிட்டா'' ... அவள் கண்கள் கலங்கின.

''ஒரு நிமிஷம் இரும்மா'' — என்று அவளைக் கையமர்த்தி விட்டு வெளியில் வந்த ரத்னகிரி மற்றவர்களிடமெல்லாம் விஷயத்தை ஒருவாறுகச் சொல்லி விக்டோரியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார். தான் போக வேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை. மறுபடியும் வந்து சுந்தரத்தின் மனைவியிடம் ஒரு பத்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆபீசுக்குப் போய் அலுவலில் மூழ்கினால் தேவலை போல் இருந்தது. மறுபடியும் சந்திப்பதாகச் சொல்லி விடைபெற்றுக் கொண்டு அலுவலகம் வந்து வேலையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முயற்சி செய்தார். வேலை செய்ய முடிந்தால்தானே?

அலுவலகத்தில் நண்பர்களுக்கும் ரத்னகிரிக்கும் மிகவும் சாந்தமும் கண்ணியமும் பொருந்திய வாலிபனாகத் தோற்றம் அளித்து வந்த சுந்தரம் அந்தரங்க வாழ்க்கையில் சுத்தமானவனாக இல்லை. பெண்கள் விஷயத்தில் சராசரி பலவீனம் உள்ளவனாக மட்டும் அல்ல, பச்சையாகச் சொல்லப் போனால் மிகவும் கீழ்த்தரமாகவே இருந்திருக்கிறான். இவனுடைய வலையில் மாட்டியவள்தான் யமுனா. தன்னுடைய திருமணத்துக்குப்பின் இவளுடன் இரகசியத் தொடர்புகள் வைத்திருந்திருக்கிறான். தனக்குத் திருமணமான விவரத்தை இவளிடம் தெரிவிக்காமலேயே, இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாக வாக்குறுதி தந்திருக்கிறான். கல்லூரியில் பி. ஏ. முதல் வருடம் படித்துக் கொண்டிருந்த அந்தப் பெண் இவனுடைய வார்த்தையை நம்பி, பெற்றோரையும் பகைத்துக் கொண்டு இவனிடம் வந்திருக்கிறாள். அல்சூரில் தனி வீடெடுத்து அவளை இவ்வளவு நாட்களாக வைத்திருந்திருக்கிறான். மனைவியையோ குழந்தையையோ சிந்துவதில்லை. எப்போதாவது 'தாலி கட்டிய கடமை'க்காகவும், அவன் வேண்டும் போதெல்லாம் மறுப்புச் சொல்லாமல் கட்டிலில் படுத்தவள் என்ற காரணத்துக்காகவும் சென்று பார்த்துப் பணமும் கொடுத்து வருவான். இவனிடம் வந்த பிறகும் கல்லூரிக்குப் போய் வந்து கொண்டிருந்த யமுனாவுக்கு உண்டாகி விடவே கல்லூரியை விட வேண்டியதாயிற்று.

சம்பவ தினமான நேற்று இவன் அலுவலகத்திலிருந்து போன பிற்பாடு அவர்களுள் ஏதோ ஒரு சின்னத் தகராறு உருவெடுத்திருக்கிறது. பேச்சோடு பேச்சு வளரவே ''சரிதான் பேசாம இருடி. என்னை ஏமாத்தினது போல் இன்னும் எத்தனை பேரை ஏமாத்தியிருக்கியோ. வயித்திலே இருக்கிற

''உங்க கம்பெனியிலே மாடா உழைச்சதுக்கு இதுதான் சம்பளமான்னு எங்க முதலாளியைக் கேட்டது தப்பா போச்சு.''

''ஐயையோ! வேலையை விட்டு நீக்கிட்டாரா?''

''அதில்லே. இந்த மாதம் சம்பளத்துக்குப் பதிலா புண்ணாக்கு, பருத்திக்கொட்டை மூட்டை வாங்கி அனுப்பிட்டார்!''

— அன்பில் ஜெயபால்



குழந்தைக்குக் கூட எவன் தகப்பனென்று யாருக்கு தெரியும்?'' — என்று கேட்டிருக்கிறான் இந்த யோக்கியன். மானமுள்ள அந்த அப்பாவிப் பெண் இந்த ஒரு வார்த்தையைப் பொறுக்க முடியாமல் விடுவிடென்று ஓடிப்போய்ப் பக்கத்திலிருந்த கிணற்றில் விழுந்திருக்கிறாள். அக்கம்பக்கத்திலிருந்து நிகழ்ச்சியைப் பார்த்தவர்கள் சட்டென்று கிணற்றுள் குதித்துக் காப்பாற்ற முயற்சி செய்தும் பிரயோசனமில்லை. ஏற்கெனவே கர்ப்பிணியான பெண்ணானதால் கிணற்றுக்கு வெளியே எடுத்துப் போட்டவுடன் வயிற்றை அமுக்கிக் குடித்திருந்த தண்ணீரை வெளியே எடுக்கச் செய்வதற்கு வழியில்லாமல் போய் விட்டது. அந்தப் பெண் அநியாயமாகச் செத்துப் போயிருக்கிறாள்.

இவ்வளவு அழகான இந்தச் சுந்தரத்துக்குள் இப்படி வேறொரு மனிதனும் இருப்பான் என்று ரத்னகிரியால் நம்பக்கூட முடியவில்லை. எல்லாம் ஏதோ கதைபோல இருக்கிறது. கனவுபோல் இருக்கிறது. தன்னுடைய மனத்தில் கட்டிப் பத்திரப் படுத்தி வைத்திருந்த ஒரு மகோன்னத மாளிகை கிடுகிடுவென்று இடிந்து தரைமட்டமாகியது போன்ற உணர்வு மட்டும் அவர் மனசை அடைத்துக் கொண்டு நின்றது. அன்று முழுதும் அவருக்கு வேலையே ஓடவில்லை.

இரவு.

படுக்கையில் படுத்ததும், ''அப்பா நேத்திக்குப் பாதியில் விட்டியே அந்தக் கதையைச் சொல்லுப்பா'' — என்றாள் மஞ்சு.

நேற்றைக்குத் தான் சொன்ன கதை என்னவென்று ரத்னகிரிக்கு உடனே ஞாபகம் வரவில்லை.

''அப்பா. ராட்சஸருங்க கதைப்பா. அவங்க எப்படி இருப்பாங்கன்னு சொல்லுப்பா'' — என்று ஞாபகப் படுத்தினாள் அவள். அவர் கதையைத் தொடர்ந்தார். ''ராட்சஸருங்க ரொம்ப அழகா இருப்பாங்க. வட்டமான அழகான முகம். ரோஜாப்போல செவந்த நிறம். குறுகுறுன்னு கண்கள். சின்னதா அழகா நறுக்கிவிட்ட மீசை. சுருள் சுருளா வாரிய தலைமயிர். வாட்டசாட்டமான தோற்றம்... இப்படி இருந்தாத்தான் ராட்சஸருங்க... ராட்சஸருங்க இப்படித்தான் இருப்பாங்க. நம்ம வீட்டுக்கு வருவானே, உனக்கும் சாக்லேட் டப்பா வாங்கி வந்தானே... அவன் மாதிரி... அவனேதான்...''

அவர் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

''போப்பா நீ பொய் சொல்றே'' — என்று சிணுங்கினாள் மஞ்சு. ரத்னகிரிக்குக் கோபம் வந்தது. ''ராட்சஸருங்க அழகாய், ரொம்ப அழகாய்த்தான் இருப்பாங்க'' — என்று அழுத்திச் சொன்னார் அவர்.



இரவு பகலாக...!

நடமாடும் மருத்துவமனை, நடமாடும் நீதிமன்றம் போன்று, நடமாடும் 'சாலையொளி பரிசோதனை நிலையம்' ஒன்றினை பிலிப்ஸ் நிறுவனத்தார் அறிமுகப் படுத்தியுள்ளனர். சாலைகளில் ஒளி போதுமான அளவில் உள்ளதா, சாலையின் மேல்பரப்பு ஒளியை எந்த அளவில் பிரதிபலிக்கிறது போன்றவற்றைக் கணக்கிட்டுப் பின்னால் தேவைப்படும்போது பயனாகப் பதிவு செய்து வைத்துக் கொள்கிறது இந்தப் பரிசோதனை சாலை.

அதே நேரத்தில் சாலையில் ஒளி அமைப்பை அபிவிருத்தி செய்ய, எந்த இடத்தில், எவ்வளவு சக்தியுள்ள, எந்த மாதிரி விளக்கை, எவ்வளவு உயரத்தில், எந்தக் கோணத்தில் அமைக்கவேண்டும் என்ற ஆராய்ச்சிகளையும் நிகழ்த்திப் பார்த்து ஆக்க பூர்வமான யோசனைகளையும் நகராட்சிக்கு இந்தப் பரிசோதனைச்சாலையால் வழங்க முடியும். இதற்குரிய பலவித உபகரணங்களும் இந்த வாகனத்துக்குள்ளேயே இருக்கின்றன.

தியாக வல்லவன்

விக்கிரமன்

அத்தியாயம் 16

வாக்குத் தவறாதவர்!

துங்கபத்திரை ஆறு பெரும் சுழலுடன் ஓடிக் கொண்டிருந்தது. நதிக்கரையில் படித்துறையில் அமர்ந்து சந்திரப்பிரபா, பிரவாகத்தையே உற்று நோக்கியவாறிருந்தாள். அவள் உள்ளத்தில் எழுந்த பெரும் சுழற்சி, சிந்தனைப் பிரவாகமாய்ப் பெருக்கெடுத்துக் கரையை மீறிப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்தது.

அவள் ஓட்டிவந்த கன்று காலிகள் நதிக்கரை ஓரம் மேய்ந்து கொண்டிருந்தன. அவள் நேரம் போவது தெரியாமல் அமர்ந்து கொண்டிருந்தாள். இன்று வருவார், நாளை வருவார் என்று அவள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வல்லபன் வரவில்லை. தெற்கே கங்காபுரிக்கு எதற்காகச் சென்றார் என்று அவள் அறியாமல் பல நாட்கள் இருந்தாள். பிறகு தந்தையை வற்புறுத்தி வற்புறுத்திச் செய்தி அறிந்து வரச் செய்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அந்தச் செய்தி வந்திருந்தது. அவளுடைய தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் வல்லபன் சோழநாட்டு இளவரசராகப் போவதைக் குறித்துத் தெரிவித்தார். தம் மகள் மனம் மகிழ்ச்சியால் துள்ளும் என்று எண்ணினார். ஆனால், அதற்கு மாறாகச் சந்திரப்பிரபா மௌனமாகி விட்டாள்.

அவர்: காலாகாலத்தில் உங்க பையனுக்கு ஒரு கால் கட்டுப் போடுங்க. கண்ட பெண்கள் பின்னாடியும் சுத்துறான்!

இவர்: போடலாம்தான்! ஆனால் இரண்டாம் தாரமாக அவனுக்குக் கழுத்தை நீட்ட எவள் சம்மதிப்பாள்?

- உ. ராஜாஜி



சரியாக உண்பதில்லை. உறக்கத்திலும் வல்லபன் நினைவுதான். நதிக்கரைக்குச் சென்றால், பிரவாகத்தைப் பார்த்தவாறு நேரம் போவது தெரியாமல் இருக்கிறாள். தாயற்ற அவளை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் அவள் தந்தை தவித்தார்.

“மகளே, இப்படி நீ கவலையுடன், ஊண் உறக்கமின்றி இருந்தால் உன் உடல் நிலை என்னவாகும்?” என்று அவள் தந்தை கூறி அவளைத் தேற்ற முற்பட்டார்.

சந்திரப்பிரபாவின் விழிகளில் நீர் தளும்பியது. “நான் அவரைப் பார்க்க வேண்டும் அப்பா” என்று கூறி விம்மினாள் அவள்.

அவள் தந்தை திடுக்கிட்டார். “அவரைச் சந்திப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமா, மகளே!” என்று கவலையுடன் கேட்டார்.

“என்னைப் பொறுத்தவரை எளிதுதான்” என்றாள் சந்திரப்பிரபா.

“தெற்கே வெகு தொலைவில் கங்காபுரி இருக்கிறது” என்றார் அவள் தந்தை.

“இருக்கட்டுமே! என் மனம் இப்போது அங்குதான் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அவர் இளவரசராகப் போகிறாராம். இப்போது அவர் என்ன செய்து கொண்டிருப்பார் என்று நினைத்துப் பார்க்கிறேன்” என்று, நதியின் ஓட்டத்தைப் பார்த்தவாறு கூறினாள் சந்திரப்பிரபா.

“இப்படியே நினைத்துக் கொண்டிருந்தால் அவரைப் பார்த்தது போலாகி விடுமா?” என்று அவள் தந்தை சலிப்புடன் கேட்டார்.

“அவரை நான் அதோ காண்கிறேன். என்னைப்பார்த்து அவர் புன்முறுவல் பூக்கிறார். நான் அவரைப் பார்த்துப் பேசுகிறேன். ‘என்னை மறந்து விட்டீர்களா?’ என்று கேட்கிறேன். அவர் அதோ தலையை அசைக்கிறார். அவர் என்னை மறக்கவில்லை” என்று உணர்ச்சி நிறைந்த குரலில் பேசினாள்.

“மகளே! அவர் உன்னை மறக்காமலிருக்கலாம். ஆனால், அவர் இப்போது இளவரசராகப் போகிறார். அவரை அடைய உன்னால் முடியாது. அவரை நீ மறந்து விடுவதுதான் உனக்கும் நல்லது அவருக்கும் நல்லது” என்று கூறி மகள் மனத்தை மாற்ற முயன்றார் தந்தை.

சந்திரப்பிரபா தந்தையை நோக்கிச் சீறினாள். "அதெப்படி அப்பா முடியும்? எங்களிடையே ஏற்பட்ட காதல் பதவி, அந்தஸ்து, பட்டம் இவற்றிற்கும் மேம்பட்டது. இதே துங்கபத்திரை நதிக்கரையில் அவர் என்னைச் சந்திப்பார். அவரது இலட்சியங்கள் சாதாரணமானதாக இருக்கவில்லை. அவர் வேங்கியின் அரியணையில் அமர்வதற்கு முயன்று கொண்டிருந்தார்..." என்று அவள் கூறும்போது, அவள் தந்தை குறுக்கிட்டு, "ஆமாம். அவருக்கு நானே பொருளும், ஆள்பலமும் கொண்டு உதவ முன்நின்றேன். நிற்கிறேன்" என்றார்.

"அப்படியென்றால், அவர் இந்த நாட்டு அரசராவார் என்பது உறுதிதானே" - சந்திரப் பிரபா கேட்டாள்.

"ஆமாம்; அதிலென்ன சந்தேகம்? வல்லபன் தெற்கே கங்காபுரிக்குச் செல்லாமல் இருந்திருந்தால் நிச்சயம், அரண்மனையை முற்றுகையிட்டு, ஆட்சியைப் பிடித்திருக்க முடியும்" என்றார்.

"அது அவருக்கும் தெரியுமில்லையா?"


"ஆகா; வல்லபன் நன்றாக அறிவான். என்றாவது ஒருநாள் தனது பாட்டனாரின் வாரிசாக, கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகி விடுவோம் என்ற உறுதி அவனுக்கு இருந்தது. அதனால்தான் கங்காபுரியிலிருந்து பல முறை வேங்கிக்கு வந்து சென்றிருக்கிறார்."

"கீழைச் சாளுக்கிய நாட்டு அரசராகும் உறுதி படைத்து, அவர் என்னைக் காதலித்தார் என்பதைத் தாங்கள் அறிவீர்களல்லவா?"

"ஆமாம் மகளே!"

"வேங்கியின் அரசருக்குச் சாதாரண குடி மகளின் மீது அன்பு ஏற்படக் காரணம் என்ன?"

சந்திரப்பிரபா இவ்வாறு கேட்டவுடன் அவள் தந்தை மெல்ல நகைத்தார். "மகளே! இதற்கு விடை கூற எனக்குத் தெரியாது. காதல் எந்தக் கட்டுப்பாட்டையும் மீற வல்லது என்று இளம் வயதினர்கள் சொல்கிறார்கள். இளம் வயதினர் எந்தக் காலத்திலும் அப்படித்தான் சொல்லி வந்தார்கள். அதனால்



நீ அவ்வாறு சொல்வதிலும் தவறில்லை. வல்லபனுக்கு உன் மீது அழியாத அன்பு இருக்கிறது என்று எப்படி நீ உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்?'' என்றார்.

''எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதே நதிக் கரையில் இதே மண்டபத்தில் அமர்ந்து அவர் உறுதியளித்திருக்கிறார். அதற்குச் சாட்சியாக அவர் தமது மோதிரத்தை எனக்கு அளித்திருக்கிறார்'' என்றாள்.

அவள் தந்தை மெல்லச் சிரித்தார். அதில் நம்பிக்கை மிக்க குறைவாக இருப்பது புலப்பட்டது.

''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் சந்திரப் பிரபா.

''இளம் பெண்களிடம் வாக்குறுதியளிப்பது வாலிபர்கள் வழக்கம். பெரிய மலைகளின் மீது ஏறுவதாகவும், வானத்தை எட்டிப் பிடிப்பதாகவும் கூறுவார்கள். துஷ்யந்தன், சகுந்தலை கதை தெரியுமல்லவா?'' என்றார் அவள் தந்தை.



''அதோ போகிறாரே போஸ்ட்மாஸ்டர் அவர் தலை ஏன் நிக்காமல் ஆடிண்டே இருக்கு?''
''அதுவா 8மணி நேரம் தினமும், போஸ்ட் கார்டா இல்லே, கவரா, இன்லாண்ட் லெட்டரா இல்லே இல்லேன்னு தலையை ஆட்டி, ஆட்டி, நிக்காமல் ஆடிண்டே இருக்கு!''

''தெரியும் அப்பா. ஆனால் அவர் துஷ்யந்தரல்லர். அவர் வாக்குத் தவறாத சோழர் பரம்பரையில் வந்தவர். அவர் ஏமாற்ற மாட்டார்'' என்றாள் சந்திரப்பிரபா.

''உன்னிடம் விரைவில் வருவதாக உறுதியளித்துச் சென்றார். கங்காபுரியில் இளவரசர் பதவி காத்திருப்பது அவருக்குத் தெரிந்திராதா? தெரிந்தும் உறுதி அளித்துச் சென்றிருக்கிறார். இனி அவர் வேங்கிக்குத் திரும்ப மாட்டார். எனக்குக் கிடைத்த செய்தியிலிருந்து இளவரசர்ப் பட்டாபிஷேகத்துக்கான நாள் குறிப்பிட்டு விட்டார்களாம். மகோன்னதமான சோழ நாட்டின் இளவரசராகிறவர், நினைத்தபோது வேங்கிக்கு ஓடி வருவார் என்று கனவு காண்கிறாயா மகளே?'' என்றார்.

''கனவு இல்லை, தந்தையே! உறுதியாக நம்புகிறேன். அவர் வருவார். என்னைத் தேடி வருவார்...'' என்று சந்திரப்பிரபா கூறும்போது அவள் குரலில் அழுத்தம் நிறைந்திருந்தது.

இப்போதும் அவள் தந்தை நகைத்தார். ''மகளே! சோழ நாட்டின் இளவரசராக வல்லபன் பதவி ஏற்கும்போது தன்னருகே இளவரசியை அமர வைத்துக் கொள்ள வேண்டும். அரச குடும்பத்து மங்கையரை இந்த நாட்களில் தேர்ந்தெடுத்திருப்பார்கள். சாதாரணக் குடிமகன் வயிற்றில் பிறந்த உன்னை, வல்லபன் ஏன் நினைக்கப் போகிறான்?'' என்றார்.

சந்திரப்பிரபா திடுக்கிட்டாள். ஒரு நாட்டின் சாதாரணப் பிரஜை அரசியாக ஆக முடியாதா? இளவரசியாக முடியாதா? காதல் என்பது அரச குலத்துக்கு மட்டும் தானா? அவள் மனத்தில் அச்சம் இப்போது தோன்றியது. மகளுடைய முக மாற்றத்தைக் கண்ட அவள் தந்தை, ''ஆமாம் மகளே! வல்லபன் இப்போது சாதாரண வல்லபன் அல்லன். இப்போது மிக மரியாதைக்குரிய சோழ நாட்டிளவரசர் வல்லபன். அவருக்கு மணம் முடிக்க மலையமான் தீவிரமாக இருக்கிறார். சோழ நாட்டுப் படைத் தலைவர் தன் மகளை மணம் புரிவிக்க முனைந்திருக்கிறார். அந்தக் கடும் போட்டியிடையே நீ ஆடிக் காற்றில் பறக்கும் துரும்பு! மகளே, வல்லபனை மறந்து விடு'' என்று கண்டிப்பாகக் கூறினார்.

சந்திரப் பிரபா நதிச் சுழலைப் பார்த்தவாறிருந்தவள் ஆவேசம் வந்தவள் போல், ''முடியாது, முடியாது மறக்க முடியாது. அவரே என்னை மறந்து விட்டாலும் நான் மறக்க மாட்டேன். அதோ அவர் கையை அசைக்கிறார். உன்னை நான் மறக்கவில்லை'' என்கிறார். கையை நீட்டி என்னை அணைத்துக் கொள்ள அழைக்கிறார். நான் இதோ புறப்படுகிறேன்'' என்று கூறி நதிப் பிரவாகத்தில் பாய முற்பட்டவளை, நொடியில் தந்தை தடுத்து, ஆற்றங்கரைக்கு அருகே உள்ள மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.

''என்ன காரியம் செய்யத் துணிந்தாய் மகளே! இந்த நதி கங்காபுரிக்குச் செல்லவில்லை. சமுத்திர ராஜனை நோக்கி விரைகிறது. அங்கு செல்லவா நீ விரும்புகிறாய்? நான் எதிர்பார்த்து எச்சரிக்கையாக இல்லாவிடில் என் அருமை மகளை இழந்திருப்பேன். வல்லபனும் அருமைக் காதலியை இழந்திருப்பான்...'' என்று வேதனையும், கண நேரத்தில் நிகழ இருந்த ஆபத்திலிருந்து மகளைக் காப்பாற்றியதால் ஏற்பட்ட பரபரப்பும் மிகப் பேசினார்.

''அருமைக் காதலியை இழந்திருப்பார்..'' –சந்திரப்பிரபா ஒரு முறை தனக்குத்தானே முணுமுணுத்தாள். அப்பொழுதுதான் தான் செய்ய இருந்த செயலின் பயங்கரத் தன்மை அவளுக்குப் புரிந்தது.

இரு கரங்களையும் முகத்தில் புதைத்துக் கொண்டு விம்மினாள். அவள் தந்தை அவளை மெல்ல அணைத்துக் கொண்டு, கண்ணீரைத் துடைத்து, ''பிரபா, மனத்தைத் தேற்றிக்

கொள். எட்டாத கனியை எண்ணிக் கால மெல்லாம் வேதனையுடன் வாழக் கூடாது. வல்லபனை மறந்து விடு. நம் உறவினருள், உனக்கேற்ற வரனை நான் முடிவு செய்திருக் கிறேன். நமது செல்வம் அழியாதது. அரசச் செல்வம் அழிந்துவிடும். நம் மந்தையிலுள்ள பசுக்களின் எண்ணிக்கை உனக்குத் தெரி யுமா? இருபதினாயிரம் பசுக்கள்!... நீ ஓர் அரசி போல் வாழலாம். வல்லபனை மறந்து விடு மகளே!'' என்றார்.

அவருடைய கரங்களை விலக்கி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''முடியாது, முடியவே முடியாது. அவரை மறக்கவே முடியாது. நான் இப்போதே அவரைப் பார்த்தாக வேண் டும், அப்பா! நான் அவரை உடனே சந்தித் தாக வேண்டும்'' என்றாள்.

அவளுடைய தந்தைக்குப் பயம் ஏற்பட்டு விட்டது. வல்லபனைச் சந்திக்கப் போகிறேன் என்று, நதி வெள்ளத்தில் குதித்து விடப் போகிறாளே என்ற அச்சத்தில், ''வேண் டாம் மகளே, வீணே உயிரை மாய்த்துக் கொள்ளாதே மகளே! நீ இந்த உலகைவிட்டுப் போன பிறகு நான் மட்டும் யாருக்காக வாழ வேண்டும்?'' என்று கண் கலங்கிக் கூறினார்.

பிரபாவின் முகத்தில் முறுவல் பூத்தது. ''நான் உயிரைவிட விரும்பவில்லை, அப்பா! எதற்காக நான் சாக வேண்டும்? என் உயிருக் குயிரானவர் என்னை மறந்து விட்டார் என் றோ, மறுத்து விட்டார் என்றோதான் நான் இந்த உலகை விட்டுப் பிரிய முற்படு வேன். என்னை அவர் இருப்பிடத்துக்கு அழைத் துச் செல்லுங்கள்.'' என்றாள்.

''மகளே! நீ என்ன சொல்கிறாய்? கங்கா புரிக்குச் சென்று, அங்கே அவர் இளவரசராக விளங்குவதைப் பார்த்து நீ வருத்தப்படப் போகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை, இல்லை. நான் கங்காபுரிக்குச் செல்ல வேண்டும். அங்கே அவரை ஒரே ஒரு முறையாவது பார்க்க வேண்டும். என்னை அவர் பார்த்து விட்டால் அவர் என்னை மறுக்க மாட்டார். என்னை உடனே கங்காபுரிக்கு அழைத்துச் செல்லுங்கள், என் அருமைத் தந்தையே!'' என்று அவள் குழைந்தாள்.

அவள் தந்தை பலவாறாக எடுத்துச் சொல்லிப் பார்த்தார். கங்காபுரிக்குச் செல்லப் பல நாட்களாகுமென்றார். பயணத்தில் பல துன்பங்கள் நேரும் என்றார். காரணங்களை ஏற்கவில்லை.

கடைசியில், பிரபாவின் வேண்டுகோள் வென்றது. கங்கை கொண்ட சோழபுரத்திற்கு சந்திரப் பிரபாவை அழைத்துச் செல்வதென்று அவள் தந்தை முடிவு செய்தார்.

வல்லபன் தன் காதலைக் குறித்துத் தன் தாயிடம் கூறியவுடன் செல்வியின் முகம் மாறியது. வேங்கியில் தான் மனத்திலே ஏற்றிக் கொண்ட சந்திரப்பிரபாவை ஏற்றுக் கொள்ளத் தாய் சம்மதிப்பாள் என்று வல்ல பன் உறுதியாக நம்பினான்.



இன்று இந்தியாவிலேயே, மிக அதிகமான மனைவிகளை உடைய மனிதன் யார் தெரியுமா?

நாகாலாந்திலுள்ள 'லாங்வா' என்ற கிராமத்தின் தலைவர்தான்! இவருக்கு 60 பெண் டாட்டிகள். 'கோன்-யாக்' என்ற இந்த ஜாதியின ரின் தலைவருக்கு 'ஆங்' என்று பெயர். இந்த 'ஆங்' எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணக்கலாம் என்பது இவர்கள் சமூக விதி!

சம்பத் குமாரி

ஆதாரம்: 'ஸண்டே'

ஆனால் செல்வி தலையை அசைத்து விட் டாள்.

''மகனே! திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர். நீ செய்துகொள்ளும் திருமணம் இந்த நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடியதாக அமைந்துவிடக் கூடாது. இந்த நாட்டின் இளவரசனாக நீ விளங்கி ஆற்றும் கடமையில், உன்னை மணக்கப் போகும் இளவரசிக்கும் சமபங்கு உண்டு. ஆதலால், சக்கரவர்த்தி என்ன சொல்கிறாரோ அதன்படி நீ நடந்து கொள்வதுதான் நியாயம்...'' என்று அறிவுரை வழங்கினாள்.

வல்லபன் திடுக்கிட்டான். 'வேங்கி மகள் சந்திரப் பிரபாவை நான் மணக்கக் கூடாதா? அரசர் தேர்ந்தெடுக்கும் மங்கையைத்தான் நான் மணக்க வேண்டுமா? இது என்ன நியாயம்?' என்று வல்லபன் குமுறினான்.

சோழச் சக்கரவர்த்தி ராஜராஜனைச் சந் திக்க வல்லபன் விழைந்தான். வல்லபன் அவரைச் சந்திக்கச் சென்றபோது, திருச்சிற் றம்பலமுடையார் பெருமான் நம்பிப் பல்லவ ரையர் சக்கரவர்த்தியிடம் வல்லபன் திரு மணம் குறித்து விவாதித்துக் கொண்டிருந் தார்.

வல்லபனுக்குத் தன் மகளை மணம் புரிவித்து சோழ குலத்தோடு மணவினைத் தொடர்பு கொள்ள விரும்புவதாக அவர் தம் உள்ளக் கிடக்கையைத் தெளிவாகப் புலப்படுத் தினார். சோழ நாட்டிற்கு அவர் இதுவரை உண்மையாக ஆற்றிய தொண்டிற்கு ஒரு பரிசாக அவர், மன்னரைக் கேட்கிறார்.

நம்பியிடமிருந்து இப்படியொரு வேண்டு கோள் வரும் என்று ராஜராஜ சோழர் எதிர்பார்க்கவில்லை. (தொடரும்)


சத்து நிறைந்த
சிற்றுண்டி
குவாலிடியின் மாரி பிஸ்கட்டுகள் உணவுக்கு இடையில் ருசியான போஷாக்கு அளிக்கின்றன. தனிச் சிறப்பு கொண்ட ஆறு அடுக்குகளால் மிகவும் லேசான மிகவும் கரகரப்பான பிஸ்கட்டுகள் கிடைக்கின்றன. நுட்பமான உலை நிதானமான சூட்டில் சீரான பொன்னிற பிஸ்கட்டுகளை அளிக்கிறது. ஒவ்வொரு நிலையிலும் கண்டிப்பான தர நிர்ணயம். அத்துடன் நாலு உறை பாக்கெட்டுகள் குறிப்பிடத்தக்க கரகரப்பான புதிய ருசியைப் பாதுகாக்கின்றன.
குவாலிடி மாரி உலகத்தின் தலைசிறந்த பிஸ்கட் தயாரிப்பாளர்களின் தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட சிறந்த பிஸ்கட்டுகள்.
MARIE
குவாலிடி உயர்தர பிஸ்கட்டுகளைத் தயாரிக்கிறது
IS:1011
குவாலிடிஸ்
மாரி
பிஸ்கட்டுகள்
குவாலிடி ஃபுட் ப்ராடக்ட்ஸ்
பெங்களூர் 560039
ASP-KFP-7904



சிறப்பு மலர்களிலேயே சிறப்பானது!

வட்டமேஜை

● கல்கி இதுவரையில் வெளியிட்ட சிறப்பு மலர்களிலேயே சிறப்பானதும், பத்திரப்படுத்தி வைக்க வேண்டியதுமான மலர் என்று தமிழக முன்னேற்றச் சிறப்பிதழைக் குறிப்பிட்டால் மிகையாகாது.

மேட்டுப்பாளையம் பீட்டர்

● எல்லாக் கட்சிகளின் நிலையையும் ஒரு மிக்கத் திரட்டித் தந்திருப்பது, கல்கி கட்சிச் சார்பற்ற பத்திரிகை என்பதைத் தெரிவிப்பதோடு, பொது மக்களுக்கு உண்மை நிலையைத் தாங்களே படித்துப் புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கிறது.

சென்னை—17 எஸ். வி. எஸ்

● எங்கள் இதயத் தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் படத்தை அட்டையில் போட்டு என் போன்ற வாசகர்களின் கனவை நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி.

மதுரை—1 ஆர். பாலுச்சாமி

● நாலரைக் கோடி மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் இரண்டு தலைவர்களையும் அட்டைப் படத்தில் போட்டால் என்ன?

செங்கோட்டை என். வேணுகோபால்

● "Cross section" பகுதியில் குறிப்பிட்டபடி படித்துப் பட்டம் பெற்ற என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கானோர் வேலையில்லாமல் திண்டாடி வருகின்றனர். திறமைக்கு முதலிடம் என்று என்றைக்கு வருகிறதோ அன்றைக்குத்தான் தமிழகம் எல்லாத் துறைகளிலும் நிச்சயம் முன்னேறும். வேலை கிடைக்காமல் கடந்த பத்து ஆண்டுகளாகப் பட்ட தாரியான நான் பேப்பர் போட்டு வருகிறேன் என்பதை மிகுந்த மனவேதனையோடு தெரிவிக்கிறேன்.

கும்பகோணம்—1 ஆர். கிருஷ்ணன்

● "கேட்பவரில்லாத போது அறிவுள்ள எவனும் யோசனைகளைச் சொல்ல மாட்டான்" என்ற தொழிலதிபர் திரு ஜி. கே. சுந்தரம் அவர்களின் உள்ளக் கிடக்கை அனைவரையும் சிந்திக்கத் தூண்டும் வரிகள்.

கோடங்கிபாளையம், ஆசிர். எம். அல்போன்ஸ்

● திரு. எம். எஸ். பார்த்தசாரதி சிறு தொழிலதிபர்களுக்காக 'வக்காலத்து' வாங்கிப் பேசியிருப்பது பாராட்டத் தக்கதுதான்: ஆனால் அதற்காக வங்கிகளைப் பற்றி அவதூறு சொல்ல வேண்டுமா என்ன? 23 சதவிகிதத் துக்குக் கடன் வழங்கப்படுகிறது என்பது அப்பட்டமான தவறு. 1969ல் 7½ சதவிகிதம் இருந்தது. சற்று ஏறி, மறுபடியும் 1978ல் ஜனதா அரசு கடனுக்கான வட்டி விகிதங்களைக் குறைத்துள்ளது. தற்போது, தொகையைப் பொறுத்தும், கால அளவைப் பொறுத்தும் 9½ சதவிகிதத்திலிருந்து — 14½ சதவிகிதம் வரைதான் கடன் விகிதம். ஒரு பொறுப்பான பாங்க் அதிகாரி என்ற முறையில் இதை எழுதுகிறேன்.

நாயக்கன்பட்டி சுல்வர்குமார்.

● "உன் பங்கு என்ன?" நாட்டுப் பற்றுள்ள எல்லா இந்தியனும் தனக்குத் தானே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வியைக் கவிதையாகத் தந்து விட்டீர்கள்! அதை அப்படியே வெட்டி என் டயரியில் ஒட்டியுள்ளேன், தினமும் படிப்பதற்கு. அதன்படி நடப்பதற்கு.

திருச்சி கஸ்தூரி நாதன்

● பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் தஞ்சைத் தேர்தல் களச் செய்திகளை, ஒரு மாதத்துக்கு முன்பே வெளியிட்டு ஆறவிட்டு விடாமல், தேர்தலுக்கு மிகக் குறைவான நாட்கள் இருக்கையில் வெளியிட்டு, நடுநிலைமையுடன் பேட்டி கண்ட கல்கிக்கு நன்றி!

பாப்பாங்குளம் மு. கஜேந்திரன்

● "இன்டர்வியூ" கதை புதிய பாணியில் இருந்தது. எழுத்தாளர் சுபாவின் நடையில் இன்னும் வேகம் தேவை. இது போன்ற புது யுக்திக் கதைகளை அதிகமாக வெளியிடுங்கள்.

தூத்துக்குடி எம். ஜி. ராமசாமி

● "அச்சம்" என்கிற தலைப்பில் எழுத்துச் சுடர் ஆர். சூடாமணி அவர்கள் எழுதிய சிறுகதை நிச்சயமாகக் கூறுவேன் — சிறுகதைகளுக்காக ஒரு பல்கலைக் கழகம் தோன்றுவதானால் அங்கு பாடமாக வைக்கத் தக்கது.

திருப்பத்தூர் ஜி. தனியன்

● கனவா — நிஜமா? சித்திரக்கதையை (வாண்டு மாமா) சிறுவர்கள் மட்டுமா ரசித்தார்கள்? பெரியவர்கள் — இளைஞர்கள் Cleverகள் எல்லாரும் ரசித்துப் படித்தார்கள். நீலன் — ஒரு தியாகச்செம்மல். அவனைப் போல வாழ ஆசைப்பட வேண்டும் எனச் சிறார்களின் பிஞ்சு மனத்திலே பதிய வைத்தீர்கள். வீரம், சோகம், தியாகம் நிரம்பிய அருமையான கதை சித்திரம் வரைந்த செல்லத்துக்கும் வாண்டு மாமாவுக்கும் என் போன்ற பள்ளி ஆசிரியர்கள் சார்பில் நன்றி உரித்தாகும்!

பொள்ளாச்சி கு. வைகுண்டராமன்

● கனவா நிஜமா கதை மிகவும் அருமையாக இருந்தது. சித்திரக் கதை தொடர்ந்து வெளியிடுங்கள்.

அயலூர் செல்வி. லலிதா.

ஞானக் குழந்தை

படவிமரிசனம்

பால் மணம் மாறாப் பருவத்தில், அன்னை உமை ஊட்டிய ஞானப் பாலைப் பருகி 'தோடுடைய செவியன்' என்று பாசுரம் பாடிய பாலகனும் ஞான சம்பந்தப் பெருமானைப் பற்றிய வரலாறு ஞானக் குழந்தையாக வடிவெடுத்துள்ளது. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் வெளி வந்துள்ளது பொருத்தம்தான். பக்திப் படம் வேறு. எப்படி எப்படியோ எதையெல்லாமோ படமாக எடுக்கும் போது இடை இடையே இதுபோன்ற பக்திப் படங்களையும் எடுக்கும் தமிழ்ப்பட உலகின் துணிச்சலைப் பாராட்டத்தான் வேண்டும். தளர் நடை போடும் பருவத்துக் குழந்தையான சம்பந்தருக்குத்தான் பார்வதி தேவி ஞானப் பாலூட்டினாள் என்பது வரலாறு. ஆனால் திரைப் படத்திலோ?

பார்வதி தேவி பரிந்தூட்டிய பாலானதினால்தானோ என்னவோ சம்பந்தக் குழந்தை ஒன்பது வயது கொழு கொழு குழந்தையாக (பேபி சுதா) இருக்கிறது. கொஞ்சம் உருவி விட்டாற் போலிருந்தால் இன்னும் நன்றாக இருக்குமோ என்று தோன்றுகிறது. ஆனால் பேபி சுதாவின் 'வெடுக்'குப் பேச்சில் மழலை இல்லாவிட்டாலும் மலைப்பு ஏற்படுகிறது.

ஞானசம்பந்தரின் வாழ்க்கையோடு இணைந்த நாவுக்கரசரின் கதையும், திருமூலரின் கதையும், பூம்பாவையின் கதையும் கூடவே தொடருகின்றன. வசனங்களும் காட்சிகளும் நாடகபாணியில் இருக்கின்றன. நடிப்பில் முதலிடம் பெறுபவர்கள் திலகவதியும் (சுஜாதா) அப்பரும் (எஸ். வி. சுப்பையா) தான். திலகவதியின் முதுமைத் தோற்றம் பிரமாதம். வேஷப் பொருத்தத்திலும் நடிப்பிலும் பழைய சுஜாதாவைக் காண்கிறோம். பண்பட்ட நடிகரான சுப்பையா நாவுக்கரசின் பாத்திரத்தில் சோபிக்கிறார். சூலை நோயால் படும் அவஸ்தையைத் தத்ரூபமாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

திருமூலராக ஜெய்கணேஷும் அவரது காதலி பொன்னியாக லதாவும் தங்கள் பாத்திரத்தை நிறைவாகச் செய்திருக்கிறார்கள். ஜெமினி கணேஷ் சிவனாகவும் வெ. ஆ. நிர்மலா பார்வதியாகவும் வருகிறார்கள். பக்தர்கள் நெஞ்சு நெகிழும் காட்சிகள் பல உண்டு. பக்திப் படத்தைப் பார்க்கும் நிறைவும் ஏற்படுகிறது. பக்தியையும் பண்பாட்டையும் வளர்க்கக் குழந்தைகளோடு சென்று பார்க்க வேண்டிய படம் ஞானக் குழந்தை.

— **கௌசிகன்**










பண்ணை வளத்திற்கு
பாங்கான திறவுகோல்
TAFE
டாஃபே நிறுவனத்தின் முழு
ஈடுபாடும் பண்ணை வாழ்க்கையுடன்
பின்னிப் பிணைந்துள்ளதால்
நமது உழவர் பெருமக்களின் நீடித்த
நம்பிக்கையைப் பெற்றுள்ளது.
விவசாயிகளது நல்லுறவைப்
பெற்றிருப்பதால் வேளாண்மை
வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கிய
பணியாற்றும், திட நம்பிக்கையை
டாஃபே கொண்டுள்ளது
TRUSTED
ASSOCIATION
FOR
EVER
MF
Massey Ferguson
TAFE
டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட்
சென்னை

MAC/T/43 TAM



காரியம் யாவும் கைங்கர்யமே

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

எழுந்ததிலிருந்து படுக்கப் போகும் வரையில் நாம் செய்கிற பலவிதமான காரியங்களையும் இறைவனின் திசையில் திருப்புவோமாக! நம் இதயத்தில் சாந்தி காண இதுவே வழி.

நாம் பேசுகிற பேச்செல்லாம் பகவத் விஷயமாக்குவோம். நம்முடைய பேச்சு, நாம் ஜபம் செய்கிற மந்திரங்கள் அனைத்தும் ஐம்பத்தியொரு அக்ஷரங்களில் அடங்கும். பராசக்தி இந்த 51 அக்ஷர வடிவினளே. எனவே நம் பேச்செல்லாம் அவள் விஷயமாகவே ஆக்க வேண்டும்.

நாம் எந்தக் காரியம் செய்தாலும் கை, கால்களை அசைக்கிறோம். இந்த அசைவுகள் யாவும் பகவானை வழிபடும்போது செய்யும் அங்க அசைவுகளான ''முத்திரை''களாக வேண்டும்.

நாம் நடப்பதெல்லாம் ஆண்டவனைச் சுற்றும் பிரதக்ஷிணமாகட்டும்.

நாம் உண்பதெல்லாம் நமக்குள்ளே உறையும் ஈச்வரனுக்கு நிவேதனமாகட்டும். உணவை ஜீரணிக்கும் ஜாடராக்னித் தீயாக இருப்பவன் அவனே என்பதை ''அஹம் வைச்வாநரோ பூத்வா ப்ராணினாம் தேஹம் ஆச்ரித:'' என்று கிருஷ்ண பரமாத்மாவும் கூறுகிறார்.

நாம் படுப்பதை பகவானுக்குச் செய்கிற நமஸ்காரமாக ஆக்க வேண்டும்.

இவ்வாறு, பேச்சு, அங்க அசைப்பு, நடை, உண்ணுதல், சயனித்தல் என்றெல்லாம் இருப்பவைகளை முறையே அம்பாள் குறித்த ஜபமாகவும், முத்திரையாகவும், பிரதக்ஷிணமாகவும், நைவேத்யமாகவும், நமஸ்காரமாகவும் ஆக்கி, ஆத்மாவையே அவளுக்கு ஸமர்ப்பித்து விட வேண்டும் என்று ஸ்ரீபகவத் பாதர் 'ஸௌந்தர்ய லஹரி'யில் பிரார்த்திக்கிறார்.


கீதையிலும் பகவான், ''நீ எதைச் செய்தாலும், எதைப் புசித்தாலும், எதை ஆஹுதி செய்தாலும், எதைத் தர்மம் செய்தாலும், எதைத் தவமாகப் புரிந்தாலும் அதையெல்லாம் எனக்கு அர்ப்பணமாக்கக் கருதிச் செய்வாயாக'' என்கிறார்.

ஜீவாத்மா ஒவ்வொருவருக்கும் உள்ளே அந்தர்யாமியாக இருப்பவர் பரமாத்மாவே. ஆதலால் இவனது சகல காரியங்களும் அவருக்கு உரித்ததாகவே ஆகின்றன. எந்தக் காரியத்தை எவன் செய்தாலும் இறுதியில் அது அவனது இதயத்துள்ளும், ஸகல ஜீவராசிகளின் உள்ளும் குடிகொண்டிருக்கிற ஆண்டவனைத்தான் அடைகிறது.

இதை உணர்ந்து ஒவ்வொருவரும் நாம் புரிகிற காரியத்தையெல்லாம் பகவானுக்குக் காணிக்கையாகக் கருதிச் செய்ய வேண்டும். இந்த எண்ணம் வந்து விட்டால் நாம் செய்வதெல்லாம் உத்தமமாகவே இருக்கும். ஏனெனில் பகவானுக்கு அதமமான வஸ்துக்களைக் காணிக்கையாகத் தர மாட்டோம் அல்லவா? பூஜையில் உபயோகமாகும் ஒவ்வொன்றும் தோஷமில்லாததாக இருக்க வேண்டும் என்று எத்தனை கவனம் செலுத்துகிறோம்! சிறிது தோஷமுள்ள வஸ்துவையும் நீக்கி விடுகிறோம்.

லௌகிகமாக நாம் செய்கிற ஸகல காரியங்களும்கூட ஸமஸ்த ஜீவராசிகளின் இதயவாஸியான ஈச்வரனுக்குச் செய்யும் பூஜா உபசாரங்களேயாகும் என்ற உணர்வு நமக்கு வந்துவிட்டால் அப்போது எந்தச் செயலிலுமே தோஷம் இராது. பக்தி நிறைந்த, பொருள் பொதிந்த தூய வாழ்வு நடத்தி, 'நமக்கும் ஸுகம் தேடிக் கொண்டோம், உலக சாந்திக்கும் உதவினோம்' என்ற திருப்தியைப் பெறலாம்.

(அனுப்புனர்: **ரா. கணபதி.**)



யுகங்கள் மாறும் போது...

வாஸந்தி

1

ஆர்வத்துடன் கையை நீட்டி அழைக்கிற மாதிரி அந்தப் பெரிய குல்மொஹர் மரம் தன்னுடைய நிழலை விரித்து ஆசை காட்டிற்று. அதனடியில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி மைதிலி அண்ணாந்து அதன் ரத்தச் சிவப்புப் பூக்களைப் பார்த்தாள். எங்கேயிருந்து வந்தன இத்தனை பூக்கள்? பதினைந்து நாட்கள் முன்வரை இலைகள்கூட இல்லாமல் மொட்டை மரமாக இது நின்றது ஞாபகத்திற்கு வந்தது. இத்தனை சுருக்கில் இது எப்படி இப்படி ஒரு ஜோடனையுடன் நிற்கிறது. அவசரமவசரமாகத் தயாராகிப் போன கல்யாணப் பெண் மாதிரி? ஏதோ ஒரு சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட மாதிரி வேளையும் நேரமும் வந்ததும் இது திடீரென்று பூத்துச் சிரிப்பதைப் பார்க்கப் பார்க்க விந்தையாக இருந்தது. அதற்குப் பக்கத்திலேயே ஒரு மாமரம். இதுவரை பூக்கவே பூக்காத காய்க்கவே காய்க்காத மாமரம். அது ஏன் எந்த வித நியதிக்கும் உட்படாமல் மலட்டு மரமாக நிற்கிறது? மைதிலிக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனால் இந்த மரத்தில்தான் பொழுது சாயும் நேரத்தில் பட்சிகள் எல்லாம் நூற்றுக் கணக்கில் வந்து தஞ்சம் அடைகின்றன. அத்தனை அழகாகப் பூத்துக் குலுங்கும் குல்மொஹர் மரத்தில் ஒரு பட்சியும் உட்காருவதுகூட இல்லை. அந்தக் குல்மொஹர் மரம் நம்பகமானது இல்லை என்று நினைத்த மாதிரி...

வாசல் கேட்டை யாரோ திறக்கிற சத்தம் கேட்டது. அவள் நிமிர்ந்து பார்த்தாள். தபால்காரர் உள்ளே வருவது தெரிந்தது. தோட்டத்தில் ரோஜா பாத்தியைக் கிளறிக் கொண்டிருந்த முனுசாமி எழுந்து ஓர் அவசர நடையுடன் தபாலை வாங்கிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான்.

அவள் ஓர் ஆர்வத்துடன் கடிதத்தை வாங்கிக் கொண்டாள். துபாயிலிருந்து மூத்த மகள் மாலாவிடமிருந்து ஒரு கடிதம். டில்லியிலிருந்து யாரிடமிருந்தோ வேறு ஒரு கடிதம். மாலாவின் கடிதத்தை அவள் முதலில் பிரித்தாள். உறையிலிருந்து தொப்பென்று கலர் ஃபோட்டோக்கள் இரண்டு மடியில் விழுந்தன. ஒரு குழந்தைத் தனமான சந்தோஷத்தோடு அவள் அவற்றை முதலில் பார்த்தாள். மாலாவின் மகன் அருண் ரோஜாக் கன்னங்களுடன் பொக்கை வாய் சிரிப்புடன் அவளைப் பார்த்தான். மைதிலிக்கு மனசில் ஒரு பிரவாகம் பொங்கினாற்போல் இருந்தது.

அவள் கடிதத்தைப் பிரித்தாள். தாங்கள் சமீபத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் போய்விட்டு வந்ததைப் பற்றி மாலா எழுதியிருந்தாள். பிறகு வரிசையாகக் கேள்விகள். அம்மா நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் உடல்நிலை எப்படியிருக்கிறது? மருந்து சாப்பிட்டு வருகிறீர்களா? நளினி எப்படியிருக்கிறாள்? அவளுடைய கோபதாபங்கள், பிடி

வாதங்கள் எல்லாம் எப்படி யிருக் கின்றன?

மைதிலி ஒரு புன்னகையுடன் கடிதத்தை மடித்து உறையில் வைத்தாள். மற்றொரு கடிதம் அவள் கணவர் பரமேச்வரனின் பழைய நண்பர் ஒருவரிடமிருந்து வந்திருந்தது. பரமேச்வரனின் மரணத்தைப் பற்றித் தமக்குச் சமீபத்தில்தான் தெரிந்தது என்று தமது அனுதாபத்தைத் தெரிவித்து எழுதியிருந்தார். கடிதத்தை மடித்து வைத்து விட்டு மைதிலி நாற்காலியில் தலையைச் சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். மாமரத்தில் பட்சிகளின் ஆரவாரம் காதைத் துளைத்தது. முதல் கடிதத்தைப் படித்தபோது மனசில் பொங்கிய பிரவாகம் சட்டென்று இப்பொழுது அடங்கிப் போன மாதிரி இருந்தது. இனம் புரியாத ஒரு சோகம் மனசை அழுத்தின மாதிரி இருந்தது.


எதற்கு ஆழ்ந்த அனுதாபங்கள்...

எதற்கு?

அவள் வாழ்ந்து அனுபவித்த அனுபவங்களுக்கா? வெளியில் சொல்ல முடியாமல் விழுங்கிக் கொண்ட அனுபவங்கள்... அப்படி விழுங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானிக்கவைத்த அநுபவங்கள்... ''ஓ மம்மி, எவ்வளவு வாயில்லாப் பூச்சி நீ!'' என்று இப்பொழுது நளினி அவளைப் பார்த்துப் பரிதாபப்படும்போது அவள் நினைத்துக் கொள்வாள். ... வாயுள்ளவளாக அவள் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஏதேனும் லாபம் இருந்திருக்குமா? நளினி சொல்கிற மாதிரி இவையெல்லாம் லாப நஷ்டம் பார்க்கும் விஷயங்கள் இல்லையோ? தன்மானம், சுரணை என்பது இதற்கெல்லாம் அப்பாற்பட்ட விஷயங்களோ? அவளுக்கு ஏன் அவையிரண்டும் இல்லாமல் போய் விட்டன?

கடிதங்கள் இரண்டையும் கையில் எடுத்துக் கொண்டு அவள் எழுந்தாள்: சுவாமிக்கு விளக்கேற்றி விட்டுச் சற்றுத் தூரம் நடந்து விட்டு வரலாம் என்று தோன்றிற்று.

சமையலறையில் சமையல்காரப் பெண் கஸ்தூரி



சப்பாத்திக்கு மாவு பிசைந்து கொண்டிருந்தது தெரிந்தது. சாட்டை மாதிரி தலைப் பின்னல் தரையைத் தொட்டுக்கொண்டிருந்தது. அழகாக இயற்கையாக வளைந்திருந்த புருவங்களுக்கு இடையில் பெரிதாகக் குங்குமப் பொட்டு பளிச்சென்று தெரிந்தது. அந்தக் களையான முகத்தையும் அளவான உடம்பையும் பார்த்துக் கொண்டு பூஜை அறைக்கு நகர்ந்தாள்.

பூஜை அறையில் பழகிப்போன கைகளுடன் அவள் விளக்கை ஏற்றினாள். கொஞ்ச காலமாக எதற்கும் ஆண்டவனை வேண்டிக் கொள்வது ஓர் அபத்தமான குழந்தைத் தனமான செய்கை என்று தோன்ற ஆரம்பித்திருந்தது.

கஸ்தூரி சப்பாத்திக் கூட்டுக்கு அம்மியில் அரைத்துக் கொண்டிருந்தாள். சமையலறை வாயிலில் மைதிலி ஒரு விநாடி நின்றாள்.

''கஸ்தூரி நா கொஞ்சம் நடந்துட்டு வரேன். வீட்டைப் பார்த்துக்கோ.''

''சரிம்மா.''

''நளினி வந்தா அவ என்ன குடிக்கக் கேக்கறாளோ குடு. வழக்கம் போலே எட்டு மணிக்குச் சாப்பிடலாம்.''

''சரி.''

அவள் சாவிக் கொத்தை இடுப்பில் செருகிக் கொண்டு செருப்பை மாட்டிக் கொண்டாள். கண்ணாடியில் முகத்தைப் பார்த்து முன் நெற்றியைக் கோதிக் கொண்டாள்.

அவள் தெருவில் இறங்கி நடந்தாள். தெரு சந்தடியே இல்லாமல் பெரிய பெரிய காம்பவுண்டு சுவர்களுடன் ஒரு பணக்காரத் தனத்துடன் இருந்தது. ஒவ்வொரு வீட்டு கேட்டையும் தாண்டி உள்ளே பார்வை நீளுகையில் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்ட புல் தரையில் குழந்தைகள் விளையாடுவது தெரிந்தது. கூடை நாற்காலிகளில் பெரியவர்கள் விச்ராந்தியாக உட்கார்ந்திருப்பது தெரிந்தது. பேப்பர் படித்த படி, கூல் டிரிங்கைக் குடித்தபடி. இவர்களுக்கெல்லாம் மிக நிம்மதியான வாழ்க்கை இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. பிரச்னைகளே இல்லாத போராட்டங்களே இல்லாத வாழ்க்கை...

சட்டென்று அவளுடைய கவனம் கலைந்தது. ஒரு பெரிய வீடு தெரிந்தது. குட்டைச் சுவருக்கப்பால் தோட்டத்தில் ராஜுவும் அவர் மனைவி கௌஸல்யாவும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவளைப் பார்த்ததும் ராஜு உற்சாகமாகக் கையசைத்துக் கூப்பிட்டார். அந்த அளவுக்கு உற்சாகம் கௌஸல்யாவின் முகத்தில் இல்லை என்று மைதிலி கவனித்துக் கொண்டாள்.



அவள் தயக்கத்துடன் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். ராஜு உள்ளேயிருந்து ஒரு நாற்காலியை எடுத்துக் கொண்டு வந்து அவளுக்காகப் புல்தரையில் வைத்தார்.

கௌஸல்யா புன்னகையுடன் ''சௌக்கியமா?'' என்றாள். ''எங்கே கொஞ்ச நாளாச்சே உங்களைப் பார்த்து?''

''நா இங்கேயேதானே இருக்கேன்? தினமும் இந்த வழியா 'வாக்' போறேன்? உங்களைத் தான் காண முடியறதில்லே. இன்னிக்குத் தான் பார்க்கறேன்.''

கௌஸல்யா திருப்தியாக, சோம்பலாகப் புன்னகை செய்தாள்.

''ஆமாம் இந்த ஒரு மாசமா ஏகப்பட்ட எங்கேஜ்மெண்ட்ஸ் ஆயிடுத்து. கச்சேரிகள் ஃபேர்வெல் பார்ட்டின்னு.''

மனசின் திருப்தி உடம்பின் ஊளைச் சதையில் தெரிந்தது. நரையை மறைக்கப்பூசிய சாயமும் சுருக்கத்தை மறைக்க முயன்ற ஃபேஸ் பாக்கும் துல்லியமாய்த் தெரிந்தன. ராஜுவின் பார்வை தன்மேல் பதிந்திருப்பதை மைதிலியால் உணர முடிந்தது. அதைக் கௌஸல்யாவும் உணர்ந்திருப்பாளோ என்று தோன்றுகையில் இப்பொழுது இங்கே வந்து உட்கார்ந்திருக்கக் கூடாது என்று தோன்றிற்று.

''மாலா இட்டேந்து கடிதாக வரதா?''

''வரது. இன்னிக்குக் கூட வந்தது ஃபோட்டோவோட. சௌக்கியமாயிருக்கிற மாதிரிதான் இருக்கு.''

''ஏதோ குழந்தைகள் எங்கேயோ சௌக்கியமா இருந்தா சரி. நீங்க பட்ட கஷ்டத்துக்கு...''

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ராஜு அவசரமாகக் குறுக்கிட்டார். ''கௌஸல்யா ஏதாவது குடிக்கிறதுக்குக் கொண்டு வாயேன்?''

''இதோ'' என்று கௌஸல்யா எழுந்தாள்.

''வேண்டாம் கௌஸல்யா, சித்தமுன்னே தான் காப்பி குடிச்சேன்.''

''பரவாயில்லே ஜூஸ் ஏதாவது கொண்டு வரேன். நீங்க வரதே அபூர்வம். ஒண்ணும் சாப்பிடாமே போனா எப்படி?''

பருத்துப் போன உடம்பை நிதானமாக அசைத்து அசைத்து அவள் நடப்பதை மைதிலி ஒரு வித பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''இப்பொழுது எப்படியிருக்கே மைதிலி?''

அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். ராஜுவின் கேள்வியிலும் பார்வையிலும் பலவித அர்த்தங்கள் இருந்த மாதிரி அவளுக்குத் தோன்றிற்று. அவள் லேசாகச் சிரித்தாள்.

''நன்றாகத்தான் இருக்கிறேன்.''

''கௌஸல்யாவுக்குச் சமய ஸந்தர்ப்பம் தெரியாது மைதிலி. எதையாவது கேட்டு வைப்பாள்.''



''அங்கே என்னங்க, கூட்டம்?...''

''திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கோவை, ஊட்டி இந்த ஊருக்கெல்லாம் 'டூர்' போட்டுப் பத்திரமா வந்து சேர்ந்திட்டாங்களாம்.... அதனாலே டிரைவருக்குப் பாராட்டு விழா நடத்தறாங்க...!''

மைதிலி சிறிது நேரம் புல் தரையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். பிறகு மெல்ல நிமிர்ந்து ராஜுவைப் பார்த்தாள்.

''எதை யார் கேட்டாலும் இனிமேல் என்னைப் பாதிக்காது ராஜு. இருபத்திரண்டு வயசு அனுபவத்தில் என் மனசில் ஏதும் மாறுதல் ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறீர்களா? முதிர்ச்சி ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறீர்களா?''

உருவத்தில் முதிர்ச்சி என்பதைச் சிறிதும் காண்பிக்காத அந்த அழகிய முகத்தை ஒரு விநாடி திகைத்துப் போனவர் மாதிரி பார்த்த ராஜு பார்வையைத் திருப்பிக் கொண்டார்.

''யூ ஆர் ரைட். அந்த மெச்சூரிட்டி இல்லையானால் யாருக்கும் கஷ்டம்தான். ஆனால் நீ ஓர் அசாதாரணமான ப்ரேவ் உமன் என்பதிலே சந்தேகமில்லே...''

மைதிலி சிரித்தாள்.

''என்ன வந்தாலும் உயிர் வாழ்ந்தே ஆகணுங்கறது மனுஷனுடைய பிறவிக் குணம் ராஜு. அதுதான் என்ன கஷ்டம் வந்தாலும் மனுஷனைத் தள்ளிண்டு போறது. நதியிலே மூழ்கிடுவோமோன்னு பயந்துண்டு மிதந்துண்டிருந்த பிணத்தைப் பிடிச்சுண்டு எவனோ கரை சேர்ந்தானமே அது மாதிரி...!''

அவளுடைய ஹாஸ்யத்தை ரஸிக்காதவர் மாதிரி ராஜு பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

''நளினி இப்போ என்ன படிக்கிறாள் மைதிலி?''

'எம். ஏ. கடைசி வருஷம் இது.''

''உடனே கல்யாணம்பண்ணப்போறியா?''

''பார்க்கணும். அதெல்லாம் அவ்வளவு சுலபமான விஷயமா? நல்ல பிள்ளையா வந்தால் பண்ண வேண்டியதுதான். நீங்கதான் யாராவது தெரிஞ்சவா இருந்தாச் சொல்லுங்களேன்?''

அதற்குச் சட்டென்று பதில் சொல்லாமல் ராஜு சில விநாடிகள் உட்கார்ந்திருந்தார். பிறகு மென்ன ''ஆகட்டும் பார்க்கறேன்'' என்றார்.

''நளினி மாலா மாதிரி இல்லே. எதுக்கும் முரண்டு பிடிக்கிற சுபாவம் இவளுக்கு. அவளுக்கு இஷ்டமானபடி ஒரு பிள்ளையைப் பார்க்கறதும் கஷ்டம்...''

ராஜு அவளை யோசனையுடன் பார்த்தார்.

''அவ யாரையாவது மனசிலே வெச்சுண்டிருக்காளா?''

''இல்லையே? எனக்கொண்ணும் தெரியல்லியே அப்படி?''

ராஜு தலையைக் குனிந்தபடி சொன்னார்.

''நான் கொஞ்ச நாளா அவ யாரோ ஒரு பையனோட போறதைப் பார்க்கறேன்.''

மைதிலி திடுக்கிட்டு அவரைப் பார்த்தாள். மனசு இலேசாக அதிர்ந்தது. மேற்கொண்டு இவரை ஏதேனும் விவரம் கேட்டால் தன்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்று யோசனையாக இருந்தது. தன் பெண்ணைப் பற்றி விவாதத்துக்குரிய விஷயம் எதுவாக இருந்தாலும் அவருடன் பேசுவது அநாகரீகமான செயல் என்று தோன்றிற்று.

''அப்படியா? ஆகட்டும் விசாரிக்கிறேன்.''

தன்னால் எப்படி இதைச் சாதாரணமாகச் சொல்ல முடிந்தது என்று அவள் நினைத்துக் கொண்டாள். ஆனால் ஒரு பையனுடன் நளினி சிநேகமாக இருக்கிறாள் என்றால் உடனே தான் ஏன் பதற வேண்டும் என்று அவள் அவசரமாகத் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். . . . . . .

பழ ரஸங்கள் கொண்ட கண்ணாடி டம்ளர்களை ஒரு ட்ரேயில் ஏந்தியபடி கௌஸல்யா வந்தாள்.

ஜூஸைக் குடிக்கும் போது, கௌஸல்யாவின் அசட்டுக் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் போது மனசில் ஏதோ ஒரு நமைச்சல் இருந்து கொண்டேயிருந்தது. இப்பொழுதுதான் சற்றுமுன்பு எந்த விஷயமும் தன்னைப் பாதிக்காது என்று பெருமையடித்துக் கொண்டது ஞாபகத்துக்கு வந்தது. இந்த மாதிரி நிமிஷமாய்க் கலங்கிப் போகும் மனசை வைத்துக் கொண்டு தான் அப்படிப் பேசுவது எத்தனை பெரிய கேலிக்கூத்து என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

இருட்டி விட்டது என்கிற உணர்வோடு அவள் அவசரமாக எழுந்தாள்.

''நான் வரட்டுமா துணைக்கு?'' என்று ராஜு கேட்டார்.

கௌஸல்யாவின் பார்வை தீட்சண்யமாகத் தெரிந்தது.

''வேண்டாம், வீடு பக்கத்தில் தானே இருக்கு? போய் விடுகிறேன்.''

டார்ச்சைப் பிடித்தபடி நடக்கையில் ராஜு சொன்ன வார்த்தைகளே மனசில் சுழன்றன.

''ஒரு பையனோட போறதை அடிக்கடி பார்க்கிறேன்.''

யார் அந்தப் பையன்? என்ன மாதிரி பையன்? எந்த மாதிரி சிநேகிதம்? ஏதும் விபரீதமாக இருக்காது என்று அவள் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு நடந்தாள்.

வீட்டை நெருங்கியதும் கேட்டின் அருகில் நளினி நிற்பது தெரிந்தது. விளக்குக் கம்பத்தின் வெளிச்சத்தில் வாட்ட சாட்டமான ஒருத்தன் அவளுடன் நிற்பதும் தெரிந்தது.

(தொடரும்)

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

ஊட்டும் கரம் அறியுமே—
அவன் வயிற்றுக்கு
உன்னதம் எதுவென்று.



everest/79/PP/194 tam

உங்கள் கவனம் அடிக்கடி தேவைப்படுகிறது குழந்தைக்கு. அவனை சீராட்டி வளர்க்க நீங்கள் எதனையும் செய்வீர்கள்: குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவு ஊட்டி, உடல் நலம் பேணிக் காப்பதில் நீங்கள் எடுத்துக் கொள்ளும் கவனம் தான் எவ்வளவு?

கருத்துள்ள அதே கவனம் பளிச்சிடுமே நீங்கள் அவனுக்கு தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டிலும். திண்ணம் அதுவே, தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மை-யோடு தயாரித்த பிஸ்கட்.

நீங்கள் அவனுக்கு ஊட்டும் உணவிலே உள்ளதைப் போன்ற நிகரான ஊட்டச் சத்து அதிலே: பால், சர்க்கரை, க்ளூகோஸ், செரிப்பதற்கு எளிதாக இழைய அரைத்த கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள் கரம் தொடும் அந்த பிஸ்கட், கரகரப்பானது, சுவை மிக்கது. கொரித்து, ரசித்து மகிழ்வானே உங்கள் குழந்தை.

எண்ணிப் பாருங்கள்: 7, உலக விருதுகளை வென்ற, இந்தியாவின் அதி நவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த வண்ணமய உறையை பார்த்து வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

பார்லே
க்ளூகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

இன்று மேலதிகாரி அழைத்தார். ''கலா, நீங்க போட்ட இரண்டு டிஸைன்கள் ஏகப்பட்ட கிராக்கியை உண்டாக்கி இருக்கின்றன. அதனாலே உங்களுக்கு இந்த ஆயிரம் ரூபாய் செக்கைத் தரச் சொல்லி மேல் அலுவலகத்திலிருந்து வந்திருக்கிறது. இந்த மகிழ்ச்சியான செய்தி உங்களுக்கு மேலும் கற்பனையைத் தூண்டி அரிய டிஸைன்களை உருவாக்கட்டும்'' என்று கூறினார்.

அவளது திறமையான கலைக்கு உள்ள அழகு அவள் தோற்றத்தில் இல்லைதான். ராம் இன்று அவள் பெற்றுள்ள அன்பளிப்பையாவது பாராட்டுவானா? அழகனான அவனுக்கு அவள் ஏற்றவள் இல்லைதான். கல்யாணம் ஆனதுமே பகிரங்கமாகவே சொல்லிக் காட்டிவிட்டான். கூரிய ஈட்டிகள் போன்ற வார்த்தைகளை உபயோகிப்பதில் வல்லவன் அவன்.

கல்யாணமான புதிதில் ஒருநாள் சினிமா போய் வந்தார்கள். அன்றிரவு அவளிடம் அவன் கூறினான்;

''ப்ளீஸ், கலா இனிமே நீ தனியா வெளியே போய்க் கொள். என் நண்பர்கள் கேலி செய்கிறார்கள்'' என்றான் சூடாக.

அவன் சொன்னதும் அவள் முகம் வெந்து விட்டது. துக்கம் தொண்டையை அடைத்தது. அவளிடம் உள்ள அரிய கலைத் திறன் கண்களுக்குப் படவில்லை. புறத் தோற்றத்தின் அழகை மட்டுமே மதிக்கிறான்.

''அப்படியானால் என்னை எதற்காகக் கல்யாணம் செய்து கொண்டீர்களாம்?'' கேட்டே விட்டாள்.

''ம்... அப்படிக் கேள். உன் அம்மா கொடுத்த ரொக்கம் எனக்கு உதவியது. என் தங்கை சீதாவின் கல்யாணம் எப்படி நடந்தது? உனக்காக உன் அம்மா கொடுத்த பணம். தவிர நீ ஒரே பெண். சொத்தெல்லாம் உனக்குத்தானே?''

''இன்னும் ஒரு தங்கைக்குக் கூட இந்தச் சொத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடலாம் இல்லையா?''

''எக்ஸாக்ட்லி கரெக்ட். உனக்கு அழகு இல்லா விட்டாலும் புத்திசாலித்தனம் இருக்கிறது'' என்று கன்னத்தில் தட்டினான். தனக்குப் பிடிக்காவிட்டாலும் தேவையானதை எடுத்துக் கொள்ளும் சுயநலமான கெட்டிக்காரத்தனம்! அதற்கு அவள் பணிந்து

அவள் பெண்

லட்சுமி ராஜரத்னம்



போக வேண்டும் என்ற பண்பாட்டின் நிய தியை அனுசரித்துப் போக வேண்டும்!

வீட்டிற்குள் அவனுக்கு மனைவியாய்... சமைத்துப் போட — கேட்ட நேரத்தில் பணத்தைத் தர — மற்றச் சபலங்களுக்கு ஆளாகி இடம் தந்து தாய் என்ற ஸ்தா னத்தைப் பெற...

—இதெல்லாம் கொஞ்சம் மறந்து போய் விட்டது. ஆயிரம் ரூபாய் செக் கொடுத்த மகிழ்ச்சி. ஆனால் பஸ் மௌண்ட் ரோட்டில் நின்ற பொழுது — எதிரேயிருந்த சினிமாத் தியேட்டரிலிருந்து ராம், அவன் தோளில் இடித்துக் கொண்டு நிருபமா! கலா அவர் களைப் பல இடங்களில் சேர்ந்து பார்த்திருக் கிறாள்.

இந்த நட்புக்கு என்ன பொருள்? ராமுவுடன் இப்படி இணைந்து கொள்வதால் தன்னுடைய வாழ்வு பாதிக்கும் என்று நிருபமா நினைப் பதே இல்லையா? தாலி கட்டிக் கொண்ட அவளே கண்டித்துப் பேச முடியாத பொழுது ஏதாவது ஒன்று ஆகி விட்டால் நிருபமா என்ன செய்வாள்?


ராமின் நண்பரின் பெண்தான் இந்த நிருபமா. ராமுவுக்குக் கல்யாணமாகிக் குழந்தை ஒன்று இருப்பது கூடத் தெரியும். தெரிந்தும் தனக்கும் — ராமுக்கும் குறுக்கே நிற்கும் இவளை என்ன செய்வது? அவளுடைய ஆர்வம் எல்லாம் வடிந்துவிட்டது. மனம் கனத்தது. இப்படிப்பட்ட ஒரு வாழ்வை வாழ்ந்துதான் ஆக வேண்டுமா?

இரவு கட்டிலில் பச்சைக் குழந்தை போல் படுத்துத் தூங்கும் ராமைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. சாப் பிடும்பொழுது அவன் கேட்ட கேள்விகளுக்குக் கூட அவள் பதிலே சொல்லவில்லை. செக்கைப் பற்றிய மகிழ்ச்சியான செய்தியைப் பகிர்ந்து கொள்ளவும் இல்லை. அவளுக்கென்று என்ன இருக்கிறது? அவள் மனம் அழுதது.

அன்று ஒரு புதுடிசைனை வரைய வேண் டும். காலையிலிருந்தே மனம் அதில் லயித்து விட்டது. அலுவலகம் போய் உட்கார்ந்த துமே வரையத் தொடங்கிவிட்டாள். ஏற்ற வண்ணங்களைத் தேர்ந்தெடுத்து.

மணி மூன்று. பணியாள் காப்பியைக் கொண்டு வைத்தான். ஐந்து மணிக்குள் முடிக்க வேண்டும். எழுந்து நின்று குனிந்து வரைவுகளைச் சரிசெய்தாள். எழுந்த பொழுது இடுப்பு வலிப்பது போல இருந்தது.. சற்று எட்ட நின்று டிசைனைப் பார்த்தாள். தொடைகள் கனத்து வயிற்றிலிருந்து பிடித்து இழுத்தது. ஓ... இனிமேலும் தாமதிக்க முடியாது. டாக்டரைப் பார்க்க வேண்டும்.

ஆட்டோ மருத்துவமனை நெருங்கும் பொழுது அவள் பார்வை கூராகியது. நிருபமா மருத்துவ மனைக்கு உள்ளே போகி றாள். ராம்தான் ஸ்கூட்டரைத் திருப்பிக்





கொண்டு அவனுக்கு 'பைபை' காட்டி விட்டுப் போகிறான்.

அது தனியார் மருத்துவமனை. அவன் போன பொழுது கூட்டமே இல்லை. நிருபமா எதற்கு வந்தாள்? பெரிய அறையைப் பாதியாகத் தடுத்துப் பரிசோதனை அறையை டாக்டர் அம்மாள் வைத்திருந்தாள்.

பரிசோதனை அறையிலிருந்து வந்தது சன்னக் குரல். ''டாக்டர், எப்படியாவது 'ரிமூவ்' பண்ணி விடுங்க. ப்ளீஸ் டாக்டர்'' என்றாள் நிருபமா.

''வெய்ட். இப்படித்தான் தப்பைப் பண்றது. எங்ககிட்டே வந்து உயிரை வாங்கறது. இதோ பாரம்மா, கலைக்கற ஸ்டேஜ் எல்லாம் தாண்டியாச்சு. உன் நிலை எனக்குப் புரியறது. பேசாமல் அப்பா, அம்மா கிட்டே சொல்லிக் கல்யாணத்தைப் பண்ணிக் கொள். இது ஒன்றும் பெரிய பிரச்னை இல்லை!'' யாருமில்லை என்று சற்றுக் குரலெடுத்துப் பேசினாள் டாக்டர்.

டாக்டர் அம்மாள் சுலபமாகச் சொல்லி விட்டாள். விர்ரென்று நிருபமா வெளியேறினாள். கலாவைப் பார்த்திருக்க வேண்டும். கலா தலையைக் குனிந்து கொண்டாள். கைகளைத் துடைத்துக் கொண்ட டாக்டர் அம்மாள் கலாவைப் பார்த்தாள். பழக்க மானவர்கள்தான்.

''எப்படி இருக்கே கலா?''

கலா தன் நிலைமையைக் கூறினாள்.

''வா, பார்க்கலாம்.''

நிமிடங்கள் கரைந்தன. டாக்டரின் முகத்திலும் நம்பிக்கை இல்லை. ''ரொம்ப வீக்காக இருக்கிறது. எதற்கும் பார்க்கலாம்.''

டாக்டரின் கரங்களைப் பற்றிக்கொண்டாள் கலா. ''எனக்கு வேண்டாம் டாக்டர். இதைக் கலைத்து விடுங்கள்.''

வெறுப்பு கலாவின் நெஞ்சில் மூண்டியது. வலியின் வேதனைதான் அவளை இப்படிப் பேசச் செய்கிறது என்று நினைத்தாள் டாக்டர் அம்மாள்.

''மருந்து கொடுத்து நிற்குமா என்று பார்க்கிறேன்.'' மறுத்தாள் கலா. ''வேண்டாம் டாக்டர். ப்ளீஸ்.''

பழையபடி உடம்பு தேறியது கலாவுக்கு. ராம் ஒரு தடவை நர்ஸிங் ஹோமில் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனான்.

''சீக்கிரம் வந்து விடு. நீயில்லாமல் என்னால் இருக்கவே முடியவில்லை.''

எதற்கு என்று அவளுக்கா தெரியாது? வீடு திரும்பினாலும் அவனுக்கு இடம் தரவே கூடாது. அவள் வீடு திரும்பிய பொழுது அவன் வீட்டில்தான் இருந்தான். கண்களில் ஓடிய எண்ணக் குவியல்கள்... தோளில் படிந்த கரம்... அவற்றின் அழுத்தம்.

பத்து தினங்களுக்குப் பின் அவள் தன் வீட்டுச் சமையலறையில் சமைத்தாள். ராம் வீட்டிலேயே இருந்தான். வெளியே போக மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும்.

''ஷெல் ஐ ஹெல்ப் யூ?'' என்று கூடக் கேட்டான்.

''தேவையில்லை. ஐயாம் ஆல் ரைட்'' என்று அவள் கூறினாள்.

இரவுச் சாப்பாட்டிற்குப் பின் அவள் வெற்றிலைத் தட்டுடன் வந்து ஹாலில் உட்கார்ந்து கொண்டாள். புத்தகம் ஒன்றைப் புரட்டிய ராம் அவள் உட்கார்ந்து கொண்டதைப் பார்த்து அருகில் உட்கார்ந்தான்.

''எனக்கும் உன் கையால் மடித்து. கொடேன்.''

அவள் நளினமாக வெற்றிலையை மடித்து அளவான பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துக் கொடுத்தாள்.

''ஹஹாம்... வாயில்...'' அவள் வாயில் போட்ட பொழுது கைவிரல்களையும் மெல்லக் கவ்வினான்.

இவன் இப்படியே ஓர் அன்புக் கணவனாகத் தனக்கே உரியவனாக இருந்தால் எப்படி இருக்கும்? கண்களில் குபீர் என்று நீர் பாய்ந்தது. அவன் கரத்தை எடுத்துத் தன் மடியில் போட்டுக் கொண்டாள். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உன்கிட்டே ஒன்னு சொல்லணும்னு ரொம்ப நாளாக் காத்துக் கொண்டிருக்கிறேன். அதுக்குள்ளே உனக்கு உடம்பு சரியில்லாமப் போச்சு.''

''நீங்க என்ன சொல்லப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்'' என்று அவள் முனகினாள்.

அவன் பேசுவதற்கு வாயெழும்பாமல் சற்று தடுமாறினான். ''என்ன தெரியும்?''

''எல்லாமே தெரியும். நிருபமாவைக் கல்யாணம் செய்துக்க வேண்டிய நிர்ப்பந்தம் தெரியும்.''

''தெரியும் இல்லையா? இப்போ நான் என்ன செய்வது கலா?''

''அசம்பந்தென்ன? கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்.''

''நீ டைவர்ஸ் பண்ணுகிறாயா?''

''டைவர்ஸ் எதுக்காகப் பண்ணணும்? இவ்வளவு ஆன பிறகு கல்யாணம் பண்ணிக் கொள்வதுதானே முறை? எப்படியானாலும் அது உங்க குழந்தைதானே?''

கலா எழுந்து உள்ளே போய் விட்டாள். ராம் நீண்ட நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

''**நீ** என்னம்மா சொல்றே?'' நிருபமாவின் தந்தை கேட்டார் நம்பிக்கை இல்லாமல்.

''என் கணவருக்கு உங்க பெண் நிருபமாவைக் கல்யாணம் பண்ணித் தர வேண்டும்'' என்று மீண்டும் ஒரு தடவை அழுத்தம் திருத்தமாகப் பேசினாள் கலா.

''பைத்தியக்காரி! ஏதோ அண்ணா தம்பிக்குக் கல்யாணம் பேசுவது போலல்லவா பேசுகிறாய்? நீ கல்யாணம் பேசுவது உன் கணவனுக்கு என்பதாவது உனக்குப் புரிகிறதா? கல்யாணமாகி, மனைவியும் குழந்தையும் இருக்கும் ஒருவனுக்கு எப்படியம்மா

நாட் கிளப்பில்:

"ஏண்டா, நாலு பெண்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள், நீ இரண்டே பேர்தான் என்று சாதிக்கிறயே, எப்படி?"

"ஆடையில்லா மனிதர் அரை மனிதர் நாமென!"

[redacted] – ஃ. அமலசுப பாண்டியன்.

நான் பெண்ணைத் தருவேன்? அதைக் கொஞ்சமாவது நீ சிந்தித்தாயா?''

''எல்லாவற்றையும் யோசித்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். என் கணவரின் குழந்தை உங்கள் பெண் வயிற்றில் வளருகிறது. நட்பு முற்றிய பிறகு – ஒருவருக்குத் தன் இளமையை அளித்துத் தாய்மையைப் பெற்ற பின்பு அவளுக்கு மனைவி என்ற அந்தஸ்தை அளிப்பதுதான் முறை. அதை என் கணவர் ஒப்புக் கொள்கிறார்.''

''ஒப்புக் கொள்கிறாரா?''

''ஆமாம், தவறைச் செய்து விட்டு ஒப்புக் கொள்ளாத ஆண்கள் இருக்கிறார்கள். ஆனால் என் கணவர் ஒப்புக் கொள்வதிலிருந்தே அவர் நிருபமாவை எவ்வளவு நேசிக்கிறார் என்பது புரியவில்லையா? இனிமேலும் நாம் தடை சொல்லலாமா?''

பெரியவரின் முகம் சிவந்தது: ''ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்து என்மகள் ஒருத்தனை மணந்து கொள்வதா? உன் மாமனார் மாமியார் எல்லாம் என் குடும்ப நண்பர்கள். அவர்கள் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? இவள் மெட்ராஸில் போய்ப் படித்தாளா, காதலித்தாளா?'' என்று குதித்தார்.

கலா மெல்லச் சிரித்துக் கொண்டாள். ''ஒன்று நடந்து முடிந்த பின்பு அதை விமர்சனம் பண்ணுவது சரிதான். அதற்காக அதைத் திருத்தி அமைக்க முடியாது. பெரியவர் நீங்கள். கல்யாணத்துக்கு வந்து சேருங்கள்.''

எளிமையாகத் திருநீர் மலையில் கல்யாணம் நடந்தது. தன்னுடைய கூறைப் புடவையையும், திருமாங்கல்யம் ஒன்றையும் கொடுத்து அணியச் செய்தாள் கலா.

''அக்கா, உங்கள் வாழ்க்கையில் பங்காக வந்து விட்டேன்'' என்று அவளை வணங்கினாள் நிருபமா.

''பல்லாண்டு காலம் வாழ வேண்டும் அம்மா'' என்று வாழ்த்தினாள் கலா.

கல்யாண மண்டபத்திலிருந்து திரும்பத் திரும்பச் சாமான்களைப் பெட்டியில் வைத்துக்கொண்டிருந்தாள் கலா.

''கலா'' பின்னால் ராம் நின்று கொண்டிருந்தான்.

''என்ன?''

அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டான். கண்களில் ஒற்றிக் கொண்டான். ''நீ பெண்ணே இல்லை. தெய்வம்.''

''போதும்... ஏதாவது பேசாதீர்கள்''

''நான் உன்னை எப்படியோ நினைத்தேன். ''என் மனத்தில் உயர்ந்து விட்டாய். வீட்டில் எல்லாம் உன் விருப்பப்படி தான் நடக்கும். இப்பொழுது காரில் நீயும் என்னுடன் கூட வரப்போகிறாய்.''

பெட்டியைப் பூட்டிச் சாவியைக் கழுத்துச் சங்கிலியில் கோத்துக்கொண்டாள். இரண்டு தலையணையை ஜமக்காளத்தில் வைத்துச் சுற்றினாள்.

''எனக்கு ஒரு டாக்ஸியைக் கூப்பிடுங்கள்.'' ராமைத் தேடிக் கொண்டு நிருபமா அங்கு வந்தாள்.

கிரிக்கெட் கற்கலாம்! 40

கோச்: கே. சந்திரசேகர்
படம்: ராஜ்.. தயாரிப்பு: குண்டுமணி

கிரிக்கெட் சட்டங்களில் சில


ஒவ்வொரு கிரிக்கெட் ஆட்டக்காரரும் கிரிக்கெட் விளையாட்டின் சட்டங்களை நுணுக்கமாகக் கற்க வேண்டும். காப்டனுக்கு அது மிக அவசியம்.

இளம் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்குச் சட்டங்களைக் குறித்துச் சில விளக்கங்கள்.



பீல்டிங்கில் பீல்ட் செய்பவர் தம் தொப்பியைக் கரத்தில் ஏந்திப் பந்தைத் தடுக்கக் கூடாது! இப்படி செய்தால் அபராதமாக ஐந்து ரன்கள் எதிர்க்கட்சிக்கு அதிகரிக்கும். இத்தருணத்தில் பாட்ஸ்மென்கள் திசை மாற மாட்டார்கள்.


ஒரு பீல்டர் வேண்டுமென்றே பந்தை பவுண்டரி எல்லைக்குக் காலினால் தள்ளினால், முன்பு எடுத்த ரன்களோடு நாலு ரன்கள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.





பவுண்டரி எல்லைக்கோட்டில் ஒரு காட்ச் பிடிக்கும்போது, உங்கள் உடலில் ஏதாவது ஒரு பாகம் பவுண்டரி எல்லைக்குள் இருத்தல் அவசியம்.

பவுண்டரி எல்லையைக் காட்ச் பிடித்து முடித்த பிறகே பீல்டர் கடக்க வேண்டும். இல்லாவிட்டால் பவுண்டரி நாலு ரன்கள் அளிக்கப்படும்.



''என்ன கலா, நீ என்னுடன் தான் வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். எதற்காக இன்னொரு டாக்ஸி?'' சீறினன் ராம்.

கலா இடுப்பில் செருகிய கொத்துச்சாவியை எடுத்து நிருபமாவிடம் நீட்டினுள். ''இதில் வீட்டுச் சாவிகள் அனைத்தும் இருக்கின்றன.''

''எதற்காக இப்படி இவளிடம் வந்ததும் பொறுப்புகளைத் தருகிருய்? ஓ.. நீ பெரியவள். அதனுல் சற்று அதிகாரம் செய்கிருயோ?'' என்று சினந்தான் அவன்.

''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு இடையில் இருக்கப் போவதில்லை. நான் பெண்கள் விடுதி ஒன்றில் இடம் கேட்டு வாங்கி விட்டேன்'' என்றுள் கலா.

''நீ என்னை இன்ஸல்ட் பண்ணுகிருய்!'' என்று சீறினன் ராம்.

''நோ... நோ... எப்பொழுது என்னுடன் வாழும் பொழுது என்னுடன் திருப்தி இல்லாமல் வேறு ஒருத்தியை நாடினீர்களோ, அப்பொழுதே நான் உங்களுடன் வாழும் தகுதியை இழந்து விட்டேன். அன்பும், காதலும்தான் இல்லறத்தின் அடிப்படை. அது இல்லாமல் பங்கு போட்டுக் கொண்ட இந்த ஒற்றைத் தாலி கட்டிக் கொண்ட – உறவுக்காக நான் ஏன் உங்களுடன் இருக்க வேண்டும்? அவசியமில்லை.''

அடுத்த கல்யாணத்திற்காக வந்தவர்களின் டாக்ஸி ஒன்று காலியாக நின்றது. கலா அதில் தன் ஒரே பெட்டி, இரண்டு தலையணை அடங்கிய ஜமக்காளம், தன் குழந்தை சித்ராவுடன் ஏறிக் கொண்டாள்.

ராம் பார்த்துக்கொண்டே நின்றுன். கைகள் அசைந்தன. நிரந்தரமான 'பைபை'!



படவிமரிசனம்

அலாவுதீனும் அற்புதவிளக்கும்

கிட்டு: ஹலோ! பாலு வெகேஷன்லே என்ன சினிமாப் பாத்தே?

பாலு: அந்த வயித்தெரிச்சலை ஏன்டா கேக்கறே? நாலாங் கிளாசிலேருந்து நாம படிச்ச கேட்டு மகிழ்ந்திருக்கோமே 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' அது சினிமா ஸ்கோப் திரைப் படமா வந்திருக்கேன்னு பாக்கப் போனேன். ரொம்ப ஏமாற்றம்.

கிட்டு: எவ்வளவு தடவை பத்தாலும் அலுக்காத கதையாச்சேன்னு நானும் போனேன். ரொம்ப மோசம்!

பாலு: பாத்திரப் பொருத்தமே சரியில்லை. மந்திர வாதியாக மடேஞஹர் வரார். பூம்பூம் மாட்டுக்காரர் போல – கதாநாயகனுக்குச் சமதையாக வில்லன் பாத்திரத்தையும் அமைக்கணும்.

கிட்டு: அலாவுதீன் பாத்திரம் கூடத்தான் – கமல் அலாவுதீனு வரார் என்பதற்காக நாம் படித்துள்ள அந்தக் காரக்டரை மறந்துட முடியுமா?

பாலு: விளக்குப் பூதமா அசோகன் வரார்; கண்ணுவி! விளக்குப் பூதம் ஒரு கோமாளி போல் – பூதத்தோட இமேஜ் நாசமாயிட்டுது.

கிட்டு: கதையையே பல இடங்களிலே மாத்தி நாசமாக்கி இருக்காங்க பாத்தியா?

பாலு: ரொம்ப ரொம்ப ஏமாற்றம். தந்திரக் காட்சிகளில் ஆடியன்ஸை அப்படியே திணற வைத்திருக்க வேண்டாமோ?

கிட்டு: கமல் – ரஜனி ஜோடிக்காகப் பொருத்தமே இல்லாதபடி ரஜினி பாத்திரத்தை உருவாக்கி...

பாலு: அதுதான் நல்லாத் தெரியுதே – சண்டைக் காட்சிகளுக்காக உருவாக்கப் பட்ட காரக்டர் அது. வெறும் சக்கை! அதுவாவது போகட்டும் என்றுல் பழம் பெரும் நடிகரான ஜெமினி கணேசை இப்படிப் பழிவாங்கி இருக்க வேண்டாம்!

கிட்டு: எல்லாருமாச் சேர்ந்து நம்மைப் பழி வாங்கிட்டாங்க. படப்பிடிப்பு, கதை வசனம் எல்லாமே ரொம்பப் புவர்.

பாலு: என்னிடம் மந்திர விளக்கு கிடைச்சா பூதத்தை வரவழைச்ச முதல் காரியமா இந்தச் சினிமா எந்தத் தியேட்டரிலும் ஓடாதபடி செய்திருப்பேன்! -கௌசிகன்



''ஜோக், துணுக்குகளா நிறைய அனுப்புறீங்களே, அது பத்திரிகையில் வந்தா எப்படி இருக்கும்? வராட்டா எப்படி இருக்கும்?''

''வந்தா 'ஜோக்கா' இருக்கும். வராட்டா 'துணுக்' குன்னு இருக்கும்!''

★

''நம்ம ராமையா கடையில ஜீனி வாங்கிறது ஒரு சௌகரியம்.''

''என்ன?''

''ரவாலாடுக்குத் தனித்தனியா ரவையும் ஜீனியும் வாங்கிக் கலக்கிற வேலே மிச்சம்!''

—வ. தேனப்பன்

★

நிருபர்: ஏன் உங்களுக்கு இப்படித் திடீர் கோபம்?

நடிகை: உங்க பத்திரிகையில் ''இந்தப் படத்தில் துணிவோடு நடித்திருக்கிறர்'' என்று போட்டிருக்கிறர்களே!

நிருபர்: மன்னிக்கணும், துணிவோடு என்று போடுவதற்குப் பதிலாகத் துணியோடு என்று பிரசுரம் ஆகிவிட்டது!

★

ஒருவர்: அவர் ரொம்பக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தார்!

நண்பர்: எப்படி?

ஒருவர்: இவர் பிறக்கும்போது இவங்க அம்மா கஷ்டப்பட்டாங்க, படிக்கும்போது இவங்கப்பா கஷ்டப்பட்டாங்க, வேலேக்காக இவங்க மாமா கஷ்டப்பட்டாங்க!

- எஸ். சந்திரசேகர்

★

அப்பா: ''அடேய், பூனே வாலேப் பிடிக்க இழுக்காதேடா!''

பையன்: ''நான் சும்மா பிடிச்சிண்டிருக்கேன்; அதுதான் இழுக்குது!''

— சாமி

★

பசும்பால் புட்டிப் பாலேப் பார்த்துக் கேட்டது: ''என்ன, ஃப்ரெஷ்ஷாய் இருக்கியே?''

புட்டிப்பால்: ''பவுடர் போட்டிருக்கேனே, அதனுல்!''

—சம்பத்குமார்

''உங்க தியேட்டரைத் திறந்த வெளி தியேட்டராக மாற்றிட்டீங்களாமே!''

''உம்... கடன்காரர்கள் பாக்கிக்காகக் கூரையைப் பிரித்துக் கொண்டு போய் விட்டார்கள்!''

★

ஹோட்டல் முதலாளி: காலேயில்தான் இங்கு நீ வேலேயில் சேர்ந்தாய்! அதற்குள் லீவு கேட்கிறயே, எதற்கு உனக்கு லீவு?

சர்வர்: வயிற்று வலி, அஜீரணம்...!

★


சரக்கு மாஸ்டர்: நேற்று மீந்துபோன இட்லியை இன்று கிச்சடி செய்தாயிற்று. இன்று மீந்து போன கிச்சடியை என்ன செய்யலாம்?

- சுதர்ஸன்

★

ஒரு வாசகியின் கடிதம்: ''பலாப்பழத் தோலில் தங்கள் பத்திரிகையில் கூறியபடியே ஊறுகாய் போட்டுவிட்டேன். ஒரே ஒரு சந்தேகம். அதை நீங்கள் சாப்பிடுவதா, நான் சாப்பிடுவதா?''

— ராம்





அயோத்தி கட்டிமுடிக்கப்படுகிறது...

அது ஒரு புதிய காலனி. சென்னை நகருக்கு மேற்கே உருவாகியிருக்கிறது. சென்னை நகரம் தன் 'மெட்ரோபாலிட்டன்' என்ற நீண்ட கரத்தினுல் அந்தப் புதிய காலனியை அணைத்துக் கொண்டுள்ளது. ஆனால் மெட்ரோபாலிட்டன் வசதிகள் எதுவும் அங்கு எட்டிப் பார்க்கவில்லை. யாராவது விருந்தாளிகள் வீட்டுக்கு வந்தால் ''கார்ப்பரேஷன் தண்ணி என்ன சார் பிரமாதம்! எங்க வீட்டுக் கிணற்றுத் தண்ணி கல்கண்டு மாதிரி இருக்கும்'' என்று கூறிப் பெருமைப் பட்டுக் கொள்வார்கள்.

அந்த அத்வானத்தில் முதன்முதலாக பிளாட் வாங்கி ஜகதீசன் வீட்டைக் கட்டிக் கொண்டார். அதன் பின்னர் மற்றவர்கள் படிப்படியாக வீடு கட்டிக் காலனி உருவாகி விட்டது. ஜகதீசனுக்குத் தம் முதன்மை கருதி அந்தக் காலனிக்குத் தம் பெயரை வைக்க வேண்டும் என்ற எண்ணம். ஆனால் உலக விவகாரம் தெரிந்த ஒரு காலனிவாசி அரசினரிடமிருந்து சலுகைகள் பெற ஓர் அரசியல் தலைவரின் பெயரைக் காலனிக்கு வைத்து விட்டார்.

காலனியின் பெயர் பலகையில் தம் பெயர் வர முடியாமல் போயிற்றே என்ற வருத்தம் ஜகதீசனுக்கு. இந்தச் சம்பவம் அவரைக் கொஞ்சம் நிலை கலங்க வைத்து விட்டது.

மகன் லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் சர்ஜனாக இருக்கிறான். மகள் ஏலக்காய் தோட்ட அதிபதி ஒருவரின் மருமகளாய்ச் சிக்மகளூரில் செல்வ போகத்தில் இருக்கிறாள். அவருடைய கடமைகள் முடிந்து விட்டன. மனைவியோடு கொஞ்ச காலத்தை நிம்மதியாகக் கழிக்க வேண்டியதுதானே. நிம்மதிக்கு என்ன குறைவு. காலையில் வடபழனி கோயிலில் தரிசனம். மாலையில் அசுவமேத மண்டபத்தில் கதாகாலட்சேபங்கள். இதைவிட ஒரு 'ரிடயர்டுக்கு' என்ன வேண்டும். ஆனால் ஜகதீசன் மனம் அமைதியின்றித் தவித்தது.

காலனியைக் கடந்து மெயின் ரோட்டுக்கு வந்த அவருடைய கவனத்தைக் கலைத்தது காலனியின் பெயர்ப் பலகை! சிந்தனை தடைப் பட்டது. இதே பெயர் பலகையில் ஜகதீசன் காலனி என்று இருந்திருக்க வேண்டும்... ஆனால் அநியாயமாகக் கெடுத்து விட்டார்கள். இதுமட்டும் ஜகதீசன் காலனி என்ற பெயரில் இருந்தால் நூற்றில் ஒருவராவது 'அது யார் ஜகதீசன்?' என்று கேட்க மாட்டார்களா? தம்மைப்பற்றிப் பேச மாட்டார்களா? சென்னையில் எங்கோ ஒரு மூலையில் ஒரு ஐம்பது குடும்பங்கள் குடியிருக்கும் ஒரு காலனிக்குத் தம் பெயர் வைத்தால் என்ன?

கோமல் சுவாமிநாதன்

எனக்குத் தகுதி இல்லையா. புதர் மண்டிக் கிடந்த இடத்தில் முதமுதல் வீடுகட்டி தைரியமாகக் குடி வந்தேனே. ஆனல் இந்த 'இக்கினி யூண்டு' ஒரு காலனிக்குத் தம் பெயர் இல்லாமல் மறைத்து விட் டார்களே!

தம் பெயர்... ஜகதீசனுக்குச் சுருக்கென்று தைத்தது. 'தான்' இன்னும் தம்மை விட்டு கழலவில்லை. தமக்கு விவேகம் இல்லை, வைராக்யமும் வரப் போவதில்லை.

காலனிக்கு மறுபக்கத்தில் இருந்த புதர் மண்டிக் கிடந்த புறம்போக்கு நிலத்தை யோசனையுடன் கடந்தார் ஜகதீசன். தம் பெயரை நிலைநாட்ட ஏதாவது செய்ய வேண்டும் என்று அவரை அவர் மனம் வற்புறுத்திக் கொண்டிருந்தது.

ஒரு பெரிய கல் தடுக்கிக் கீழே விழப் போனுர் ஜகதீசன். தம்மைச் சமாளித்துக் கொண்டு தம் நிலைக்கு வந்தார். தம்மைத் தடுக்கி விட்ட அந்தக் கல்லை உற்று நோக்கினர். அது சாதாரணக் கல் அல்ல. சிவலிங்கம். பாதி பூமியில் மறைந்து பாதிமட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. அந்த இடம் முழுவதுமே ஒரு புதர். ஜகதீசனுக்கு ஆச்சரியம் மேலிட்டது. ஒரு பொதுக் கழிவிடமாக மக்கள் உபயோகிக்கும் இடத்தில் ஒரு சிவலிங்கமா? சிவலிங்கத்தைச் சுற்றியுள்ள புதர்களை விலக்கிக் கொண்டு பார்த்தார். சற்றுத் தூரத்தில் ஒரு கல்தூண் அழகிய வேலைப்பாட்டுடன் பாதிவெளியே நீட்டிக் கொண்டிருந்தது. இவை எல்லாம் நிச்சயமாகப் பழங்காலக் கோவில் ஒன்றின் இடிபாடுகளாகத்தான் இருக்க வேண்டும். "குலோத்துங்க சோழன் காலத்ததாக இருக்குமோ?" என்ற ஆராய்ச்சி அவர் மனத்தில் புகுந்தது. புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்துக்கு எழுதிப் போட்டால் உண்மை தெரியலாம். ஆனல் அவர்கள் அதைத் தோண்டி எடுத்து மியூசியத்துக்குக் கொண்டு போய் விடுவார்கள்.

ஜகதீசன் மனத்தில் பளிச்சென்ற ஓர் ஒளி.. இந்த ச்சிவலிங்கத்தை இதே இடத்தில் பிரதிஷ்டை செய்தால் என்ன? தம் பெயரை நிலைநாட்ட இதைவிட என்ன காரியம் செய்து விடப் போகிறோம். ஜகதீசனுக்கு ஒரு நொடியில் தம் வாழ்க்கைப் பணி என்னவென்று புரிந்து விட்டது. சிவலிங்கத்தை எழுப்பிப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். சுற்றிலும் பிராகாரம் கட்ட வேண்டும். மதிள் சுவர்கள் எழுப்ப வேண்டும். ஜகதீசன் பெயர் காலம் காலமாக நிற்க அந்த ஆண்டவனே வழிவகுத்து விட்டான்!

பணம் பல லட்சங்கள் செலவாகுமே அதனல் என்ன, அந்தரங்க சுத்தியோடு தூங்கும் நேரம் போகத் தினம் இதற்காகவே உழைக்கும் போது பணம் கிடைக்காமலா போகும்? எத்தனை செல்வந்தர்கள் கோவில்களுக்கெனக் கொட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிருர்கள். ஜகதீசனுக்குத் தம் நண்பன் நடராஜன் வருமான வரி இலாக்காவில் இருப்பது நினைவுக்கு வந்தது. நல்லவேளை. அவன் இன்னும் ரிடையர் ஆகவில்லை. அவன் மூலம் இந்தக் கோவிலுக்குக் கொடுக்கும்

ஓசைகள்!

ஓசை நயங்களை அழகாக இயம்பும் நாட்டுப் பாடல்:

"காற்று பரபரங்க — ஆற்றோரம் நான் போக
மழையும் பொசபொசங்குதே — ஆத்தே அம்மாடீ
மழையும் பொசபொசங்க — ஆற்றுக்குள்ளே நான் போக
மீனு கொசகொசங்குதே — ஆத்தே அம்மாடீ
மீனு கொசகொசங்க — புல் வீட்டுக்கு நான் போக



கெளுளி மொணமொணங்குதே — ஆத்தே அம்மாடீ
கெளுளி மொணமொணங்க — அடுப்பண்டே நான் போக
சோறு தொளபுளங்குதே — ஆத்தே அம்மாடீ
சோறு தொளபுளங்க — சோடாக் கடைக்கு நான் போக
சோடா சொடாபுடாங்குதே — ஆத்தே அம்மாடீ"

—கவிஞர் பா. வரதராஜன் தொகுத்துள்ள 'தமிழக நாட்டுப் பாடல்கள்' லிருந்து. - டாக்டர் இரா. மோகன்.

நிதிக்கு வருமான வரி விலக்கு வாங்கி விடலாம்.

உடனே ஜகதீசனின் மனம் ஜகதீசுவரர் ஆலயத் திருப்பணிக் கமிட்டியை உருவாக்கி விட்டது. தம்மையுமறியாமலேயே கண்டெடுத்த லிங்கத்துக்குத் தம் பெயரையே மனம் சூட்டி விட்டது. அதனல் தவறு என்ன. டில்லியிலுள்ள லக்ஷ்மி நாராயணர் ஆலயத்தை 'பிர்லா மந்திர்' என்றுதானே சொல்கிருர்கள். அங்கு பிர்லாவா உபாசனை தெய்வம்? இதே சிவலிங்கம் எந்தப் பெயரோடு அந்தக் காலத்தில் வழங்கிளுலும் சரி இனி இதன் பெயர் ஜகதீசுவரர். நிச்சயமாக இந்த விஷயத்தில் அந்த அரசியல் தலைவர் போட்டிக்கு வர மாட்டார்.

ஜகதீசன் லிங்கத்தை இரு கைகளாலும் தொட்டு வணங்கினர். 'நான் உனக்கு ஒரு கோவில் கட்டப் போறேன். உனக்கு ஆறுகால பூஜை நடத்த வழிவகுக்கப் போகிறேன். என் பெயரை இதன்மூலம் நிலைநாட்டப் போகிறேன். என் முயற்சி வெற்றி அடைய நீதான் அருள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்.

மாலை முழுதும் இருட்டிக் கொண்டிருந்த வானம் தூறலாக ஆரம்பித்து மழையாகக் கொட்டத் தொடங்கியது. ஜகதீசன் புதிய உற்சாகத்துடன் வீட்டுக்குப் புறப்பட்டார். பெயர்ப் பலகையைக் கடக்கும் போது அவர் மனம் ஏளனமாக அதைப் பார்த்தது. "இது என்ன பெயர்? என் பெயரைக் கல்லில் எழுதப் போகிறேன்" என்று அவர் மனம் கூறிக் கொண்டது. தெப்பமாக நனைந்து வீட்



அம்மா: கடையிலே இருக்கிறதை எல்லாம் கேட்டால் வாங்கித் தர முடியாதே, கண்ணு!
பிள்ளை: வாங்கித் தர முடியாததை ஏம்மா விக்கிறாங்க?

— அராம். ஆனைமுகன்


டுக்குள் நுழைந்தார். அதை லட்சியம் செய்யாமல் மனைவியிடம் விஷயத்தை விளக்கி,

''இப்ப நம்ப வீட்டுல எவ்வளவு பணம் இருக்கும்?'' என்று கேட்டார்.

''இருநூறு ரூபாய் இருக்கும்.''

''அதை இப்பவே கொண்டு வா... இன்னிக்கே நல்ல நாள். ஜகதீஸ்வரர் ஆலயத்துக்கு என் முதல் காணிக்கை அது.''

''ஜகதீசன் சமையலறையில் காலியாக இருந்த ஒரு போர்ன்விடா டப்பாவை எடுத்தார். பயபக்தியுடன் பூஜை அறைக்குச் சென்றார். சுவாமி படங்களுக்கு முன்னால் அதை வைத்து இருநூறு ரூபாயும் சில்லறையும் அதில் போட்டார். ''இனி என் வருமானத்தில் மிகக் குறைந்த பணத்தை வீட்டுச் செலவுக்காக வைத்துக் கொண்டு பாக்கியை இந்தக் கோவில் நிதியில் போட்டு விடப்போகிறேன். என்ன கஷ்டம் வந்தாலும் இதிலிருந்து ஒரு காசு எடுக்க மாட்டேன்.



நாளைக்கே காலனி வாசிகளைக் கூப்பிட்டு என் தலைமையில் ஒரு கமிட்டி அமைத்து பாங்க் அக்கவுண்ட் ஆரம்பிக்கப் போகிறேன். என்னுடைய முயற்சியால் வடபழனிக்கு நிகரான கோவில் இங்கு உருவாகப் போகிறது'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

மறுநாள் காலை நான்கு மணிக்கு அவருக்கு விழிப்புக் கொடுத்து விட்டது. எழும்பொழுதே கோவில் சிந்தனைதான். நல்லவேளையாக அன்று ஞாயிற்றுக் கிழமை. காலனிவாசிகள் எல்லாரும் வீட்டில் இருப்பார்கள். ஆறு மணிக்கே கிளம்பிவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வெந்நீரில் குளித்து விட்டுப் பூஜை அறைக்கு வந்தார். சுவாமிக்கு நமஸ்காரம் செய்துவிட்டு உண்டியலைத் தொட்டுக் கும்பிட்டார்.

''ஆண்டவனே! லட்சம் லட்சமாகப் பெருக வேண்டும்.''

''ஆண்டவனே! சாமி! '' என்று வாசலில் ஒரே கூக்குரல். அலறல் சப்தம். ஜகதீசன் வாசலுக்கு வந்தார். அவர் வீட்டு வேலைக்காரி அலங்கோலமாக நின்று கொண்டிருந்தாள். அருகில் அவள் கணவன். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவன். அவள் கையில் ஒரு குழந்தை. எட்டு, பத்து வயதில் இரண்டு சிறுவர்கள்.

''என்னம்மா?''

''சாமி! ராத்திரி பெய்த மழையில் வீடு இடிஞ்சு போச்சு சாமி. கூரையெல்லாம் பிச்சுக்கிட்டுப் போச்சு. ராவு முழுக்க நாங்க மழையில நனைஞ்சுக்கிட்டு வெளியே உட்கார்ந்து இருந்தோம் சாமி. வீட்டை எடுத்துக் கட்டிக் கூரை வேஞ்சாதான் சாமி அங்கே இருக்க முடியும்? புள்ளைகளை வச்சுக்கிட்டு எத்தனை நாளைக்குச் சாமி நடுத்தெருவில இருக்க முடியும். நீ எதுனாச்சும் உதவி பண்ணு சாமி... தலைமுறைக்கு உங்க பேரைச் சொல்லிக் கிட்டிருப்போம்.''

ஜகதீசன் கையில் தற்சமயம் காலணா இல்லை. ஆனால் உண்டியலில்? சுவாமி பணத்தையா... சே... சே...

புதரில் இருந்து தலைநீட்டிய சிவலிங்கம் பேசியது.

''ஜகதீசா! எனக்குக் கோவில் எங்கே கட்ட வேண்டும் தெரியுமா? அந்த ஏழையின் வீட்டில். நீ நினைத்தால் முடியும். இதற்கு, கமிட்டி, நிதிவசூல், ஆர்ப்பாட்டம், பெயர்ப் பலகை எதுவும் வேண்டாம். உன் பெயரை அந்த ஏழைக் குடும்பத்தின் மனத்தில் எழுதி விடு. அது காலத்தால் அழியாத பெயர்ப் பலகையாக நின்றுவிடும்.''

ஜகதீசன் பூஜை அறைக்குச் சென்று உண்டியலைத் திறந்தார். கோவில் கட்டி முடித்து விட்ட திருப்தி அவருக்கு. உண்டியலில் இருந்த பணத்தை நடுங்கிக் கொண்டிருக்கும் அந்த வேலைக்காரியின் கைகளில் போட்டார். புதர் ஓரத்துச் சிவலிங்கம் தன் கோவிலைத் தானே கட்டிக் கொண்டு விட்டது.



கல்கி துணை ஆசிரியர் **கௌசிகன்** அவர்களின் புதல்வரும், புது டில்லி பஹாட்கஞ்ச் இந்தியன் பாங்க் கிளையில் ஆபீஸராகப் பணியாற்றும் திரு **பாலசுப்ரமணியனுக்கும்** - புது டில்லி மத்திய அரசில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு எல். ஆர். நாராயணசுவாமி அவர்களின் புதல்வி சௌ. **லலிதாவுக்கும்** சென்னை உஸ்மான் ரோடிலுள்ள எல். ஆர். சுவாமி கல்யாண மண்டபத்தில் சமீபத்தில் நடந்த திருமணத்துக்கு நண்பர்களும், எழுத்தாளர்களும் பத்திரிகை உலகப் பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்துத் தம்பதிகளை வாழ்த்தினர்கள்.

வாழ்க மணமக்கள்.

தில்லையம்பலவனுக்கு திருமறைப் பணியும் வேத வகுப்பும்

வேதநாயகனாக விளங்கும் தில்லைத் திருக்கூத்தன் முன் பிரதி தினமும் காலை 7 முதல் 8 வரை, வேதத்துக்கு இருவருக்குக் குறையாமல், ருக், யஜுர், சாம வேத பாராயணமும், அவர்களுக்கு பகல் போஜனத்துடன் ஸம்பாவனையும் ஸ்ரீ சித் ஸபேச த்ரிவேத பாராயண பரிபாலன ஸபா (பதிவு பெற்றுள்ளது) நடத்தி வருகிறது. இதற்கு மூலதனமாகத் தேவை ரூ. ஒரு லட்சத்துக்கு ரூ. 60,000 சேர்ந்துள்ளது.

தவிர யஜுர் வேதத்தில் 14 மாணவர்களுக்கும், ஸாம வேதத்தில் 5 மாணவர்களுக்கும் வேத வகுப்பு நடந்து வருகிறது. இதுபோல் ருக் வேதத்திலும் வகுப்பு துவங்க இருக்கிறது. இதற்கு மூலதனமாக ரூ. ஒரு லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே ஆயுட் சந்தா தொகையாக ரூ. 100ம் அதற்கு மேலும் ஆஸ்திக அன்பர்கள் அளித்து ஆதரிக்கக் கோரப்படுகிறது.

முகவரி: ஸ்ரீ சித்ஸபேச த்ரிவேத பாராயண பரிபாலன ஸபா, 73. வடக்கு வீதி, சிதம்பரம்



திருப்பூர் K. சுப்பிரமணியம் வீவிங் பாக்டரி உரிமையாளரும் [illegible] மில்ஸ் பார்ட்னருமான ஸ்ரீ K. சுப்பிரமணியம் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி S. ரத்னமாலா B.A.க்கும் அன்னூர் கார்த்திகேயா ஜவுளி ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ A. ராமசாமி அவர்களின் குமாரர் சிரஞ்சீவி R. கார்த்திகேயன் B.Sc., D.H.M.C.T., P.D.S.H.M.க்கும் திருப்பூர் ஸ்ரீ காமாட்சியம்மன் கல்யாண மண்டபத்தில் 17—5—79 அன்று மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணத்துக்கு வந்திருந்த பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துத் தந்தி அனுப்பியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க மணமக்கள்!

ஒரு இண்டர்வ்யூ

காட்சி ஒன்று

தந்தை: ராமானுஜம்
மகன்: ரங்காச்சாரி.

[ராமானுஜம் தமது வீட்டின் ஹாலில் ஈஸிச்சேரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு டிரான்ஸிஸ்டரைத் திருகிக் கொண்டிருக்கிறார். மகன் ரங்காச்சாரி அப்பொழுதுதான் வெளியிலிருந்து வீட்டுக்குள் வருகிறான். அப்பா இருப்பதைக் கவனியாமல் விசில் அடித்துக் கொண்டு குஷியாக வருகிறான்.]

ராமானுஜம்: டேய் நிறுத்துடா... ஆமா என்ன ரொம்ப குஷியாய் இருக்கே?

ரங்காச்சாரி: (அப்பொழுதுதான் அவரைக் கவனித்து) அப்பா, நீங்க வந்துட்டீங்களா, நான் கவனிக்கவே இல்லே.

ராமானுஜம்: போகட்டும். நீ வேலை தேடப் போகும் போது எனக்கும் சேர்த்து ஒரு வேலை டார். நானும் மறுபடியும் வேலைக்குப் போகணும். ரிடையர் ஆனதும் சும்மா வீட்ல உக்கார என்னால் முடியாது.

ரங்கா: எனக்கு வேலை கிடைக்கிறதே குதிரைக் கொம்பா இருக்கு. இதுல உங்களுக்கும் சேர்த்துத் தேடச் சொல்றேள்.

ராமா: அதெல்லாம் கவலையே படாதே. இன்னும் ஒரு மாசத்துல உனக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு பண்ணிடறேன். எனக்குத்தான் இனிமே வேற வேலை கிடையாதே. குஷியான மூட்ல வந்தாயே... என்ன விஷயம்?

ரங்கா: ஒரு 'குட்' நியூஸ் – அப்பா, எனக்கு நாளன்னைக்கு ஒரு கம்பெனியிலிருந்து 'இண்டர்வியூ'விற்குக் கூப்பிட்டிருக்கான்.

ராமா: பூ... இண்டர்வியூதானே என்னமோ வேலையே கிடைச்சுட்டாப் போல் சொல்றியே. அடிக்கடி 'இண்டர்வியூ'தான் வரது. 'அப்பாயிண்ட்மெண்ட்' வரலியே.

ரங்கா: இல்லேப்பா.... இந்த 'இண்டர்வியூ'ல 'சக்ஸஸ்' ஆகி, 'வேலை கிடைக்கும்' என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.

ராமா: அது எப்படி அவ்வளவு 'கான்பிடெண்டா' சொல்றாய்?

ரங்கா: என் பிரண்ட் ஒருத்தன் என்னை ஒரு கைரேகை நிபுணனிடம் அழைச்சுண்டு போயிருந்தான். அவனிடம் கையை நீட்டினேன். எனக்குக் கல்யாணம் ஆன பிறகுதான் வேலை கிடைக்கும்னு அவன் சொல்லிட்டான்.

ராமா: ஓ... கிடைக்குமே... கிடைக்கும். உனக்குக் கல்யாணம் ஆனா ஆபீஸ் வேலை கிடைக்கிறதோ இல்லியோ நிச்சயமா வீட்டு வேலை கிடைக்கும். போடா போ. ஏதோ கையை நீட்டினாலும்... வேலை கிடைச்சுடுமாம்...


காட்சி இரண்டு

[வழக்கமாகச் சந்தித்துக் கொள்ளும் 'டிரைவ் இன்னில்' பிரபா காத்துக் கொண்டிருக்கிறாள். ரங்காச்சாரி தாமதமாக வரவே கோபமடைகிறாள்.]

பிரபா: வரவர உங்களுக்கு பங்சுவாலிடி துளிக்கூட கிடையாது. இப்படியா என்னைக் காக்க வைக்கிறது? நாளைக்கே ஒரு கம்பெனியில் வேலை கிடைச்சதுன்னு நேரத்துக்குப் போறது வரது இதெல்லாம் எவ்வளவு உபயோகமா இருக்கும்னு தெரிஞ்சுப்பீங்க.

ரங்கா: நீ சொல்றது சரிதான். மொதல்ல எனக்கு ஒரு வேலை கிடைக்கட்டும், அப்புறம் பார்த்துக்கலாம்.

பிரபா: அது என்னவோ எனக்குத் தெரியாது ரங். இன்னும் மூணு மாசத்துக்குள்ள நீங்க ஒரு வேலையைத் தேடிக்கணும்னு அவ்வளவுதான்! உங்களுக்கு ஒரு வேலை கிடைச்சப்புறம்தான் நம்ம காதலைப் பற்றிச் சொல்லிக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய முடியும். அதுக்கு முன்னாடி ஒண்ணும் செய்ய முடியாது. நாம இப்





கல்யாணமாகிறது!

பூண்டி

படி டெய்லி மீட் பண்ணிண்டு இருக்க வேண்டியதுதான்.

ரங்கா: வருத்தப்படாதே பிரபா. இன்னும் மூணு மாசத்துல எப்படியாவது ஒரு வேலையில் சேர்ந்துடறேன். நாளைக்குக் கூட ஒரு கம்பெனியில் 'இண்டர்வியூ' வந்திருக்கு ஏதோ 'ரிங்ஸ் அண்ட் சர்க்கிள்ஸ்'னு போட்டிருக்கு. என்ன கம்பெனின்னே தெரியல. இன்ஜினீயரிங் சம்பந்தமா இருக்கும்னு நினைக்கிறேன். இந்த வேலையாவது கிடைக்கணும்... அப்பதான் நம்ம கல்யாணம் நடக்கும்.

பிரபா: நாளை இண்டர்வியூவுக்கு எல்லாம் நல்லாப் படிச்சுத் தயாரா யிருக்கீங்களா? வெறுமே ஜோக் அடிக்காதீங்க. சீரியஸ்ஸா இண்டர்வியூ நடக்கச்சே ஜோக் அடிச்சீங்கன்னு மானேஜருக்குப் பிடிக்காமப் போய் விடும். வேலையும் கிடைக்காது.

ரங்காச்சாரி: என்னமோ அந்த மானேஜரை பர்சனலாத் தெரிஞ்சு வைச்சுண்டிருக்கிற மாதிரின்னு பேசறே. பிரபா! ப்ளீஸ் நிஜமாகவே அவரைத்தெரியுமா? தெரிஞ்சா எனக்கு என் வேலைக்காகக் கொஞ்சம் ரெகமெண்ட் பண்ணேன் பிரபா.

பிரபா: உங்களுக்கு ரெகமண்டேஷனே தேவை இல்லே. 'ப்யூர் மெரிட்'லேயே கிடைக்கும். கவலையை விடுங்க... வாங்க ஜாலியா இப்படி ஒரு 'வாக்கிங்' போகலாம்.

காட்சி மூன்று

['சர்கிள்ஸ் அண்ட் ரிங்ஸ்' கம்பெனிக்குள் அவசரமாகச்செல்கிறான் ரங்காச்சாரி. நேராக இண்டர்வியூவிற்கு அழைக்கப்படுகிறான்.]

மானேஜர்: யூ ஆர் இன் டைம்! ஐ அப்ரிஷியேட் யுவர் பங்சுவாலிடி.

ரங்காச்சாரி: தேங்க்யூ சார்...

மானேஜர்: யுவர் நேம்?

ரங்கா: ரங்காச்சாரி.

மானேஜர்: மாரீட்?...

ரங்கா: பிரம்மச்சாரி!

மானே: குவாலிபிகேஷன்!

ரங்கா: பட்டதாரி.

மானே: சேல்ஸ்மன் போஸ்டுக்கு அப்ளை பண்ணியிருக்கியே வண்டிகிண்டி ஏதாவது ஓட்டத் தெரியுமா?

ரங்கா: பாதசாரி...

மானே: ஐ ஆம் ஸாரி... ஒரு வார்த்தைக்கு மேல் பதிலே கிடையாதா?

ரங்காச்சாரி: சாரி... சார்... எனக்கு அடிக்கடி 'குவிஸ்' நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு, ஒரு வார்த்தைக்கு மேலே பேச முடியலே.

மானே: பரவாயில்லே. 'யூ நோ ப்ரீவிடி ஈஸ் தி ஸோல் ஆப் தி விட்!'

ரங்காச்சாரி: (உரக்கச் சிரித்து விட்டுத் தனக்குள்)இதுலஎன்ன விட்டுன்னே தெரியலையே?

மானேஜர்: சரி குவிஸ் ப்ரோக்ராம்ல கேட்கிற மாதிரியே ஒரு கேள்வி கேக்கறேன். புல்லாங்குழல்னு புல்லாங்குழலுக்கு ஏன் பெயர் வந்தது? சொல்லுங்க பார்க்கலாம். (கடிகாரத்தைப் பார்த்துக்கொள்கிறார்) சரியாக உங்களுக்கு 30 செகண்ட் தரேன். (மணியை அடிக்கச் சரியாகக் கையை வைத்துக்கொள்கிறார்.)

ரங்கா: (தனக்குள்) புல்லாங்குழலுக்குப் புல்லாங்குழல்னு தான் பெயர். பின்னே பல்லாங்குழல்னா இருக்கும். என்ன கேள்வி இது...? யோசிக்கிறான். பிறகு சொல்கிறான்) புல்லாங்குழல்... யூ மீன் 'ப்ளுட்'.. யூ மீன் புல்லாங்குழல்... வந்து ... மூங்கில் ஒரு 'புல்' வகையைச் சேர்ந்தது. அதுல

'லாங்'கா குழல் செய்யறதாலே... புல் லாங்குழல்னு' பேர் வந்தது... வந்திருக்க லாம்...

மானே: யூ ஆர் கரெக்ட். உங்களுக்கு ஒரு மார்க் தரேன்.

ரங்கா: மார்க் வேணும் சார். வேலேதான் வேணும்.

மானேஜர்: ஓ.... இண்டர்வியூ டண் ணிண்டு இருக்கேன் இல்லியா... தேங்க்யூ பார் ரிமைண்டிங் மீ...

ரங்கா: (தனக்குள்) இவாளுக்கெல்லாம் இண்டலாப் போச்சு. வாட் எ பர்னிங் பிராப்ளம் இஸ் திஸ் அன்எம்ப்ளாய் மெண்ட்? இவா என்னடான்னு அத 'லைட்'டா 'என்டர்டெய்னிங்கா' எடுத் துண்டு இண்டர்வியூ பண்ணிண்டிருக்கா!

மானே: என்ன முணுமுணுப்பு?

ரங்கா: ஹி... ஹி... அதெல்லாம் ஒண்ணும் இல்லே; இது இண்டர்வியூ மாதிரியே இல்லே ரொம்ப ஹோம்லியா இருக்குன் னேன்...

மானேஜர்: சரி, உங்களுக்கு முறுக்கு எப்படிச் செய்யறதுன்னு தெரியுமா?

ரங்கா: (தனக்குள்) இண்டர்வியூவில் என்ன தான் கேக்கறதுன்னு இல்லே. சரி அதுபத்தி இப்போ... வேலே கிடைக்கணும்.... (உரக்க) ...பிரமாதமா செய்வேன் சார். (விவரிக்கிறான்)

மானே: பலே, பலே நல்லாச் சொல்றியே.

ரங்கா: எல்லாம் எங்க பாட்டியினுடைய ஆசீர்வாதம் தான் சார். 'சாப்பிட மட்டும் தெரிஞ்சாப் போதாது. செய்யவும் தெரியணும்'னு சொல்வா.

மானே: ஆம்பிளேன்னு இப்படித்தான் இருக் கணும். இந்தக் காலத்துல ரொம்ப 'யூஸ் புல்'லா இருக்கும். பைதி பை உன் கோத்தி ரம் என்ன? ஸ்டார் என்ன?

ரங்காச்சாரி: (தனக்குள்) மனுஷன் என்ன மானேஜரா இல்லே மேரேஜ் புரோக்கரா? எதுக்கு இதையெல்லாம் கேக்கறுர்? வேலே கிடைக்கணுமே... சொல்லி வைப்போம். (உரக்க) பாரத்வாஜ கோத்திரம். ரேவதி நக்ஷத்திரம் நீங்க என்ன ஏதாவது அர்ச்சனே செய்யப் போறீங்களா?

மானேஜர்: (சிரித்துக் கொண்டே, மனத்தில் ஏதோ கணக்கு போடுகிற பாவனேயில்) என்ன வயசு?

ரங்காச்சாரி: அதான் அப்ளிகேஷன்ல போட் டிருக்கேனே!

மானே: மறுபடியும் சொன்ன என்ன குடி முழுகிப் போயிடுமா?

ரங்காச்சாரி: (பயந்த மாதிரி) இருபத்தியாறு சார்!

மானே: நீங்க என்ன 'எம். ஏ'வா அல்லது எம். எஸ். ஸியா? அப்ளிகேஷன்ல 'பி. ஜி.'னு போட்டிருக்கீங்க. கேட்டா வெறும் பட்ட தாரின்னு சொல்றீங்க!

ரங்காச்சாரி: அதுவா... வந்து... வந்து நான் பி. ஏ. தான். 'கரஸ்பாண்டென்ஸ்' கோர்ஸ் செய்து 'போஸ்ட்' டியூஷன் படிச்சதாலே 'போஸ்ட் கிராஜுவேட்'னு போட்டேன்... ஹி... – ஹி...

(காலிங் பெல்லே அழுத்துகிறார். போன் செய்து ஏதோ சொல்கிறார். மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார். பியூன் ஒரு பிளேட்டில் பொரித்த அப்பளாம் இரண்டு எடுத்து வந்து மேஜையில் வைக்கிறான்.)

மானே: இந்த அப்பளத்தின் ஏரியா, டையா மீட்டர் இவைகளேக் கணக்கிட்டுச் சொல் லுங்கள்.

ரங்கா: (விழிக்கிறான். அப்பளத்தைத் தொட்டதும் நொறுங்கி விடுகிறது. பரி தாபமாகப் பார்க்கிறான்.)

மானே: சரி, சரி. வெளியில் போய் 'வெயிட்' பண்ணுங்க. மறுபடியும் கூப்பிடுகிறேன்.

(ரங்காச்சாரி தலேயைச்சொறிந்துகொண்டு. தனக்குள் 'இந்த வேலே கிடைக்கும்னு நம் பிக்கை எனக்கில்லே' என முணுமுணுப்புடன் வெளியே வருகிறான். அப்பொழுது அங்கே வருகிறாள் பிரபா.)

ரங்கா: (திடுக்கிட்டு) என்ன பிரபா திடீர்னு இங்கே வந்தே! நீயும் வேலேக்கு மனு போட் டிருக்கிறயா?

பிரபா: உஷ். இது ஆபீஸ்... பார்க் இல்லே. வாங்க அங்கே ஓரமாய்ப் போய்ப் பேச லாம்!

(மானேஜர் அறையிலிருந்து சற்றுத் தள்ளி நின்று கொண்டு பேசுகிறார்கள்.)

பிரபா: இண்டர்வியூ ஆன பிறகு உடனே போன் செய்யறதாய்ச் சொன்னீங்க. இத்தனே நேரமா காத்திண்டிருந்தேன். நீங்க காலே வரலே. அதான் என்ன ஆச் சுன்னு பார்த்துட்டுப் போகலாம்னு வந் தேன். ஆமாம் என்ன டல்லா இருக்கீங்க? இண்டர்வியூ 'பிளாப்' ஆயிடுத்தா? (சிரிக் கிறாள்.)

ரங்காச்சாரி: எனக்கு இருக்கிற எரிச்சல்ல... இப்போ... ஆமாம் 'பிளாப்' தான். எவனே ஒருத்தன் கர்ணகடூரமா கத்திண்டு உயிரை வாங்கிடுத்துட்டான்... பொரிச்ச

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

''நர்சை கல்யாணம் செய்து கொண்டது பெரிய தப்பாய் போச்சு...!''

''ஏன்...?''

''அடிக்கடி மறந்து போய் 'சிஸ்டர்' என்று கூப்பிட்டு விடுகிறேன்...!''



அப்பளத்துக்கு 'ஏரியா' கண்டுபிடி. அது இதுன்னு... இண்டர்வியூவா இல்லை...

பிரபா: (சிரித்துக் கொண்டே) அப்போ உங்களுக்கு வேலையும் கிடைக்காது, கல்யாணமும் ஆகாது போலிருக்கே!

ரங்காச்சாரி: நீ நல்லாச் சிரி. அவன் என்னடான்னு முறுக்கு சுத்தத் தெரியுமா? புல்லாங்குழல்னு ஏன் பெயர் வந்தது? சமையல் தெரியுமான்னு பாட்டியைக் கேட்க வேண்டிய கேள்விகளையெல்லாம் எங்கிட்டக் கேக்கறான்.

பிரபா: இருந்தாலும் நீங்க நல்லா 'ரிப்ளை' பண்ணியிருப்பீங்க. ஆமாம் நீங்க என்ன சமையல் வேலைக்கா மனுப் போட்டிருந்தீங்க?

ரங்காச்சாரி: நான் கூட அப்படித்தான் நினைச்சேன். அதை விடு. இன்னொண்ணு தெரியுமா? என் கோத்திரம், நக்ஷத்திரம், வயது இதையெல்லாம் வேறே கேக்க ஆரம்பிச்சுட்டான்.

(அப்பொழுது பியூன் வந்து ரங்காச்சாரியை மானேஜர் அழைப்பதாகக் கூறுகிறான்.)

பிரபா: கவலையே படாதீங்க, டியர். உங்களுக்கு நிச்சயமா இந்த வேலை கிடைக்கும். ஏன், நீங்க இந்த கம்பெனிக்கே பார்ட்னர் ஆகக் கூட ஆகலாம்!

ரங்காச்சாரி: அதெப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றே?

பிரபா: எப்படீன்னு உங்களை இண்டர்வியூ பண்ணின கர்ண கடூரம் வேறே யாரும் இல்லே. என் அப்பா தான்.

(அறையில் நுழைந்து கொண்டே மானேஜரைக் காண்பிக்கிறாள்.)

ரங்காச்சாரி: (திடுக்கிட்டு, பிறகு சமாளித்துக் கொண்டு), ஆ அதான பாத்தேன். நெத்தில லட்சணமா திருமண், காதிலே குண்டலம் மாதிரி கடுக்கன், கணீர்னு குரல் என்ன தேஜஸ்... என்ன தேஜஸ் இன்னிக்கெல்லாம் பார்த்துண்டே இருக்கலாம் போல திருமால் மாதிரின்னு இருக்கார். (அங்கேயே விழுந்து ஸேவிக்க முற்படுகிறான்.)

பிரபா: போதும், போதும் உங்க திருமால் பெருமை...

மானே: எனக்கு வேண்டியது பங்சுவாலிடி தான். யூ ஆர் செலக்டட்.

ரங்காச்சாரி: தேங்க்யூ சார்... ஆனா இது இன்னும் என்ன கம்பெனின்னே தெரியலையே. அப்பளத்துக்கு ஏரியா கண்டுபிடிக்க ஒரு கம்பெனியா?

மானே: அதுவா? அதான் 'சர்கிள்ஸ் அண்ட் ரிங்க்ஸ்'ன்னு போட்டிருக்கே. 'சர்க்கிள்ஸ்'னா அப்பளாம். 'ரிங்க்ஸ்'னா முறுக்கு. இப்படி அப்பளாம் முறுக்கு, வத்தல் வடாம் இத்யாதி... இத்யாதி... தயார் செஞ்சு ஏற்றுமதி செய்யற கம்பெனி, மாப்பிள்ளே.

ரங்காச்சாரி: மாப்பிள்ளையா?



மானே: உங்க காதல் விஷயம் எனக்கு முன்னாடியே தெரியும். பிரபா சொல்லிட்டா! நல்ல வேலை. நீங்க என்ன கல்யாணம் செய்துக்காமலா இருக்கப் போறீங்க? நீங்கதான் ஒருத்தரை ஒருத்தர் 'லவ்' பண்றீங்களே! (அப்பொழுது ரங்காச்சாரியின் தந்தை ராமானுஜம் உள்ளே வருகிறார்.)

மானேஜர்: வாங்கோ சம்பந்தி வாங்கோ!

ரங்காசாரி: அப்பா நீங்க எங்கே... இப்படி?

பிரபாவும் மானேஜரும்: எல்லாம் எங்க பிளான்தான்!

ராமானுஜம்: எனக்கும் பூரணச் சம்மதம் தான். கடைசியில் கல்யாணம் ஆனபிறகு தான் வேலை கிடைக்கும் போல இருக்கு.

மானேஜர்: இதோ அடுத்த வாரம் கல்யாணம்... எல்லாம் ரெடி. அப்புறம் உடனே வேலை...

ரங்காச்சாரி: நோ... நோ... நடுவில் 'ஹனி மூன்' ஒரு வாரம்!

ராமானுஜம்: ஏதோ, என் பிள்ளைக்கு ஒரு வழியா கல்யாணமும் ஆகி வேலையும் கிடைக்கப் போறது இனி அடுத்தது நான் தான்.

மானேஜர்: எதுக்குக் கல்யாணத்திற்கா?

ராமானுஜம்: இல்லே, வேலைக்கு!

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி—

1827ம் ஆண்டின் ஒரு சட்டப்படி காந்தி கைது செய்யப்பட்டார். பிரார்த்தனை செய்ய அனுமதித்த பிறகு மணி ஒன்று பத்துக்கு அவரை ஒரு லாரியில் ஏற்றி இருநூறு மைல்களுக்கு அப்பால் பூனாவிலிருந்த எரவாடா மத்தியச் சிறைச் சாலைக்கு அழைத்துப் போயினர். ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்டதான அந்தச் சட்டப்படி நீதி விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை.

மகாத்மா கைதானதைத் தொடர்ந்து புதிய புரட்சி அலை தோன்றியது. பம்பாய் பஞ்சாலைகளின் இயக்கம் நின்றது. ரயில்வே பணிமனைகளில் வேலைகள் நடக்கவில்லை. மகாராஷ்டிரத்தில் ஷோலாப்பூர் நகரத்தின் ஆட்சி கைமாறியது. பன்னிரண்டு ஆர்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டு ராணுவச்சட்டம் அமலாகும் வரை அங்கு தேசியக் கொடிக்குக் கீழ் ஆட்சி நடந்தது.

மகாத்மாவின் இரண்டாவது புதல்வர் மணிலால் காந்தி, சரோஜினி நாயுடு ஆகியோர் தலைமையில் 2500 சத்தியாக்கிரஹிகள் மே மாதம் 21ம் தேதி தராசனா உப்பளத்தின் மீது படையெடுத்தனர். அவர்களை ஆறு பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குக் கீழ் இயங்கிய நானூறு இந்திய போலீஸ்காரர்கள் கருணையின்றி அடித்தனர், கைது செய்தனர். இரு தொண்டர்கள் இறந்து போயினர். 320 பேர் காயமுற்றனர். ஆயினும் அமைதிப் படையில் ஒரு கரம் கூட உயர்த்தப் படவில்லை. அஹிம்சை வெற்றிகரமாகச் செயல் பட்டது.

அது மட்டுமல்ல, வெப் மில்லர் என்ற அமெரிக்கப் பத்திரிகை நிருபர் மூலம் இந்த அஹிம்சைப் போரின் வெற்றி பற்றி உலகம் தெரிந்து கொண்டது. வெப் மில்லரின் எழுத்தை உலகெங்கிலுமுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட நாளிதழ்கள் வழக்கமாகப் பிரசுரித்து வந்தன. அவர் நேரில் கண்டு எழுதினார்:

''இன்னும் சில நிமிஷங்களில் நாம் அடித்து நொறுக்கப் படுவோம், ஒருவேளை இறக்கவும் கூட நேரிடலாம் என்று எல்லாருக்கும் தெரிந்திருந்தது. இருப்பினும் யாரிடமும் சஞ்சலம் அல்லது பயத்தின் அறிகுறியை நான் காணவில்லை. அவர்கள் அடித்து நொறுக்கிக் கீழே தள்ளப் படும்வரை அமைதியாக நடந்து முன்னேறினார்கள்.''

தொடர்ந்து இதை விடப் பெரிய படையெடுப்பு ஜூன் முதல் தேதி வடாலாவில் நடந்தது. 15,000 பேர் பங்கு பெற்றனர். அயல் நாட்டுத் துணி பகிஷ்கரிப்பு ஏறத்தாழ முழுமை பெற்றிருந்தது. பருத்தித் துணி இறக்குமதி முன்னிருந்ததில் கால் பாகமாக இப்போது குறைந்து விட்டிருந்தது. கதர் வியாபாரம் அறுபது சதவீதம் உயர்ந்திருந்தது. மாதர் படை திரண்டு மதுக்கடை மறியல் செய்ததில் மது விலக்குப் பணியும் பலப்பட்டிருந்தது.

இந்தப் புதிய சூழலில் வித்தல்பாய் பட்டேல் சட்டசபையில் தமது அக்கிராசனர் பதவியை ராஜினாமா செய்தார். லாகூரில் மகாத்மாவை எதிர்த்திருந்த மாளவியா, இப்போது, சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட உப்பைப் பகிரங்கமாகக் காசு கொடுத்து வாங்கினார்.

லண்டனிலிருந்த அயல்நாட்டுக் காரியதரிசிக்கு எழுதிய இர்வின் பிரபு இயக்கம் அடைந்திருந்த வளர்ச்சி தம்மை அதிசயத்தில் ஆழ்த்துவதாக ஒப்புக் கொண்டார்.



பிரிட்டிஷ் ஆட்சி பலமாக அடி வாங்கிக் கொண்டிருந்தது. எனினும் போராட்ட அரங்கிலிருந்து அது வெளியேறுவதாக இல்லை. எதிர்த் தாக்குதல் நடத்தியது. பெருவாரியாக மக்களைக் கைது செய்தல், தடியடிப் பிரயோகம் நடத்துதல், பத்திரிகைகளைத் தணிக்கை செய்தல், அவசரச் சட்டங்கள் மூலம் ஆட்சி நடத்துதல் ஆகிய முறைகளைக் கையாண்டது. ஏப்ரல் மத்தியிலிருந்து டிசம்பர் இறுதிக்குள் பத்து அவசரச் சட்டங்கள் இயற்றி இர்வின் ஆட்சி செய்தார். இதுபோல் ஒரு தான் தோன்றித் தனமான ஆட்சியை வேறு எந்த வைஸ்ராயும் அதற்கு முன் நடத்தியதில்லை.

ஜூன் மாதம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் காரியக் கமிட்டியும் சட்ட விரோதமானவை என அறிவிக்கப்பட்டன. அதற்கு அடுத்த மாதம் சமாதானத்துக்கு வாய்ப்பு

''வேறு எந்த நர்சிங் ஹோமிலும் இல்லாத ஒரு வசதி இங்கே உண்டு.''!
''என்ன டாக்டர்?''
''பக்கத்திலேயே எலெக்ட்ரிக் சுடுகாடு!''





உண்டா என்று இர்வின் ஆராய்ந்தார். லிபரல் கட்சிக் காரர்களான சப்ருவும் ஜெயகரும் தூதர்களாகச் செயல்பட்டனர். ஆனால் சிறையிலிருந்த காங்கிரஸ் செயலர்களுக்கு அவர்கள் எடுத்துச் சென்ற செய்தி போதிய அளவில் இருப்பதாக எண்ணப்படவில்லை.

இந்தியா மாறுதலடைந்து வந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்குச் சமதையான மற்றொரு அமைப்பு முன்வைதற்குச் சவாலாகவும் மாற்றாகவும் உருவாகி, வளர்ந்தும் வந்தது. சிறை புகத் தயாராயிருந்த மக்களின் வரிசைகள் முடிவில்லாமல் வளர்ந்து வந்தன. அவற்றுள் பெண்களின் வரிசைகள் இப்போது அதிகரித்தும் வந்தன. பம்பாய் போன்ற ஒரு நகரத்தில் இரு அரசுகள் இருந்தன. வர்த்தகர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பெரும் பான்மையினர், சட்டத்துக்குப் புறம்பான காங்கிரஸ் அமைப்புக்கே கீழ்ப்படிந்து நடந்தார்கள். காங்கிரஸ் ஹர்த்தால் என்று அறிவித்தால் சாலைகளில் மௌனம் நிலவியது.

குஜராத்தில் அண்மையில் விடுதலை பெற்றிருந்த வல்லபாய் பட்டேல் விவசாயிகளிடையே வரிகொடா இயக்கத்தைத்தலைமை தாங்கி வெற்றிகரமாக நடத்தினார். நில வரியைக் கொடுப்பதைக் காட்டிலும் தங்கள் கிராமத்தையே விட்டுவிட்டு மகாராஜாவின் ஆளுகையில் இருந்த பரோடாவில் தாற்காலிகக் குடியிருப்புக்களில் தங்குவதே மேல் என்று 80,000 பேர் கிளம்பினர்.

34. கல்வி கற்பித்த கைதி

திருச்சி மத்திய சிறைச்சாலையில் கைதி எண் 5557 ஆக வி. ஆர். மூன்று வாரங்கள் இருந்தார். ஒவ்வொரு நாளும் மாலை ஆறு மணிக்கு அவரை ஒரு சிறிய அறையில் வைத்துப் பூட்டி விடுவார்கள். இங்கே காற்றோட்டத்துக்கு இரண்டு அடிக்கு ஒரு அடி நீள அகலமுள்ள ஒரே ஒரு ஜன்னல் மட்டுமே உயரத்தில் இருந்தது. அதிலும் குறுக்குக் கம்பியும் கம்பி வலையும் பொருத்தப்பட்டிருந்தன. நியாயமான அளவு தமக்குக் கிடைக்க வேண்டிய காற்றும் தூக்கமும் பறிக்கப்பட்டு விட்டன என்பதாக வி. ஆருக்குத் தோன்றியது. திருச்சியிலிருந்து சென்னை சீர்திருத்தச் சிறைக் கூடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே இரு வாரங்கள் இருந்தார் வி. ஆர். பிறகு பெல்லாரி மத்திய சிறைச் சாலைக்கு மாற்றப் பட்டார்.

பெல்லாரியில் கோடைக் காலம் மிகவும் நீண்டது. ஆனால் வறுத்தெடுத்து விடும் உஷ்ணம். ஆனால் அங்கு வி. ஆர். இருந்த நாலு மாதங்கள் பயனுள்ள அம்சங்களையும் கொண்டிருந்தது. புத்திசாலிகளான இளம் சத்தியாக்கிரஹிகளிடையே அவர் இருந்தார். அவர்கள் கல்வி கற்பதில் ஆர்வமுடையவர்களாய் விளங்கினர். வி. ஆருக்குச் சொல்லித் தருவதில் சந்தோஷம். சிறைக் காப்பாளருக்குக் கனவான்களை எப்படி நடத்த வேண்டும் என்று தெரிந்திருந்தது, அதே நேரத்தில் விதிமுறைகளை மீறுமலிருக்கவும் தெரிந்திருந்தது. வி. ஆர்., வகுப்புக்கள் நடத்தவும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தவும் அவர் முழுச் - சுதந்திரம் அளித்தார்.

வி. ஆர். பல துறைகளில் பாடங்கள் நடத்தினார். எதைப் பற்றியெல்லாம் அவர் சொல்லித்தர வேண்டும் என்பதை அந்த இளைஞர்களே நிர்ணயித்தனர். பெரிய மனிதர்களின் வாழ்க்கை, மரங்கள், தேனீக்கள், நட்சத்திரங்கள், அணுக்கள், போல்ஷிவிஸம், தீண்டாமை, தேசியக்கடன் முதலிய பல அம்சங்களைக் குறித்து அவர் பேசினார். ஒரு மாணவர் அவர் கூறியதையெல்லாம் சுருக்கெழுத்தில் எழுதிக் கொண்டார். அவை 1931இல் நூல் வடிவில் Chats be kind bars என்ற தலைப்பில் பிரசுரமாயின.


உபாத்தியாயர் வி. ஆர்., நமக்கும் நட்சத்திரங்களுக்கும் இடையில் உள்ள தூரம் என்பது போன்ற ஒரு உப்புச்சப்பற்ற விஷயத்தைக் கூட மறக்க முடியாத சித்திரமாக்கி விடுவார்:


''ஒரு மங்கலான நட்சத்திரத்தை நீ பார்க்கும்போது இப்போது அங்கே என்ன இருக்கிறதோ, அதை நீ பார்க்கவில்லை. புத்தர் பிறப்பதற்கு முன்பு அங்கே என்ன இருந்ததோ அதைத்தான் நீ பார்க்கிறாய். இன்று நீ காணும் ஒளி அங்கிருந்து அப்போது புறப்பட்டதுதான். வியப்புடன் நோக்கும் உனது கண்களை வந்தடைய அதற்கு இவ்வளவு காலம் ஆகியிருக்கிறது. இந்தக் கால இடைவெளியில் புத்தர் காலம் தொடங்கி இந்தியாவின் சரித்திரமெல்லாம் நிகழ்ந்திருக்கிறது.''

மரங்கள் எப்படிப் பழங்களைத் தருகின்றன என்று அவர் சொன்னார்:

''அழகிய சிறிய பூச்சிகள், ஈக்கள், தேனீக்கள் எறும்புகள் எல்லாம் ஒரு மலரிலிருந்து இன்னொரு மலருக்குச் சாரத்தை எடுத்துச் செல்கின்றன. அதன் மூலம் மரங்கள் பழங்களைத் தருகின்றன. இந்தச் சிறிய பூச்சிகளை மலர்களின் எதிரிகளாக எண்ணுகிறீர்கள். அவை தாம் பூக்களின் திருமணத்தை நடத்தி வைக்கும் புரோகிதர்கள்!'' (தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்





பத்திரிகையில் வெளியானது ஒரு துணுக்கு: முகூர்த்தமா, கல்யாணமா? ''11.11.78 அன்றுதான் எத்தனை முகூர்த்தம்?'' என்று நண்பனிடம் கேட்டேன். ''முகூர்த்தம் ஒன்றுதான். கல்யாணங்கள்தான் நிறைய'' என்றான் நண்பன். எது சரி? முகூர்த்தமா? கல்யாணமா? யாராவது தெரிந்தவர்கள் சொல்வார்களா? — ஊத்துக்காடு கிருஷ்ணன்.

அடுத்த வாரம் அதைப்பற்றி ஆசிரியருக்குக் கடிதம்:

''முகூர்த்தம் நிறைய என்று சொல்வதுதான் சரி. ஏனென்றால் அன்றைய தினத்தில் காலை ஆறுமுதல் ஏழரை, எட்டுமுதல் ஒன்பதரை, ஒன்பது முதல் பத்தரை, பத்துமுதல் பத்தரை, பதினொன்று முதல் பன்னிரண்டு என்று நிறைய முகூர்த்தங்கள் உள்ளன. நிறைய முகூர்த்தங்கள் இருப்பதனால் தானே, நிறைய கல்யாணங்கள்? ஆகவே நிறைய முகூர்த்தம் என்பது தான் சரி.

— பரம்பிக் குளம் பொன்னுசாமி.

அதற்கு அடுத்த வாரம் ஆசிரியருக்குக் கடிதம்:

கல்யாணம் என்பதுதான் சரி. அன்றைய தினத்தில் எத்தனை கல்யாண சத்திரங்கள் நிரம்பி வழிகின்றன என்று பாருங்கள். ஆமாம், பொன்னுசாமிதான் எழுதினாரென்றால், உமக்கு மூளை எங்கே ஐயா போச்சு? அன்று ஒன்பது முதல் பத்தரை வரை சரியான எம கண்டமாயிற்றே. அந்நேரத்தில் யாராவது கல்யாணம் பண்ணுவார்களா? — எருக்கஞ்சேரி ஏகாம்பரம்.

அதற்கும் அடுத்த வாரம்: ஆசிரியருக்குக் கடிதம்:

அபத்தக் களஞ்சியமே, அட என் அழகே! 11.11.78 அன்று ஒன்பது முதல் பத்தரை மணிவரை எமகண்டமா? அட மேதாவி! ஒன்று யாராவது ஜோஸியரைக் கலந்தாலோசித்திருக்க வேண்டும்: இல்லையா, ஆபீஸில் பஞ்சாங்கமாவது வைத்திருக்க வேண்டும். இப்படி மழுங்கின மூளையோடு வேலை செய்கிறீரே! அந்த நேரத்தில் சரியான ராகு காலம் — தேனி ராமானுஜம்.


அதற்கும் அடுத்த வாரம்: ஆசிரியருக்குக் கடிதம்:

நானும் போனால் போகிறது, போனால் போகிறது என்று பார்த்துக் கொண்டே வருகிறேன். நாலு வாரமாக யார் யாரோ என்னவெல்லாமோ எழுதுகிறார்கள், நீங்களும் போட்டுக் கொண்டு வருகிறீர்களே? 11.11.78 அன்று ஒன்பது முதல் பத்தரை வரை எமகண்டமல்ல, ராகுகாலம், சரிதான். அன்றைக்கு ஏகப்பட்ட முகூர்த்தம், கல்யாணம் என்று கதை விடுகிறார்களே, அதை எப்படி ஐயா கூசாமல் பிரசுரித்தீர்? அன்றைக்குச் சனிக்கிழமை. யார் வீட்டில் கல்யாணம் நடந்திருக்கும்? — புரசைவாக்கம் பூபதி.

முடிவில்: (இத்துடன் இந்தப் பிரச்னை பற்றிய கடிதப் போக்குவரத்தை நிறுத்திக் கொள்ளுமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். — ஆர்.)

ஒரு கண்டிராவி!

— முத்து



நியூ பேங்க்

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு உதவுகிறது

விவசாயிகள், கைவினைஞர்கள், சுயமாக தொழில் செய்யும் என்ஜினியர்கள், டிரான்ஸ் போர்ட்டர்கள், சிறு தொழில் அதிபர்கள் போன்றோருக்கு நியூ பேங்க் தனது பல்வேறு கடன் திட்டங்கள் மூலம் உதவி வருகிறது. நடைமுறை சாத்தியமான திட்டம் உங்களிடம் இருப்பின் நியூ பேங்குக்கு வரவும். விவரங்களுக்கு அருகிலுள்ள எமது . கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.



நியூ பேங்க் ஆஃப் இந்தியா லிட்.

பதிவு பெற்ற அலுவலகம்:- 1, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி-110001

ஆர். சீனிவாசன்
ஜெனரல் மானேஜர்

டி. ஆர். கண்டோத்ரா
சேர்மேன்

Now adding

Na_2SO_4

to our famous range

CS_2
HCl
Cl_2
H_2SO_4
NaOH

CENTURY CHEMICALS

OFFER

Na_2SO_4, besides

CS_2, HCL, CL_2, H_2SO_4, NaOH

Chemicals Engineers all over India give first preference to CENTURY CHEMICALS products for consistent high quality and reliability. In most critical chemical processes when little allowance can be made, the first choice is CENTURY CHEMICALS products such as Carbon di Sulphide, Hydrochloric Acid, Chlorine, Sulphuric Acid, Sodium Hydroxide and now Sodium Sulphate.

Available in a variety of packings to suit individual customer requirements.

CENTURY CHEMICALS
(Prop: The Century Spg. & Mfg. Co. Ltd.)
Industry House, Churchgate Reclamation,
Bombay-400 020.

CONCEPT

மதுரை சோமு தமக்கு மிகவும் பிடித்த ஆறு ராகங்கள் பற்றிக் கூறுகிறார் :

தோடி : பதினேழாவது வயதில் பாடத்தொடங்கிய எனக்குத் திருவாவடுதுறை ராஜரத்தினம் நாதஸ்வரத்தின் மேல் உயிர். அவர் வாசிப்பைக் கேட்டதிலிருந்து தோடி மேல் எனக்குக் காதல் ஏற்பட்டது. ''எந்துகு துயராதுரா'' தியாகய்யர் கீர்த்தனை எனக்குப் பிடித்த பாடல்.

கல்யாணி : கல்யாணியை இழுத்து நிதானமாக அரியக்குடி பாடுவார். அதையே விறுவிறுப்பாகச் சங்கதிகள் பொழிந்து ஜி. என். பி. கொடுப்பார். அரியக்குடி விசுவநாத் என்றால், ஜி. என். பி. சுவாஸ்கர்! எனது கல்யாணி ராகப் பாட்டிலே இருவருமே தாங்கள் மயங்கியதாகக் கூறினார்கள். இதை எனக்குக் கிடைத்த பெரும் பாராட்டாகக் கருதுகிறேன். கல்யாணி ராக ''சிவே பாஹிமாம்'' பாடலைப் பாடும்போது அவ்விருவர் ஞாபகமும் மனத்திலே தோன்றும். கல்யாணி ராகத்தில் நானே இயற்றிய ''மாமதுரை மீனாட்சி'' பாடலைப் பாடும் சுகமே அலாதிதான்!

மணிரங்கு : எனது குரு சித்தூர் சுப்ரமண்ய பிள்ளை இந்த ராகத்தில் ஒரு எக்ஸ்பர்ட். நான் மாணவனாய் இருந்த போது தியாகய்யரின் ''ராநிதி ராது'' பாடலைப் பாடும்போது 'ராது' என உச்சரிக்க முடியாமல் 'ராந்' என்று பாடுவேன். வந்துவிடும் ஆசிரியருக்குக் கோபம். 'வீடா, அரங்கமா' என்று பார்க்க மாட்டார். குடுமி வைத்திருந்த என் தலையில் குட்டு வைத்து விடுவார்! சரியாகப் பாட வந்த பிறகு அவர் தமக்கென்று வந்த காப்பி யில் எனக்கும் கொஞ்சம் கொடுத்து அன்பை உணர்த்தியது மறக்க முடியாத நிகழ்ச்சி.''

6 X 6











காம்போதி: எனக்கு இந்த ராகத்தின் மேல் காதல் ஏற்படச் செய்தவர் வித்வான் கோனேரி ராஜபுரம் வைத்திய நாதய்யர். அவருடைய நண்பர் மன்னார்குடி ராஜகோபாலனிடம் சென்று வித்வானைப் போல மேல் ஸ்தாயியில் பாடிச் சாதகம் செய்து ராகத்தைப் பழகினேன். ஒருமுறை கும்பகோணம் மங்களாம்பிகை சந்நிதியில் காம்போதி ராகத்தை நான் ஆலாபனை செய்தபோது, மனத்தைப் பறிகொடுத்த பெண் தன் கழுத்திலிருந்த சங்கிலியைத் தன் கணவனிடம் கொடுத்து என்னிடம் தரச் சொன்னாள். என் கண்களில் நீர் திரண்டுவிட்டது. இச்சம்பவம் காம்போதி பாடும் போதெல்லாம் மனத்தில் நிழலாடும். சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய 'தாயே மீனாட்சி தனயன் வேலனுக்கு'' காம்போதி ராகப் பாடல் உயிர்.

மோகனம்: இந்த ராகத்தின் மேல் எனக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியவர், வேறு யார், மகாராஜபுரம் விசுவநாதய்யர்தான்! கோவை தியாக பிரும்ம உற்சவத்தில் அவர் பாடிய பஞ்சரத்னக் கீர்த்தனையை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தேன். நான் வேண்டுகோள் விடுத்ததால் அன்று மாலை என் கச்சேரிக்காக, மோகன ராகத்தில் அவர் ஒரு ஸ்லோகம் சொல்லித் தந்தார். அதைக் கச்சேரியில் பாடிப் பாராட்டுப் பெற்றேன்.

கரகரப்ரியா : நான் மாணவனாய் இருந்தபோது செம்மங்குடி சீனிவாசய்யரின் ''பக்கலநிலபடி'' கேட்டேன். பள்ளி ஆண்டு விழாவில் இதே பாடலைப் பாடி முதற் பரிசும் பெற்றேன். அவரிடமே பாடிக் காட்டினேன். வெகுவாகப் பாராட்டினார்.

ஒவ்வொரு முறை கரகரப்ரியா பாடும் போதும் செம்மங்குடியோடு ''பக்கல நிலபடி'' யும் ஞாபகம் வரும்! பேட்டி: ''**சிக்கி**''

True grit என்ற படத்துக்காக ஆஸ்கார் பரிசை 1969ம் வருடம் பெற்றவர் ஜான் வெயின். இவரது உண்மைப் பெயர் *Marion Michael Morrison*. சிறு வயதில் *Duke* என்று செல்லமாக அழைக்கப் பட்டார். டியூக் என்பது இவர் ஆசையோடு வளர்த்த நாயின் பெயர். அந்தப் பெயரே இவருக்கும் ஒட்டிக் கொண்டு விட்டது!

● உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது ஜான் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரராகவும் திகழ்ந்தார்.

● ஜானின் முதல் ஆசை, அமெரிக்காவின் கப்பல்படையில் ஓர் அதிகாரியாக வேண்டும் என்பதுதான்.

● இவர் சினிமாவில் நுழைந்தது துணை நடிகர் ஆகத்தான். பாக்ஸ் பிலிம் கார்ப்ப



"நான் விகாரமானவன்"

ரேஷனில் வேலை கிடைத்தது. சிறுசிறு பாத்திரங்களில் நடித்தார். இவர் முழுமையான ஒரு பாத்திரத்தில் நடித்தது *The Big Trail* (1930) என்ற படத்தில்தான். இப்படம் படுதோல்வி அடைந்தது.

● டியூக்' என்று அழைக்கப்பட்டு வந்தவருக்கு ஜான் வெயின் என்று பெயர் மாற்றம் செய்த பெருமை ''ரயோல் வால்ஷ்'' என்பவரையே சாரும். ரயோல், ஜானைப் பற்றிக் கூறும்போது: ''சினிமா உலகில் ஜானை நான் மூளை நிரம்பிய புத்திசாலி என்று கூற மாட்டேன். ஆனால் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் ஒருவன். நன்றி மறப்பவன் அல்ல. இவை இரண்டும் இந்தச் சினிமா உலகில் அரிதானது. தமது உழைப்பால் உயர்ந்தார்'' என்கிறார்.

● ''கௌபாய்'' வேடத்தில் நடிக்க ஜான் ஆரம்ப நாட்களில் பல மணி நேரம் கண்ணாடி முன்பு நின்று, நடை உடை, பாவனைகள், கைகளை அசைத்தல், துப்பாக்கி பிடிக்கும் முறை போன்றவற்றைப் பழகிக் கொண்டார். குதிரை ஏற்றம், கௌபாய் படங்களில் வரும் பார் அறைச் சண்டைகள் ஆகியவற்றை முறையாக அதில் சிறந்தவர்களிடம் கற்றுத் தேர்ந்தார். ஜான் தான் முதல் முறையாகப் படத்தில் பாடும் கௌபாயாக நடித்தார். பிறகு பாடுவதை விட்டுவிட்டார். காரணம் இவரை நேரில் பார்க்கும் போதெல்லாம் மக்கள் பாடச் சொல்லி வற்புறுத்தினர்.

● தமது நாட்டு மக்கள் சுதந்திரத்துக்காகப் போராடியதைப் படமாக்க மிகுந்த பிரயாசை கொண்டு, *The Alamo* என்ற படம் எடுத்தார். 12 லட்சம் டாலர் சொந்தப் பணத்தை இதில் போட்டார். படம் படுதோல்வி அடைந்தது. இது இவரது கலை உலக வாழ்வில் ஒரு பேரிடி.

● 1964ம் வருடம் ஜானுக்கு மார்வலி ஏற்பட்டது. இவர் நிறுத்தாமல் புகை பிடிப்பவர். மார்பில் புற்றுநோய் என்று கண்டு பிடிக்கப்பட்டது. இடது நுரையீரல் எடுக்கப் பட்டது. இதை ரகசியமாக வைத்திருங்கள், வெளியே தெரிந்தால் உங்கள் ''இமேஜ்'' பாதிக்கப் படலாம் என்றார்கள். ஆனால் ஜான் தமக்கு ஏற்பட்டது மற்றவர்களுக்கு ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தில் பத்திரிகைக் காரர்களை அழைத்து உண்மையை அறிவித்தார்.

● லட்சத்து எழுபத்தையாயிரம் டாலர் பெறுமானமுள்ள வீட்டில் வாழ்ந்த ஜான் மூன்றுமுறை திருமணம் செய்துகொண்டவர். ஏழு குழந்தைகள். ஒரு பெரிய கப்பலையே சொந்தமாக வைத்திருந்தவர். பெரிய மாட்டுப் பண்ணையை மூன்று இடங்களில் வைத்துள்ளார். பல்வேறு வகையில் பணத்தைப் பல இடங்களில் முதலீடும் செய்துள்ளவர். இந்த முதலீடுகளின் விளைவாக இவர் இழந்தது தான் அதிகம்.

● இருநூறு படங்களில் நடித்து அண்மையில் காலமான ஜான்வெயின் கோடிக்கணக்கில் சம்பாதித்தும் எப்பொழுதுமே இவருக்குப் பணத்தட்டுப்பாடு தானாம். தமது சண்டைக் 'காட்சிகளை 'டூப்' இன்றித் தாமே செய்வதையும் தாமே அமைப்பதையும் இவர் என்றும் விரும்புவார்.

● தம்மைப் பற்றித் தாமே கூறியது: வெயின் விகாரமானவன், பலசாலி, கண்ணியமானவன்!

● தமது 72வது வயதில் நடிப்புத் துறைக்கான அமெரிக்காவின் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

'அசோக்குமார்'.





திரு மொஹமத் அமீன் ஷெரீப்



மு. ராஜேஸ்வரன்

அதிக உணவு உட்கொள்ளாது, மிருதி யான தேகப்பயிற்சி செய்ய வேண்டும் என்பதைப் புத்தகம் வலியுறுத்து கிறது.

நடனக் கலைஞரான என் போன்றவர்கள் உடலை மிக ஜாக்கிரதையாகவும், சீரா கவும் வைத்துக் கொள்ள வேண்டும். எங்களைப் போன்ற வர்களுக்கு யோகாசனப் பயிற்சி மிக முக்கியமானது என்பது என் கருத்து. உடற்பயிற்சியால் பல வியாதி களைக் கட்டுப்படுத்தமுடியும் என்று சொல் வது எவ்வளவு உண்மை என்பது இதைப் படிப்பதிலிருந்து தெரிகிறது. வியாதி வராமல் எப்படித் தடுக்கலாம் என்று கூறும் டாக் டர்கள், ஒரு நோயாளி டாக்டரைக் கண்டு சிகிச்சை பெறு முன்னர், அவருக்கு முதலுதவி போன்று தரப்படக்கூடிய தாற்காலிக நிவா ரண முறைகளைச் சொல்லியிருக்கலாம். ஆனால் அதைப்பற்றிப் புத்தகத்தில் குறிப்பிட வில்லை.

நோயும் சிகிச்சையும் எழுதியவர்: ரா. பால கிருஷ்ணன் (பாணன்), வெளியீடு: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, விலை: ரூ. 5.



குமாரி பிருகா குருசுவாமி



திரு பாபு

நோயும் சிகிச்சையும்

சூளையில் வசிக்கும் பரத நாட்டியக் கலைஞர் குமாரி பிருகா குருசுவாமி:

● பரத நாட்டியத்தில் அதிக விருப்பமும் ஈடுபாடும் கொண்ட எனக்கு இந்தப் புத்தகத்தைப் பார்த்ததும் முதலில் பயமாகவே இருந்தது. படிக்க ஆரம்பித்ததும் சுவையான ஒரு நாவலைப் படிப்பது போன்று மகிழ்ச்சி ஏற்பட்டது.

மனிதனுக்கு வரக் கூடிய பலவகை வியாதி களை நாற்பத்தி மூன்று டாக்டர்கள் அலசி அழகாக விளக்கியுள்ளார்கள். கட்டுரைகளில் வியாதிகள் ஏற்படும் காரணமும் அவற்றைத் தடுக்கும் முறைகளும் கொடுக்கப் பட்டுள்ளன. சிகிச்சை முறைகளும் ஓரளவு விளக்கப்பட் டுள்ளன.

பெரியோர்களுக்கு வரும் நோய்கள் மட்டு மின்றி குழந்தைகள் அவதிப்படும் போலியோ, டிப்தீரியா போன்ற வியாதிகளும் அதனைத் தடுக்கும் முறைகளும் கட்டுரைகளில் கூறப் பட்டுள்ளன. குழந்தைகளை எவ்வளவு ஜாக் கிரதையாக வளர்க்க வேண்டும் என்றும் 'டிப்ஸ்' கொடுக்கப்பட்டுள்ளது.

ஜட்ஜ்மெண்ட்

சென்னை ஜார்ஜ் டவுனில் வசிக்கும் திரு பாபு. சிகை அலங்காரக் கலைஞர்:

● ஏற்கெனவே ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் வெளிவந்த இத் தொடரைக் கார்ட்டூன்களுடன் புத்தகமாக வழங்கியுள்ளார்கள். புத்தகம் விறுவிறுப்பாக உள்ளது. நேர்த்தியாகக் கலைநோக்குடன் உருவாகி, அச்சிடப்பட்டுள்ளது. இந்திரா காந்தியின் நெருக்கடி காலக் கொடுமைகளையும், சம்ப வங்களையும், அழகாக, ஆசிரியர் சொல்லியிருக்கிறார். வாசகர்களுக் குப் புரியும்படி எளிய நடையில் எழுதியுள்ளார்.

இந்திரா, தமக்கு ஏற்பட்ட மக்கள் செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்திச் சர்வாதிகாரியாக மாறிய விதத்தையும், சூழ்நிலை

நாலு பேரிடம் நாலு நூல்கள்

களையும் ஆசிரியர் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தனிநபரை வழிபடும் தவறான குணம் நம் மக்களிடையே இருப்பதால், அது ஒரு நபரிடம் ஆணவத்தை வளர்ப்பது மட்டுமல்லாது, அதன் விளைவாக நாடே குட்டிச்சுவராகப் போவதை ஆசிரியர் ஆதாரங்களோடு கூறியுள்ளார்.

சஞ்சய் காந்தி அரசியலிலே புகுந்தது. இந்திராவின் பக்க பலத்துடன் புரிந்த அநீதிகள் சுப்ரீம் கோர்ட் நீதிபதியின் தீர்ப்புக்குப் பணியாது இந்திரா காந்தி அதை முறியடிக்கச் செய்த சூழ்ச்சிகள் யாவும் படிக்க,ஒரு நாவலைப் போல இருக்கிறது. ஆனால் இது கதை அல்ல.

இதில் இந்திராவின் மீதுள்ள குற்றங்களைக் கூறுவதோடு, அவருடன் சம்பந்தப்பட்டிருந்த மற்ற அரசியல்வாதிகளின் சூழ்ச்சிகளையும் ஆசிரியர் அம்பலப்படுத்தி யிருந்தால் புத்தகம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

குல்தீப் நய்யார் எழுதிய ''ஜட்ஜ்மெண்ட்'' தமிழாக்கம்: சி. ஆர். கண்ணன், வெளியீடு: பத்மஜோதி பிரசுராலயம் 99, பவழக்காரத் தெரு. சென்னை—600001. விலை ரூ. 6

ஸ்ரீ ரமண வழி

சென்னை நந்தனம் கலைக் கல்லூரியின் ஓய்வு பெற்ற உருதுப் பேராசிரியர் திரு மொஹமத் அமீன் ஷெரீஃப்:

● ''இது அறிவு முதிர்ந்தவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய தத்துவங்கள் கொண்ட புத்தகம். துக்கமும் சுகமும் கலந்த இவ்வுலகில் இருந்து கொண்டே மனிதன் கடவுளை அடைய இந்நூல் நல்ல வழிகாட்டி.

எதிர்ப்புச் சக்திகளின் இணைப்பால் உலகம் அமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக மனமும் உடலும் தனித்தனியே இயங்க முடியாது. இரண்டும் சேர்ந்து அமைவதே வாழ்க்கையாகும்.

எவனொருவன் தன்னைத் தானே அறிந்து கொள்வானோ அவனே கடவுளை அறிந்தவனாவான், என்ற உண்மை தான் யார் என்பதை விளக்குகிறது. ஒரு பக்தர் கடவுளைக் கனவில் கண்டபோது கேட்டாராம், 'உங்களை அடையும் வழி என்ன?' அதற்குக் கடவுள் 'ஆசை பாசம் தவிர்க்க' என்றாராம்.

ஒருவர், பக்தரைக் கேட்டார். ''கடவுளை அடைய எவ்வளவு தூரம் செல்லவேண்டும்?'' என்று. அதற்கு பக்தர், ''இரண்டு அடி சென்றால் கடவுளை அடையலாம். ஆசை, பாசத்தைத் தவிர்ப்பது முதல் படி. இரண்டாவது கட்டுப்பாட்டை மேற்கொள்வதாகும்.''

கடவுள் ரூபமற்றவர். மனிதன் அவரால் வரையப்பட்ட சித்திரம். சக்தி ஒன்று ரூபங்கள் பலவாகும். அதுபோலச் செயலாளர் ஒருவர் செயல்படுவோர் பலர். மனிதன் கடவுள் அல்ல, கடவுளின் நிழல்.

மேற்கூறிய கருத்துக்களுக்குப் புத்தகத்தில் சிறப்பாக விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சாதாரண நாவல் படிப்பது போல் படிக்காமல் அறிவுப் பக்குவத்தோடு படித்தால் தான் இந்தத் தத்துவ விளக்கங்களை ருசிக்க முடியும். என்னை உண்மையிலே மிகவும் கவர்ந்த புத்தகம் இது. விலை ரொம்ப அதிகம்.

ஸ்ரீரமணவழி. இயற்றியவர்: ஸ்ரீசாது ஓம். திருவண்ணாமலை, வெளியீடு: ஸ்ரீரமண சன்மார்க்க சங்கம், 349, ஜாலன்யாங், பண்டமாரன்,கோலங்கிள்ளான்—மலேசியா. கிடைக்குமிடம்: ஸ்ரீரமண கேந்திரா, 1— சர். சி. பி. ராமசாமி ஐயர் ரோடு, சென்னை—18. விலை: ரூ. 16 -

''ஒரு கிராமத்து ராத்திரிகள்''

அம்பத்தூர் பெஸ்ட் அண்ட கிராம்ப்டன் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளி திரு மு. ராஜேஸ்வரன்:

● எப்போதுமே எந்தப் புத்தகத்தையும் ஒரே மூச்சில் படிக்கும் எனக்கு, இந்தப் புத்தகம் ஏமாற்றத்தை அளித்துள்ளது. விறுவிறுப்பான சம்பவமோ, அடுத்து என்ன நிகழும் என்ற சஸ்பென்ஸோ மருந்துக்குக்கூட இதில் இல்லை.


ஆசிரியரின் பல சிறுகதைகளின் தொகுப்பே இப்புத்தகம். கிராமத்துச் சூழ்நிலையையும், மக்களின் ஏழ்மை நிலையையும் ஆசிரியர் அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.


கோபுரங்கள் கதையில் வரும் விதவையான ஏழைத் தாயம்மா, தன் தங்கையின் மூன்று குழந்தைகள் பள்ளி மதிய உணவைப்பெற அவளிடம் அனுமதி கோரும்போது, சுயமரியாதையை மனத்தில் கொண்டு பிச்சைக்குச் சமம் என்று அனுமதி தர மறுப்பது சுவையான கட்டம். அவள் கோபுரமாகவே திகழ்கிறாள். கரிசலின் இரவுகள் கதையில் முதலிரவன்று கணவனைப் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலையில் மனைவியின் உணர்ச்சிகளை அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். வேறு சில கதைகளும் எனக்குப் பிடித்திருக்கின்றன.

ஆனால் அக்னிமூலை, அக்னி நட்சத்திரம், கிராமத்து ராத்திரிகள் ஆகிய கதைகளில் வரும் கதாபாத்திரங்களும்,அவர்களின் செயல்களை ஆசிரியர் எழுதிய விதமும் படிக்கவே அருவெறுப்பாக இருந்தது. எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அளவு வட்டாரத் தமிழ் கையாளப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்: பா. ஜெயப்பிரகாசம், வெளியீடு: கலைஞன் பதிப்பகம், 54, பாண்டி பஜார், சென்னை—600017, விலை: ரூ 6 -.

பேட்டி: ''சிக்கி.''







"கிடைத்த வாகனத்திலே கிளம்பு!"



வெண்ணெய் திரளும் போது தாழி உடைந்த கதையாகத் திருமணம் நடக்க ஏற்பாடு செய்யும் போது வில்லன் புகுந்து மணமகளைக் கடத்திச் சென்று விடுகிறான்!

இதை அறிந்த எல்லோரும் எப்படியாவது மணமகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையில் அவரவருக்குக் கிடைத்த வாகனத்தில் கிளம்புகிறார்கள். ஒருவர் யானையிலும், ஒருவர் ஒட்டகத்திலும், ஒருவர் குதிரையிலும், ஒருவர் சைக்கிளிலுமாகக் கிளம்பி மணமகளைக் கண்டுபிடித்துக் காப்பாற்றி விடுகின்றனர்!

''கல்யாண ராமன்'' என்ற தலைப்பில் மேடையேறிய நாடகம்தான் ''முயலுக்கு மூணுகால்'' என்ற திரைப்படமாக உருவாகி வருகிறது. குகநாதன் எழுதி இயக்கி வரும் இப்படம் முழுக்க முழுக்க ஒரு நகைச் சுவைப் படமாம். படங்களைப் பார்த்தாலே தெரியவில்லையோ?

— அசோக் குமார்







'முயலுக்கு மூன்று கால்' படத்தில் ஒட்டகத்தின் மேல் கருணிராஜன், கழுதை மேல் தங்கவேலு, சைக்கிளில் வி.கே. ராமசாமி, யானைமேல் வெண்ணிற ஆடை மூர்த்தி, குதிரை மேல் அசோகன், பூங்காவில் நிஷா, விஜயபாபு.

குளோஸ் அப்





ராதா ஜெயலக்ஷ்மி

தமிழ்நாட்டிலிருந்து முதன் முதலில் ஹிந்தியில் நீண்டநேர எல். பி. இசைத்தட்டுப் பதிவு செய்தவர்கள் என்ற பெருமை இவர்களுக்கு உண்டு.

சந்திரசேகர் பாண்டே இயற்றியவையும் மற்ற பஜன் பாடல்களும் அடங்கிய 'சத்திய சாயி பாபாபஜன்' இசைத்தட்டைப் புட்டபர்த்தியில் கடந்த நவம்பரில் தம் பிறந்த நாளன்று பாபாவே வெளியிட்டிருக்கிறார். ''பஜன் பினு'' என்று தொடங்கி பாபாவே விரும்பிப் பாடும் பாடலை, இந்த இசைத் தட்டுக்காக இவர்கள் பாடியுள்ளனர்.

இருபது ஆண்டுகளாய் இசைத் துறையில் புகழ்பெற்று விளங்கும் இவர்கள் அறிமுகமானபோது ''ஆர். பி. ராதா ஆர்: ஜெயலட்சுமி'' தான். ஆனால் பலர் இவர்களை ஸர் சி. பி. குடும்பத்தார் என்று கருதிக் குழம்பியதால், ''ராதா ஜெயலட்சுமி'' ஆனார்களாம்.

''பாபா பஜன், கீர்த்தி பஜன் இவற்றை வானொலி ஒலிபரப்புவதில்லை. எல்லா வகையான பக்திப் பாடல்களுக்கும் இடமளிக்கும் வானொலியில் இவற்றைத் தடை செய்கிறார்களே'' என்று இவர்கள் வருந்துகிறார்கள்.

டி. எஸ். பார்த்தசாரதி

ரயில்வே போர்டில் டைரக்டராக இருந்து ஓய்வுபெற்ற இவர் கர்நாடக சங்கீதத்தையும், சங்கீத சாஸ்திரத்தையும் கும்பகோணத்தில் கற்றுக் கொண்டார்.

கல்கத்தாவில், பணியாற்றியபோது இந்தி, வங்காளி, சமஸ்கிருத மொழிகளைக் கற்றுக் கொண்ட இவர், எங்கே வேலை பார்த்தாலும் அந்தப் பகுதியின் மொழியையும் மரபுகளையும் கற்றுக் கொண்டதுண்டு. இப்படி இவருக்கு மலையாளம், கன்னடம், தெலுங்கு உட்பட எட்டு மொழிகளில் புலமை உண்டு.

தியாகராஜரின் கீர்த்தனைகளைப்பற்றிச் சிறப்பாக ஆராய்ந்து இரண்டு நூல்கள் எழுதினார்.

திருவையாறு தியாகப் பிரம்ம சமாதியைச் சுற்றிப் பளிங்குக் கற்களில், தியாகராஜர் கீர்த்தனைகளைச் செதுக்கும் பணி இவருடைய பொறுப்பில் 1956இல் தொடங்கி எட்டு ஆண்டுகளில் நிறைவுற்றது.

தாகூர் நூற்றாண்டு விழாவின் போது ''ரவீந்திரர் நாடகத் திரட்டு'' என்னும் நூலைச் சாகித்திய அகாதமி இரண்டு தொகுதிகளில் வெளியிட்டது. தாகூரின் ஏழு நீண்ட நாடகங்களை வங்காளி மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்தவர் டி. எஸ். பார்த்தசாரதி.

தற்போது, சுநீத் குமார் சாட்டர்ஜி ஆங்கிலத்தில் எழுதிய ''ஜயதேவர்'' வரலாற்று நூலை சாகித்திய அகாதமிக்காகத் தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறார்.



என். வி. எஸ். மணியன்

ஏராளமான ஹரிஜனத் தொழிலாளர்கள் உட்படத் தமிழ்நாட்டில் மூன்று லட்சம் பேர் ஈடுபட்டுள்ள தோல் பதனிடல் — ஏற்றுமதித் தொழிலுக்கான மூலப் பொருள் பற்றாக்குறை மிகவும் அச்சுறுத்தும் அளவில் உள்ளது என்கிறார் என். வி. எஸ். மணியன். வெளி நாடுகளிலிருந்தேனும் தோல்களை இறக்குமதி செய்து வேலை கொடுக்க வேண்டிய நிலை உள்ளது என்று கூறும் இவர், கோழிப் பண்ணைகள் மாதிரி கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தித் தோல் உற்பத்திக்கு அரசு ஏதாவது செய்ய வேண்டும் என்கிறார்.

மாடுகளுக்குத் தார்க்குச்சி போடுவதும், அடையாளச் சூடு போடுவதும் தோலில் நிரந்தரமான வடுவை உண்டாக்கி அதன் விற்பனை மதிப்பைப் பாதியாய்க் குறைத்துவிடுகிறதாம். சீமைக் கருவேல முள் கீறினாலும் வலுவான சாட்டை அடி பட்டாலும் கூட ஆடு மாடுகளின் தோலில் அழிக்க முடியாமல் கீறல்கள் விழுந்து விடுகின்றனவாம்.

தம் தந்தையார் பெயரில் வி. என். சாரிடீஸ் என்கிற அமைப்பை ஏற்படுத்திப் பல துறைகளுக்குத் தொண்டு செய்கிறார் இவர். இலக்கியத் தரமான புத்தகங்களை வெளியிடும் இவருக்குத் தினமும் படுக்கைக்குத் தூங்கப் போகுமுன் ஒரு நல்ல புத்தகமாவது படிக்கும் பழக்கம் உண்டு.

டி. பி. நோயாளிகளுக்கான ஆர்தோ பெல்ட்டுகளையும், இளம்பிள்ளை வாதம் பாதித்த குழந்தைகளுக்கான காலணிகளையும் வி. என். சாரிடீஸ் இலவசமாக வழங்குகிறது.

- யெஸ்பால்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசியக் காசு